1782

M. 1803. Vol. II—No. 1.

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
...ப. முத்தையா & கோ., சென்னை.

MADRAS

ஜL
ஜதா', N23டபி.
N24.2.1.
21234

குஞ்சம் கட்டின
பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளை பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது
பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,
188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை.

அமிர்தாஞ்சனம்.

அ
மி
ர்
தா
ஞ்
ச
ன்

அ
மி
ர்
தா
ஞ்
ச
ன்

இருபத்தைந்து வருஷமாக லக்ஷக்கணக்காக விற்று வருகிறது. அபூர்வ மூலிகைகளில்ஞு தயார் செய்யப்பட்டு அழகாய் பாக் செய்து, உபயோகத்துக்குத் தயாராயிருக்கிறது.

எல்லா நோவுகளுக்கும்,

ஒரு கைகண்ட அவுஷதம் அமிர்தாஞ்சனமே தலைவலி, முதுகுவலி, கீழ் பிடிப்பு முதலிய எல்லா நோவுகளையும் நொடிப் பொழுதில் தீர்க்கும்.

உடனே முந்துங்கள், அணா பத்து தான்.

அமிர்தாஞ்சன் டிபோ,
பம்பாய்,
7, தம்புசெட்டி வீதி, சென்னை.

ஒரு வருஷப் பலன்.

பெயரையும் கடிதம் எழுதும் நேரத்தையும் சொந்தக் கையெழுத்தா லெழுதி யனுப்புவோருக்கு இன்னும் ஒருவருட காலத்திற்கு என்னென்ன நடக்கு மென்பதை சரியாக குறித்து அனுப்பப்படும். விலை ரூபா ஒன்றுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். பரிட்சித்துப் பார்த்தவர்கள் பலர் ஆச்சரியப்பட் டிருக்கிறார்கள். வி. பி. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

ராவ் நாயுடு,

சௌக்கார்பேட்டை, சென்னை.

குறைந்த விலை! உயர்ந்த நாவல்கள்!!

"நவீனகம்"

ஒரு மாதாந்தர நாவல் சஞ்சிகை.

1923ஞு நவம்பர்மீ முதல் வெளி வந்துகொண்டு இருக்கிறது. இதில் ஒவ்வொரு இனிய நாவல் பிரதி மாதமும் தொடர்ச்சியாகவரும். இப்போது முதல் கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. அவர்களால் எழுதப்பட்ட ஜஸ்வந்தஸிங் என்னும் நாவல் வெளிவரும். இச்சஞ்சிகை கிரௌன் 48-பக்கங்கள் கொண்டது. வருஷ சந்தா (ரூ. 1—0—0) ரூபாய் ஒன்று தான். அடியில் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி சஞ்சிகையை வி. பி. யிலோ, முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பு:—முன் பணம் அனுப்பினால் ரூபாய் ஒன்றும் மணியார்டர் கமிஷன் 2 அணா வாகும்.

வி. பி. யில் ரூபா 1—4—0 ஆகும்

வெளி நாட்டிற்கு ரூபா 1—8—0.

தி. இராஜேஸ்வரம் & பிரதர்ஸ்,

சாமிதெரு, ஆலந்தூர், பரங்கிமலை.

வேல் முருகன்.

"கிள்ளை மொழி யுமையாள் கேண்மை மிகு மிளைய
பிள்ளை திருவடியே பேண்."

கலியுக வரதனாய் விளங்கும் வெற்றிவேற் கடவுள் திருவுருவம் அவன்பால் அன்புடைய அன்பர்கள் இல்லந்தோறும் பூஜித்தற்குறிய சிறப்புடையதென்பது யாவரும் அறிந்ததே. நாம் தயாரித்துள்ள இம்முருக மூர்த்தம் அருள் சுரந்து எமது கனவில் தோன்றி காட்சியளித்ததாகும். தாமின்புறுகிறபடி உலகமும் இன்புறவேண்டுவது நல்லோர் கருத்தானதால் அம்முறைபற்றி அன்பர்கள் அக்கோலமயிலின் வேலனது மாலனைய ரூபத்தை இன்றே எமக்கெழுதி ஒரு பிரதிபெற்று தக்கவிடத்தில் எழுந்தருளச் செய்து ஆராதித்து இஷ்ட சித்திபெற்று இன்புறுவாராக.

அறுமுகன்பால் அன்புள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் சுகுமாரமுள்ள இத்திருவுருவம் இருக்கவேண்டுவதே. மேற்கண்ட திருவுருவப்படம் போட்டகிராபில் அழகான பாடர் மத்தியில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

தனிப்பிரதி விலை ரூபா **1.**

லக்ஷ்மி சந்தாதாரர்களுக்கு அணா **12.**

சர்மா சகோதரர்,
வேப்பேரி, சென்னை.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் எழுதிய

புதிய நாவல்கள்

லோகநாயகி

அல்லது

அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும் பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும் அக்கிரமஸ்தரும், நம்பினவர்களை துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்தி சாதுர்யமான நடக்கைகளும், துப்பறிபவளது சாமர்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்றாக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய்விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் துப்பறிபவன் எடுத்தளிக்கும் சாமர்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். இதில் சம்பந்தப்பட்டிருக்கும் ஆட்களில் ஒவ்வொருவர் நடக்கையும் உற்று நோக்குபவர்களுக்கு நல்ல நீதிகளைக் கற்பிக்கும். விலை ரூ. 1—0—0.

	ரூ.	அ.
விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக் கொலை ...	1	6
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	1	12

பவளத்தீவு 2-பாகம்	3	0	கமல சேகரன்	1	12
தபால்கொள்ளைகாரர்கள்	0	14	தினகர சுந்தரி	1	0
இந்திராபாய்	2	8	ரத்னபுரிரகசியம்2-பாகம்	4	0
அமராவதி 2-பாகம்	4	0	மதனபூஷணம்	1	0
மஞ்சள் அறையின்மர்மம்	1	8	சுவர்ணாம்பாள்	0	12
கற்கோட்டை	2	0	தேவசுந்தரி	1	4
பூங்கோதை	0	10	குணசுந்தரன்	0	12
வீரநாதன்	0	12	பத்மாஸனி	0	14
கனக பூஷணம் 2-பாகம்	3	8	ஆனந்தஸிங்	2	0
சகோதர வாஞ்சை	0	6	மின்சார மாயவன்	1	8

மானேஜர் :—

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

1-6, வெங்கடேச மேஸ்திரி தெருவு,

சவுகார்பேட்டை, மதராஸ்.

நாடு நீங்கிய ஸ்ரீமூல பூபதி, திருவிதாங்கூர் மகாராஜா.

ஓம்

லக்ஷ்மி

29 SEP 1924

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ. | ரக்தாட்சிஃஸு ஆவணிமீ 1924 ஆகஸ்டு | இதழ் க

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	I
2.	நமது இரண்டாவதாண்டு	II
3.	மனிதனும் அழகும்	1
4.	பெண்களின் உயர்வு	11
5.	கதிர் காமம்	15
6.	குதிரைகள் புலம்பல்	18
7.	தீண்டாமை ஒழித்தலுக்கு பண்டைய ஆதரவு	21
8.	கைத்தொழில்	27
9.	லீலாவதி	30
10.	வியாதிகளின் காரணங்கள்	39
11.	பராசக்தி	46
12.	சிவ ஸ்தலங்கள்	47
13.	நாடு நீங்கிய ஸ்ரீமூல பூபதி	49
14.	மதிப்புரை	51
15.	விசேஷக் குறிப்புகள்	52

சித்திரப் படங்கள்.

1. நாடு நீங்கிய ஸ்ரீ மூல பூபதி, திருவிதாங்கூர் மகாராஜா.
2. சென்னையில் மொஹரம் பண்டிகைக் கொண்டாட்டம்.

10341
சென்னை-600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட

இந்தியா, பர்மா, சிலோன்	ரூ.	2	0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ.	2	8
உயர்ந்த பதிப்பு (Art Paper)	ரூ.	10	0

தனிப்பிரதி அணா 4.

ஜவாஹிருல் புர்:கான்

جواهر الفرقان في ترجمة القرآن

(குர் ஆன் ஷரீபின் தமிழ் மொழி பெயர்ப்பும் அதன் விரிவான வியாக்கியானமும் ஒருங்கே கூடியது.)

இதுவரை 1000 பிரதிகள் விலையாய் விட்டன.

இன்னும் சில பிரதிகளே எஞ்சியிருக்கின்றன. இன்றே எழுதுங்கள் ! ஏமாந்து போகவேண்டாம் !!

160 பக்கங்களுள்ள முதல் வெளியீட்டின் கிரயம் ரூ. 1-8-0.

"தாருல் இஸ்லாம் ஆபீஸ்,"
தபால் பெட்டி நே. 15, சென்னை.

தாருல் இஸ்லாம்.

இஃது இனிய தமிழில் உயர்ந்த நடையில் அதிரஸத்துடன் ஆனந்தமயமாய் எழுதப்பட்ட அநேக அருமையான வியாசங்களையுடையது. தமிழ் நாட்டுச் சோதர சோதரிகளுக்குத் தக்க அறிவை யூட்டுவது. இஸ்லாத்தின் உயரிய தன்மையை உரைத்து விளக்குவது. ஸமரஸ நோக்கங்கொண்டது. இஸ்லாத்தின் ராஜீய தேசிய ஞானத்தை எடுத்துணர்த்துவது. தமிழ் மொழி வளர்ச்சியில் மிக ஊக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 3. வெளி நாட்டுக்கு ரூ. 4.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ், தபாற் பெட்டி 15, மதராஸ்.

ஆர்மோனியா சாதா சுருதிப் பெட்டிகள்.

எங்கள் கம்பெனியில் எவ்விதமான ஆர்மோனியங்களும் சங்கீத அப்பியாசம் செய்யும் புஸ்தகங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.



3 சுரம்	சுருதிப் பெட்டி 1-க்கு ரூ.	7
5 சுரம்	,,	9
7 சுரம்	,,	10
9 சுரம்	,,	12
13 சுரம்	,,	13

வி. பீ. சங்கரம் & கோ., 211, தங்கசாலை தெருவு, மதராஸ்.

ஓம்

29 SEP 1924

லக்ஷ்மி துதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
நாவும் செழுங் கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர்
நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் திருவே யுன்பாதம்
அடைக்கலமே!

நமது இரண்டாவதாண்டு

பரம்பொருளின் திருவருளால் நமது 'லக்ஷ்மியின்' இரண்டாவதாண்டு இன்று ஆரம்ப மாகின்றது.

'லக்ஷ்மியி'ன் முதல் ஸஞ்சிகையில் கூறியவாறு "நாட்டின் நன்மைக்குரிய சகல துறைகளிலும் (நம சக்திக்கியன்ற வாறு) பாடு பட்டே" வருகிறோம். தமிழ் நாட்டின் கல்விப் பெருக்குக்கும் செல்லப் பெருக்குக்கும் துணையான பல வியாசங்கள் நமது 'லக்ஷ்மி' யில் மாதந்தோறும் வெளி வந்துகொண்டே இருக்கின்றன. நம் நோக்கத்திற்கிணங்க வியாசங்கள் வழங்கி உதவி புரியும் அறிஞர்களுக்கெல்லாம் நம் நன்றியறிதலை மிக மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். தமிழ்நாட்டில் படிப்பாளிகள் பலர் இருந்தும் தேச நன்மையின் பொருட்டும் மொழி வளர்ச்சிக்காகவும் உழைக்க முன்வருகின்றார்களில்லை. உலகத்தை உருப் படுத்துவது அறிஞரேயாம்; ஆகவே ஒரு தேசத்தின் முன்னேற்றம் அறிவாளிகள் உழைப்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. குமரன் ஆசிரியரவர்கள் கூறுகிறதுபோலவே "பல அறிவாளிகள் சோம்பர்வாய்ப்பட்டு நிற்கின்றனர். நல்ல உழைப்பாளிகள் வியாசமெழுதவும் அவகாசமின்றி வேலைகளை மேற்போட்டுக்கொண்டுக் கஷ்டப்படுகின்றனர்."

சிலர் தேச முன்னேற்றத்துக்கும் மொழிவளர்ச்சிக்கும் இன்றியமையாத விஷயங்கள் இன்னின்னவை யென்றறியாமலே பழம் பாட்டுப்பாடி வீண்பொழுது போக்குகின்றனர். ஆகவே நமது நோக்கத்துக்குப் பொருத்தமான கட்டுரைகள் கிடைப்பது வெகு சிரமமாகவே இருக்கின்றது.

எனினும், இவ்வருஷத்தில் பல எழுத்தாளர்கள் நமக்கு வியாசங்கள் உதவுவதாக வாக்களித்துள்ளனர். ஆகவே இரண்டாவதாண்டில் 'லக்ஷ்மி' முன்னையவிட உயரிய வியாசங்கள் அணிந்து வெளி வருவாள் என்பது திண்ணம்.

நாம் எதிர்பார்த்ததினும் அதிகமாகத் தமிழ்மக்கள் நமது லக்ஷ்மியை ஆதரித்துவருவது நமக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கின்றது. அன்னோர்க்கும் இத்தருணத்தில் நமது நன்றியதலை உரிமைப்படுத்துகிறோம். சிங்கப்பூர், மலாய்நாடு, தென் ஆப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளிலுள்ள தமிழர்கள் நமது 'லக்ஷ்மி'யின் பால் கொண்டுள்ள பற்று மிகவும் பாராட்டத்தக்கதே. வயிற்றின் கொடுமையால் திரைகடலோடி அந்நிய நாடுகளில் வாழநேர்ந்தும் தம் தாய் மொழியாகிய தமிழை அச்சீரியோர் மறந்தபாடில்லை; தாய்ப் பாலை மறப்பினும் தமிழர் தேனினும் பாகினும் தெள்ளமுதினும் இனிய தமிழை மறப்பரோ! தமிழ்வாழ்க! தமிழர் வாழ்க!! தமிழகம் வாழ்க!!!

இவ்வருஷம் முதல் முன்னிலும் அதிகமாகச் சித்திரப்படங்கள் சேர்க்க ஏற்பாடுசெய்து வருகிறோம். தமிழகத்தார் 'லக்ஷ்மி'யை மிகுதியும் ஆதரித்து நமக்கு முயற்சியூட்ட முன் வருவார்களாக!

பத்திராதிபர்.

மனிதனும் அழகும்

ஸ்ரீமாந் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதியது.

மனிதன் எவன்? அழகு எது? மனிதனுக்கும் அழகுக்குமுள்ள தொடர்பு என்னை? இம் மூன்றையுஞ் சிறிது ஆராய்வோம். மனிதன் எவன் என்பதற்குப் புலவர் பலவாறு கூறுவர். மனிதன் எவன் என்பதை ஈண்டு அழகுடன் பொருத்தியே சிந்தித்தல் வேண்டும். வேறு முறைபற்றி அதை ஈண்டு ஆராய வேண்டுவ தில்லை.

மனிதன் அழகின் நுண்மையைப் புலப்படுத்தவும், அழகின் இன்பத்தை நுகரவும் ஆண்டவனால் படைக்கப் பட்ட உயரிய உயிர்ப் பொருளாவன். அழகின் அருமையை உணரவும் உணர்த்தவும் மனிதப் பிறவி யின்றியமையாதது. மனிதப் பிறவி தாங்கிய ஒருவன் எல்லாச் செல்வமும் பெற்றும் அழகொன்றைப் பெறானாயின், அவன் பிறவியினாலாய பயனைப்பெறாதவனாவன். அழகுக் கெனவே மனிதன் படைக்கப்பட்டான் என்று கூறுவது மிகையாகாது. மனிதன் ஆண்டவன் சாயலாகப் படைக்கப் பட்டான் என்று விவலிய வேதங் கூறுகிறது. அதன் பொருளென்னை? மனிதன் அழகின் சாயலாகப் படைக்கப் பட்டான் என்று சொல்லலாம். அழகினின்றுந் தோன்றிய மனிதன் அழகிடையே வளர்கிறான். அழகிடை வளர்ந்துவரும் அவன், இடையிடை அழகை மறந்து, அழகைக் குலைக்குந் துறைகளில் வீழ்ந்து ஆடுகிறான். அதனால் அவன் அழகிழந்து தானடைய வேண்டிய பேற்றை யிழக்கின்றான். வாழ்வுக்கு இன்றியமையாத அழகைக் காவாது குலைப்பவனை மனிதனென்று எவ்வாறு கூறுவது? ஆகவே, அழகைக் காத்து, அழகனாய் வாழ்வோனே மனிதனாவன். மற்றையோன் எவனோ?

அழகு எது என்பதைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். இதைப் பற்றிப் பலர் பலவாறு கூறியுள்ளார். முதலாவது

அழகு ஒரு பொருளா என்பது கவனிக்கற் பாற்று. அழகு ஒரு பொருளே. ஆனால் அது பருப்பொருளன்று; நுண் பொருள். உலகில் 'இஃது அழகா யிருக்கிறது; அஃது அழகா யிருக்கிறது' என்று மக்கள் பேசுகிறார்கள். அவர் கள் அழகை யுணர்ந்து பேசுகிறார்களா உணராது பேசு கிறார்களா எனில் உணராத ஒன்றைப்பற்றிப் பேசுவது எது? காணும ஒன்றைப் பற்றியே, உணரக்கூடிய ஒன் றைப் பற்றியே மக்கள் பேசுவார்கள். அழகு காணக்கிடப் பதே; உணரக் கிடப்பதே; ஆனால் காட்சிக்கும் உணர்வுக் கும் புலனாகும் அழகு எது என்றால், சொல்ல இயலவில்லை. சொலற்கரிதா யுள்ள அழகோ நாறுபக்கமும் நிலவுகிறது. திங்களில் அழுகு ஒழுகுகிறது. பூக்களில் அழகு பொலி கிறது. பறவைகளின் அழகை என்னென்று பகர்வது? பரந்த கடலின் அழகை என்னென்று பன்னுவது? மக ளிரோ அழகு மயமாய்த் திகழ்கிறார்; குழவிகளோ அழ கின் பிழம்பா யிலங்குகின்றன. பாக்களின் அழகென்ன! பண்களின் அழகென்ன! நாறுபக்கங்களிலும் அழகைக் காண்கிறோம். ஆனால் அழகு எத்தகைத்து எனில் சொல்ல முடியவில்லை. அழகின் பெற்றியென்னே! என்னே! அழ கின் பெற்றி யுணர்ந்தே பண்டைக்கால கிரேக்கர்களும், தமிழர்களும் அழகைக் கடவுளாகக் கொண்டார்கள் போலும்!

அழகுள்ள இடம் இளமை என்று சிலர் கூறுப; கொழுமை யென்று சிலர் கூறுப; வளமென்று சிலர் கூறுப; அன்புள்ள விடத்திலும் இன்புள்ள விடத்திலும் அழ குறையு மென்று சிலர் சொல்வர்; அழகு அகப்பொலிவின் எழுச்சி யென்றும், ஆன்மாவின் தூய்மைக் கிளர்ச்சி யென்றுஞ் சிலர் சொல்வர்; சிலர், பலவினீட்ட ஒற்றுமை இசையில் அழகிருக்கிறதென்று கூறுவர்; சிலர் அழகு யாண்டும் பரவி யிருப்பதென்றும், செழுமை செறியுமிடத் தில் அது தன்னைப் புலப்படுத்து மென்றும், வறட்சி யுற்ற விடத்தில் மறைவதென்றுங் கூறுவர்; சிலர் அழகுடைப் பொருள் சிற்சிலவே யென்பர்; சிலர் மனமே அழகுக்குக் காரணமென்பர்; இன்னும் பலவாறு கூறுவோருமுளர். பலபடப் பலரால் பேசப்படும் அழகு எது? அழகு கண்ணைக் கவர்கிறது? மனதைக் கவர்கிறது; பாட்டாக

நிற்கிறது. அதைப் பாடலாம். பாட்டு எது? இயற்கை யன்றோ? இயற்கையின் வடிவன்றோ அழகு? செயற்கை யல்லாதன வெல்லாம் அழகு என்று சுருங்கக் கூறலாம்.

இப்பெற்றித் தாய அழகுக்கும் மனிதனுக்கு முள்ள தொடர்பென்னை? மனிதன் பிறக்கிறான்; வளர்கிறான்; இறக்கிறான். மனிதனைப் பிறப்பிப்பது அழகு; அவனை வளர்ப்பது அழகு; அவனைக் கொல்வது அழகோ? அன்று! அன்று! மனிதன் அழகை மறந்தகாலமே அவனது அழிவு காலம். அழகு மனிதனை மறப்பதில்லை; மனிதனே அதை மறந்து மாள்கிறான். அழகைப்பெற மனிதனுக்குப் பொருள் வேண்டுவதில்லை; பொருளின்றிப் பெறும் பொருளைப் பெற முயலாது சாகும் மனிதன் அறியாமை என்னே! என்னே!

மனிதன் தன்பால் அழகு என்றும் நிலவும் வழி தன் வாழ்வை நடாத்துவானாயின், அவன் என்றும் அழகியனாய் வாழ்வன். என்றும் அழகுடையனாய் வாழ எண்ணாத மனிதனிரான். எல்லோரும் என்றும் அழகுடையவராக வாழவே எண்ணுகிறார். எண்ணுவதால் என்ன பயன்? எண்ணியவாறு ஒழுகப் பயிலல் வேண்டும். ஒழுகுவோர் எத்துணை பேர்?

மனிதன் முதலாவது கை புனைந்தியற்றா இயற்கையில் அழகுண்மையையும் செயற்கையில் அழகின்மையையும் நன்கு உணரல் வேண்டும். இதை ஆய்ந்து உண்மை தெளிவது மனிதன் முதற்கடமை என்றுங் கூறலாம். இம் முதற் கடமையால் மனிதன் தன் உடலின் அருமையை உணரப் பெறுகிறான். அவ்வருமை யுணர்ந்த பின்னர் அதனை ஓம்ப முயல்வான். உடலை முறைப்படி ஓம்பும் ஒருவன் என்றும் அழகியனாயிருப்பது திண்ணம். ஒருவன் தோலைப் பார்த்து அவனது அழகை அளந்து கூறுவது மடவோர் கூற்றாம். அழகென்பது தோலில் நிறத்திலிருப்பதன்று. (இதுகிடக்க.)

மனிதன் உடலைப்பெரிதும் போற்றல் வேண்டும். உடலைப் போற்றாத ஒருவன் ஆண்டவனைப் போற்றாதவனாவன். உடல் எது? ஆண்டவன் இயற்கைக் கோயிலன்றோ? கல்லாலும் மண்ணாலும் செய்யப்பெற்ற கட்

டிடமோ ஆண்டவன் கோயில்? ஆண்டவன் கோயிலாக உள்ள உடலைப் போற்ருதார் என்ன பாவத்துக்குள்ளாவரோ?

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

என வரூஉந் திருமூலர் திருவாக்கை யோர்க. இவ்வாறு எல்லா நாட்டிலுந் தோன்றிய அறிஞர் பலருங் கூறியுள்ளார். அதை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

உடலோம்பினால் அழகு செறியுமோ என்று சிலர் வினவலாம். அழகு மனிதன் தசையின் செழுமைக்கண் திகழ்வது. தசை வளத்திற்கு இரத்தவோட்டமும் தூய்மையும் இன்றி யமையாதன. இவ்விரண்டும் மனிதன் உறைவிடம் உடை உணவு ஒழுக்கம் முதலிய வற்றைப் பற்றி நிற்கின்றன. ஆதலால் மனிதன் உறைவிடம் உடை உணவு ஒழுக்கம் முதலியவற்றின் மீது பெருங்கவலை செலுத்தல் வேண்டும். இவைகளைப் பற்றி எழுதப்பட்டுள்ள நூல்கள் பல; பல. தமிழ் மொழியிலுஞ் சில நூல்கள் எழுதப் பட் டிருக்கின்றன. உடல் வளம் சுருங்கியுள்ள யானும் சென்ற இரண்டாண்டாகப் பன்னூல்கள் பயின்று வருகிறேன். தமிழ்நாட்டுக் கேற்றபடி ஒரு நூல் எழுதவேண்டு மென்னும் அவா எனக்குண்டு. உடலோம்பு முறைகளை விரித்துக்கூற இக்கட்டுரை இடந் தராது. ஆயினும் சில உரைகள் பகர்கிறேன்.

மனிதன் வதியவேண்டிய இடத்தைப்பற்றி இந்திய மக்களுக்கு விரித்துக்கூற வேண்டுவதில்லை. கிராம வாழ்வை நினைவூட்டினால் போதும். கிராமங்களினின்று திரண்டு வயிறு வளர்க்க நகரங்களில் குழுமும் மக்கள் நிலை பரிதபிக்கத் தக்கதே. ஒரு தொழிற்சாலையில் எத்துணைபேர் வேலை செய்கிருர்? ஒரு வீட்டில் எத்தனை பேர் குடியிருக்

கிறர்? ஒரு தெருவில் உறைவோர் தொகை எவ்வளவு? இந்நெருக்க மிக்க நகரங்களில் வாழ்வோர் உடல் வளம் எவ்வாறு நலமுறும்? சாக்கடை நாற்றமும், மலசலப் பெருக்கும், பிறவும் மக்கள் செழுமை குலேத்து அவர்களைப் பல நோய் வாய்ப்படச் செய்கின்றன. நகரத்தில் நோய் வாய்ப் படாதார் அரியர். அந்நகரில் வாழ்வோர் பால் அழகு அரும்புமோ?

உடை நாட்டின் இயற்கை வளத்துக் கேற்றவாறு அணியப்படல் வேண்டும். பழைய நாட்டு உடை நமது நாட்டு இயற்கைக் கேற்றது. குளிர்நாட்டில் வதிவோர் அணியுமாறு உடை தரித்தல் உடல் நலத்தைக் கெடுப்ப தாகும். வெயில் வேளையில் மேல்நாட்டு முறைப்படி உடை அணியும் பெரியோர் படும்பாடு சொல்லுந் தகைய தன்று. ஆண்டவனருளால் ஞாயிற்ருெளி நமது நாட்டில் நன்ருக வீசுகிறது. அவ்வொளியில் ஒருவித உணவு உண்டு. மூவகை ஸ்நானங்களுள் சூரிய ஸ்நானமு மொன்று. ஞாயிற்ருெளி படத் தொழில் புரியும் ஒருவன் முகத்திலுள்ள இயற்கை அழகு, மின்சார விசிறிக் கீழிருந்து வேலே செய்யும் ஒருவனுக்கில்லே யென்பது வெளிப்படை. அதனுல் பின்னவன் செயற்கை அழகு செய்துகொள்ள விரும்புகிறுன். நாட்டுக்கேற்ற உடையை நாடோறும் தோய்த்து உலர்த்தி அணிதல் நலம். பலதிறக்கட்டுகள் போல் உடைகளேக் கட்டிக்கொள்வது இரத்த வோட்டத்துக்கு இடர் விளேத்து அழகைக் குலேக்குமென்பதில் ஐயமில்லே.

மனிதன் உணவுக்கேற்றவாறு அவனது அழகு பரிண மிக்கும். அழகு விரும்பும் ஒருவன் பெரிதும் பழ உணவுகளே அருந்தல் வேண்டும். பழ உணவு ஒருவேளேயுண்டு நன்னீரருந்தி, நறுங்காற்றுப் பருகி, ஞாயிற்ருெளி மருவ வாழ்பவன் என்றும் அழகியனு:யிருப்பன். காரம் புளி கலந்த உணவும் மனிதன் உடல் வளத்தைச் சுருக்குவனவாம். காரமும் புளியும் ஜீரண கருவிகளின் ஆற்றலேக் குறைக்கின்றன. புலால் உணவு மனிதன் இயல்பைக் கெடுக்கிறது. இதனுல் மனிதன் இரத்தம் வெந்து நஞ்சாகி அவன் உடல் வளத்தைக் கெடுத்து அழகை யழிக்கிறது. மனிதன் ஒருவேளே பழவுணவு கொள்ளுதல் நலம். வேறு

உணவு கொள்வோர் இருவேளை உண்ணலாம். இருவேளைக்கு மேல் சாப்பிடுவோ ருடலில் நோய் குடிகொள்ளும். நோயுள்ள உடலில் அழகேறல் அரிது. மனிதன் எவ்வித உணவுகொள்ளினும் அதை நன்ருக மென்று மென்று உமிழ் நீரோடு கலப்பித்து உட்கொள்ளல் வேண்டும். மெல்லாது உணவை விழுங்குவோர் நீண்டநாளிரார்; இருக்கும் வரை சுழுமுனையின் வலிகுன்றி, நோயாளராக விருப்பர். மனிதன் அழகிற்கு உணவு மிக இன்றியமையாததாகலான் அதனை உடலுக்கேற்ற அளவாக அருந்தலில் பெருங்கவலை செலுத்தவேண்டும். மனிதன் தூய நீர் அருந்தல் வேண்டும். தூய நீரில்லாவிடத்தில் கிடைக்கும் நீரைக் காய்ச்சி ஆறவைத்து அருந்துதல் நலம். வெம்மை கொதிக்கக் கொதிக்க நீரருந்துவதனுல் பலகெடுதிகளுண்டு. காப்பி, டீ, கொக்கோ முதலியன அருந்தலாகாது. காப்பிக் கடைகள் மனிதனுக்கு யமன் போன்றவை.

தூநீரருந்தலைப் போலவே தூநீராடல் வேண்டும். தூய நீராடலின் அவசியத்தைப் பற்றி ஹாரி கேஸ் (Harry Gaze) என்பவர் தாம் எழுதிய ஒரு நூலில் எடுத்துக்காட்டியுள்ள ஒரு குறிப்பு ஈண்டு நினைவிற்கு வருகிறது. பிரான்ஸில் அழகில் பேர்பெற்ற மாது ஒருத்தி யிருந்தாள். அவள் பெயர் நினன் டி லென்குலோ (Ninon de Lenclos) என்பது. அவள் எழுபதாவது வயதிலும் அழகு மிகுந்த இளமை யுடையவளா யிருந்தாள். அவளது எண்பதாவது வயதில் அவள் பேரன் ஒருவன் அவளழகைக் கண்டு காமுற்ருனும். பாட்டி அவன் விருப்பத்துக்கு இணங்காமை கண்டு நாணமுற்று அவன் தற்கொலை செய்துகொண்டான். அப்பெண்மணி எண்பதாவது வயதிலும் அழகும் இளமையும் வாய்ந்தவளா யிருந்ததற்குக் காரணம் என்னை? காரணம் மிகச் சிறியது; பயனே பெரியது. என்னை? அவள் நாடோறும் பன்முறை தூநீராடி வந்ததே அவளது இளமைக்கும் அழகுக்குங் காரணம்.

மனிதன் தனக்கேற்ற உடை தரித்தும் நல்லுணவு கொண்டும் ஒழுக்கத்தை யோம்பா திருப்பானுயின், அவன் உடல் நலங்குன்றும்; அழகும் அழியும். ஒழுக்கம் உயிரினும் சிறப்பாக ஓம்பப் படல்வேண்டும். ஒழுக்கமே மனித

னுக்கு விழுப்ப மளிப்பது. நல்லொழுக்க முடையான் உடலின் அழகு மனதைக் கவர்ந்து விடும். அழுகுக்கு உயிர் நாடியா யிருப்பது ஒழுக்கம்.

ஒழுக்கத்தைக் காக்க விரும்புகிறவன் ஒருத்தியோடு வாழும் அறவோனு யிருத்தல் வேண்டும். ஒருவனது அழகு தங்கும் இளமையை வளர்ப்பது ஒருத்தியினது இன்பமே. பெண் மாதர் என்னுஞ் சொற்கள் அழகுப் பொருளைக் கொண்டன. ஆகு பெயராக அச்சொற்கள் மகளிர்களுக்கு வழங்கி வருகின்றன. அழகையே பெண்ணெனவும் மாதரெனவும் போற்றிவந்த தமிழ் மக்களின் கூர்த்தமதி போற்றற் குரியதே. அழகாய மகளிரை வெறுக்கிறவன் வேறு எவ்வழகை விரும்புவான்? அழகை வெறுப்பவனுக்கு அறிவு முண்டோ? இளமையில் இல்லறம் நீப்பவன் பல|அல்லலுக்குட் படுவென். ஒரு வித அல்லலா? பல; விரிக்கிற் பெருகும்.

தாவர முதல் மனிதன் ஈறுக உள்ள எல்லா உயிர்களும் ஆண் பெண் வடிவாகப் படைக்கப் பட்டிருக்கின்றன. இக்காரிய உலகைப் படைக்குங் காரணனுகிய ஆண்டவனும் ஆண் பெண் வடிவாக விருக்கின்முன் என்று நமது பண்டை மூதறிஞர் கண்டுள்ளார். இயற்கை இறைவனும் ஆண் பெண் மயமாக விருக்கும்போது ஒருவன் ஒருத்தியை வெறுப்பதும் ஒருத்தி ஒருவனை வெறுப்பதும் நியதிக்கு மாறுபட்ட செயல்களாகும். ஒருவன் தனக்கு ஒத்த கல்வி குணம் உணவு முதலிய உடைய ஒருத்தியோடு அளவுடன் கூடி வாழ்ந்து வருவானுயின், அவனும், அவளும் கட்டழகுடையராக உலகில் வாழ்வர். அழகரும்பலுக்கு இல்லறம் உறுகருவி யென்பது கவனிக்கற் பாற்று. ஒழுங்கு பட்ட பிரமசரியம் சந்நியாசம் இவை கலியில் நடை பெறலரிது.

பலதிற மகளிர் சேர்க்கையும், வரைவின் மகளிர் கூட்டுறவும், வயது முதிர்ந்த பெண்டிரைக் காமுறலும் காளையின் அழகைக் கல்லுவனவாம். கட்டழகைக் காதலிக்கும் எவனும் படிற்றெழுக்கத்தில் படுதலாகாது.

தனக்கொத்த குணம் நலன் முதலியன வாய்ந்த ஒரு பெண் தெய்வத்தோடு வாழ்பவன் என்றும் இன்பந் தாத்

தக்க நினைவுகளை நினைத்தல் வேண்டும்; பேச்சுகளைப் பேசுதல் வேண்டும்; செயல்களைச் செய்தல் வேண்டும். அழுக்காறு அவா வெகுளி இன்னோரன்ன பிற, மனிதன் குருதியை நஞ்சாக்கி உறுப்புக்களைக் குலைத்து முடிவில் அவனது அழகைக் கெடுக்கும். கவலை யென்பதே கூடாது. அழகுக்கு மாற்றான் கவலையே. கவலை மனிதன் நரம்புகளை அரித்தரித்துத் தின்னும். அந்தோ! இந்நாளில் கவலையில்லாத விட முண்டோ என்று ஐயுறுகிறேன்.

இந்நாளில் கவலை இளம் பிள்ளைகளையே அரிக்கிறதென்றால் மற்றவர்களைப் பற்றிக் கூறவேண்டுவதில்லை. மாணுக்கர்கள் உள்ளத்தில் பரீட்சைக் கவலை படிந்து விடுகிறது. அவர்களது இளமையை அக்கவலை குலைத்து விடுகிறது. அழகுக் குறை விடமான இளமை குலைந்தால் மாணுக்கர் மாட்டு அழகரும்புமோ? மாணுக்கர் நிலை இவ்வாறாயின் மற்றையோர் நிலையை விரித்துக்கூற இப் பத்திரிகை யிடந்தாராது. கவலையின்றி வாழும் அழகிய வாழ்வை ஆண்டவன் என்று அருள்வானோ?

மனிதன் தனது அன்றாடக் கடன்களை அன்றாடம் நிறைவேற்ற முயலல் வேண்டும். மனிதன் உலவ வேண்டிய காலத்தில் உறங்கியும், உறங்க வேண்டிய காலத்தில் உணவு கொண்டும் வாழ்தல் ஆகாது. ஒருவன் நாடோறும் தனது இயற்கைக் கடன்கள் ஒழுங்குபெற ஆற்றி வருவானாயின் அவன் மலச்சிக்கல் முதலிய நோய்வாய்ப் படாது செவ்விய வாழ்வை நடாத்துவன். மலச்சிக்கல் மனிதனது அழகைக் கெடுக்கும் நச்சு விதை. அந் நோய் காணப்பெறுவோர் உடனே அதை யொழிக்க முயலல் வேண்டும். அந்நோய் எல்லா நோய்களையும் ஈனும் தாய். அதை மருந்துகளால் தொலைக்க முயல்வதைப் பார்க்கிலும், இயற்கையால் தொலைக்க முயல்வது சிறப்பளிப்ப தாகும். நாடோறும் வைகறை துயிலெழுந்து, கால் ஓய்ந்துபோகும் வரை நடந்து, ஊற்று நீரில் முறைப்படி மூழ்கி, மெல்லிய உணவு கொண்டு வாழ்வோரைக் கண்டு நோய்கள் ஓடும்; மலச்சிக்கல் தலைகாட்டாது. மருந்து தற்கால சாந்தியே செய்யும்.

மனிதனும் அழகும்

மனிதன் அடிக்கடி இயற்கையோடு உறவாடல் வேண்டும். காடுகளிலும் மலைகளிலும் புகுந்து ஆங்குள்ள இயற்கை வனப்பைக் கண்டு கண்டு மகிழ வேண்டும். செடிகளின் அழகும், கொடிகளின் அழகும், பூக்களின் அழகும், பறவைகளின் அழகும், பிற அழகுகளும் அடிக்கடி மனதிற் படிவதால் உடலில் அழகு அரும்பு மன்றோ ? கடலோரத்தமர்ந்து கடலைக் காணக்காண மகிழ்ச்சி பொங்காதோ ? வானத்தை நோக்கினால் அழகிய நீல நிறமும், விண் மீன்களும், திங்களும் மகிழ்ச்சி யூட்டாவோ ? அம் மகிழ்ச்சியன்றோ அழகை வளர்ப்பது ? ஆதலால் மனிதன் என்றும் இயற்கை வாழ்வை விரும்புதல் வேண்டும். சினிமா பயாஸ்கோப் முதலிய செயற்கை நரகங்களில் வீழ்வது மனிதன் தன் அழகைக் கெடுத்துக்கொள்ள முயல்வ தாகும். இயற்கைக் கடலைக் கண் டின்புறாத மனிதன் சினிமாவில் காட்டப்படும் செயற்கைக் கடலைக் கண்டு களிக்கிறான். இவன் அழகை விரும்பும் ஆத்திகனாகான். தற்கால நாகரிகப் பொருள்கள் பெரிதும் மனிதனது இயற்கை யழகை அழிப்பன என்று கூறலாம்.

இவ்வுண்மை கண்ட அமெரிக்க நாட்டு அறிஞர் பலர் மனிதன் அழகு கெடாதவாறு காக்கும் முறைகளைக் கண்டு வருகிறார். அவர் அழகு வளர்ச்சிக்கெனப் பல நூல்கள் எழுதுகிறார் ; சங்கங்கள் காண்கிறார். அவர்கள் முயற்சி அங்குப் பயன் தருமாயின் உலகம் சீர்படும். மனிதனும் அழகு பெறுவான். அமெரிக்க அறிஞர் கண்டுவரும் முறைகள் பெரிதும் நம்முன்னோர்கள் கொண்ட இயற்கை முறைகளாம். இந்தியாவின் பழைய வாழ்வு மீண்டும் புத்துயிர் பெற்றால் அழகெனுங் கடவுள் நாட்டில் தாண்டவம் புரியும். அம்முயற்சியில் தலைப்பட்டு வரூஉம் காந்தியடிகளை வாழ்த்துகிறேன்.

நங் தமிழ் நாட்டின் பண்டை நிலையை ஆராய்ந்தால் பழந் தமிழ் மக்கள் அழகில் எவ்வளவு பற்றுக்கொண்டிருந்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். தமிழ் மக்கள் பண்டைக் காலத்தில் அழகு பெறக் கொண்ட முறைகள் பல ; அவைகளைப் பழந்தமிழ் நூல்களிற் காணலாம். அந்நூல்களை வாசிக்கும்போது

2

இயற்கை யழகன்றோ ஒழுகுகிறது? அந்நூல்களைப் படித்தாலும் மனம் அழகு மயமான பாட்டில் படிந்து இன்பத்திற் றிளைக்கும். இன்ப எழுச்சியால் அழகு அரும்பாதோ? பழந் தமிழர்கள் இயற்கையின் வனப்புக் கண்டு அதன் வடிவான அழகையே கடவுளாகப் போற்றியது கவனிக்கத் தக்கது. தமிழ்த் தெய்வமான முருகன் என்றும் இளமை வாய்ந்த அழகனல்லனோ? முருகு என்னுஞ் சொல்லின் பொருளென்னையோ? அழகு கண்ட தமிழ்நாடே! நீ யாண்டுள்ளாய் யாண்டுள்ளாய் என்று கதறுகிறேன்.

தமிழ் மக்கள் கடவுளை இளையனாய் அழகனாய் வழிபட்டவாறு வழிபட்டால் மனதில் அழகூர்ந்து உடலிலும் அஃது அரும்பும். எனவே மனிதன் என்றும் அழகோடு தொடர்பு கொண்டு வாழவே இயற்கைப் பொருளெல்லாம் இலங்குகின்றன. அத்தொடர்பை மனிதன் அறியாமையால் அறுத்துக் கொள்ளலாகாது. மனிதன் அழகின் பெற்றியுணர்ந்து இளமை ஓம்பி அழகு காத்து வருவானாயின், அவன் காலனைக்காணாது கடவுள் நிலை அதாவது அழகு நிலை யடைவான். கட்டுரை விரிகிறது. என் செய்வேன்! இவ்வளவோடு நின்று விடுகிறேன். பிழை பொறுக்க.

நமது புதிய பிரசுரங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், அகத்திய பஞ்சகம் முதலியன	0	4	குயில் மொழி	0	2
நடராஜப் பத்து	0	2	புண்ணிய பூமி	0	12
பழமொழித் திரட்டு	0	3	வர்த்தக யுக்தி	0	12
தாலாட்டுக் கோவை	0	3	பரிமளா	1	0
எனது காங்கிரஸ் யாத்திரை	0	3	ஏரெழுபதும் திருக்கை வழக்கமும்	0	3
பங்கஜம்	0	2	மணிவடக் களவு	0	4

மானேஜர்:

"லக்ஷ்மி,"

சென்னை.

பெண்களின் உயர்வு

ஸ்ரீமாந் கே. ராமசாமி நாயுடு அவர்கள் எழுதியது.

மூவிலைச் சூலத்தானாகிய எம்மிறைவன் தனது அருட்சத்தியைக் கொண்டு இந்நெடிய உலகத்தையும், அதில் அசையாப் பொருள்களையும் அசையும் பொருள்களையும், படைத்துக் காத்து அழித்து வருகிறான். அவ்வருட்சத்தியையே உமாதேவி என்றும், பார்வதி என்றும், பல நாமங்களால் அழைக்கிறோம். உலகத்தைத் தோற்றுவிக்கக் கடவுளுக்குச் சத்தியின் உதவி அவசியம் வேண்டுவது போல, மாநிலத்தின் மக்களின் வாழ்வுக்குப் பெண்கள் முக்கியமாய் வேண்டப்படுபவர்கள். இவ்வுலகம் பெண்களால் உயரவும் தாழவும் பெறும். ஞாலத்தில் நிகழும் சகல மங்களகரங்களும், பெண்களாலும் பெண்கள் பொருட்டும் நடத்தப்படுகின்றன. நம் உயர்வான வாழ்க்கைக்கு வேண்டிய அறிவு, செல்வம், ஆண்மை முதலிய எட்டு ஐசுவரியங்களும் பெண்கள் தானே! அறிவில்-படிப்பில் தலைமை பெற்றவர் பெண்கள் என்பதற்கே கலை வாணி எனப் பட்டனர். படிப்பில் தேற விரும்பும் எல்லாரும், ஸரஸ்வதியை வழிபட்டுச் சித்தி பெறுகின்றனர். "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர் வளிக்கும் என்னம்மை" என்று கம்பர் இனிது பாடினார். செல்வத்தைப்பார்க்கினும் அதிலும் பெண்ணே மூதன்மை யானவள். லக்ஷ்மி என்றது அதன் பொருட்டேயாம். செல்வத்துக்குத் தெய்வம் லக்ஷ்மியெனக் கூறுகிறோம். சாதாரண அறிவுடையவர்கள் கூட பெண்களால் தான் செல்வம் விருத்தியாகிற தென்று சொல்லுகின்றனர். தனத்தை விரும்புகிறவர்கள் லக்ஷ்மியைத் தொழுகிறார்கள். கேதாரி நோன்பு இதனை வலியுறுத்தப் போதிய சான்றாம். வீரத்திலும் பெண்களே திறமை சாலிகள். ஐந்து திணையில் ஒன்றாகிய பாலைத் திணைக்குத் தெய்வம் துர்க்கை என்றும், பாலைத் திணைமக்கள் போர்த்தொழிலைத் தலைமையாக உடையவர்கள் என்றும், தொல்காப்பியத்தில் கூறப் படுதலால், போருக்குத் தெய்வம் காளி என்பது பெறப்படுகின்றது. பண்டைக்காலத் தமிழர் சண்டைக்குப்போகுமுன் காளியை வழிபட்டுப்போய் வெற்றி சூடி மீளுவர். ஆண்களால் வெல்ல முடியாத மகிடாசுரனை,பெண்மணியே வென்றதாக சித்திரப் படமும் சரித்திரமும் வாய்மை கூறுகின்றன.

> வந்த தானவர் சேனை கெடிபுக
> இந்திரலோகம் விபூதர் குடிபுக
> மண்டு பூதபசாசு பசிகெட-மகிடாரி

என அருணகிரிநாத சுவாமிகள் பாடினார். மகிடா சுரனைக் கொன்றதால் மகிடாரி எனவருதல் காண்க!

விக்கிரமாதித்தன் காளியை வணங்கி அநேக காரியங்களை வென்றான். சிவாஜி பவானி தேவியை வழிபட்டு, பல யுத்தங்களில் வெற்றி பெற்றார். குசலவன் தாயின் அநுமதி பெற்றுச் சென்றதால்

வெல்ல முடியாத ராமர் சேனையை வென்ருன். இதனுல் போருக் கெழும் வீரனுக்குப் பெண் அநுக்கிரகம் பெரிதும் வேண்டப்படு மென்பது புலனுகிறது. இதுமட்டுமல்ல. உலகில் காணப்படும் பொலிவுடைய பொருள்கள் எல்லாம், பெண்களுக்கு உவமித்துக் கூறப் படுகின்றன. ஆடுவதிலும் பாடுவதிலுங்கூட பெண்களே மேதர்ந்தவர்கள். ஒருநாட்டைப் பெண்ணென்றும், அதன் முதல் தெய்வம் பெண் என்றும், உலகத்தார் ஒருங்கு சொல்லுகின்றனர். தாய் நாடு என்றும், பாரதமாதா வென்றும் வழங்குவது காண்க!

உயர்ந்த சாஸ்திரங்களைக் கொண்டு ஆக்கமுடியாத மக்கள் உருவத்தை, பெண்களைக் கொண்டு ஆக்கப்படுகிறது. பெண்களின் எழிலுக்கு, அறிவு வலிமை பெற்ற துறவிகள் கூட அகப்பட்டுப் போகின்றனர் என்ருல் மற்றவர்களைப்பற்றிச் சொல்வ தென்ன? பெண்கள் மலர் போன்று குளிர்ந்த மிருதுவான தேகமும், அமைதியான குணமும், இரக்கமும் உடையர்கள் ஆயிற்றே! தீய நடத்தையுடைய ஆண்களைப் பெண்கள் திருத்தி விடுகின்றனர். கோவலனது தீய நடத்தையைக் கண்ணகிப் பெண்மணி பொறுமையுடன் திருத்தி விட்டாள். திருத்தப்பட்டும் திருந்தாவிட்டால் அதோடு அவர்கள் பெண்களாலேயே அழிக்கப் படுவர். கற்புடைய சீதையால் பெண் புத்தி கேளாத இராவணன் தானுந் தன் பலகோடி சேனைகளுடன் மாண்டனன் அன்றே! பெண்களின் உயர்வைத் தெரிந்த ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் இவ்வுலகம் புவனேச்வரி உலகம் என்றும், புவனேச்வரியை வழிபடுவர்கள் விரும்புங் காரியமெல்லாம் எளிதில் சித்திக்குமென்றும் இனிது கூறினுர். உலகில் ஒவ்வொருவனுடைய வாழ்வும், அவனுக்கு நேரப்போகும் மனைவியை எதிர் நோக்கிக் கொண்டே செல்கிறது. அவனது வாழ்வின் உயர்வும், தாழவும், அவனது இல்லாளைப் பொறுத்த தாய்க் காணப்படுகிறது. நல்ல காதலியை யடைந்த பின் பெருஞ் சம்பத்தடைந்து இன்புடன் வாழுகின்றனர். சிக்கலான சங்கதிகளில் பெரும் யுக்தியும் போதிக்கின்றனர். அலாவுதீன் என்னும் முகமதிய அரசனுல் சிறைப்பட்ட செஞ்சி கோட்டை பீமசிங்கை, அவன் மனைவி பத்மினி விரோதிகளிடம் சிக்காமல் அவ்வளவு தந்திரமாக விடுவித்து விட்டாள். இது பெண்கள் ராணுவ அறிவைப் புலப்படுத்துகின்றது. பெண்கள் முன் காலத்தில் கவிபாடியும், அரசியல் நடத்தியும், வந்தார்கள். காரைக்காலம்மையார் சைவ சமயத்தையும், ஆண்டாளம்மாள் வைஷ்ணவ சமயத்தையும், மணிமேகலை பௌத்த மதத்தையும், பரவ உழைத்தார்கள். இதெல்லாம் கல்வி ஏற்றங்கொண்டே செய்யப்பட்டன. பெண்கள் படிப்பு உயர்ந்துவிட்டால், நாட்டில் படிப்பு எளிதில் விருத்தியடைந்து விடும். கம்பன் ஆயிரம் பொன்னுக்குக் கவிபாடுங் காலத்தில், ஔவை, கைக்கூழுக்குப் பாடிப் படிப்பை விருத்தி செய்தார். பெரும்பாலும் இக்காலத்தில் மாணவர்களுக்கு ஔவை செய்த நூல்களே முதன் முதல் உபயோகப்படுகின்றன. இத்துணை உயர்வு உடைய பெண்களை நமது முன்னோர்கள் எவ்விதத்திலும்

தாழ்வாய் நடத்தவில்லை. பரமசிவன் பார்வதி சமேதராயும், விஷ்ணு லக்ஷ்மி சமேதராயும், சுப்ரமண்யர் தெய்வயானை சமேதராயும், இன்னும் இப்படி புலனுக்கும் அநேக சித்திரப்படங்கள், விக்கிரகங்கள், சரித்திரங்கள் இருப்பதால், அவைகளே நமது மூதாதைகளின் உயர்ந்த கொள்கைகளைத் தெள்ளிதில் தெரியப் படுத்துகின்றன வன்றோ! பூமி சசல உயிர்க் கூட்டங்களுக்கும் உணவளித்து உயிர் வாழச் செய்கிறது. அதனால் அதைத் தாய் எனப்பட்டது. பொன், மக்கள் வறுமையில் வாழாமல் சுகத்துடன் வாழ உதவுகிறது. பெண்கள், மாந்தருக்குச் சகல விதத்திலும் உதவுவர்களா யிருத்தலினால் மண், பெண், பொன் ஆகிய மூன்றும் ஒன்றென்றனர் ஆன்றோர். தீப்பிழம்பான இவ்வுலகம் தண்ணீரில்லாவிட்டால் புல், பூண்டு, செடி, கொடி, மரம், விலங்கு, ஊர்வன, நீரில் நீந்துவன, பறப்பன, மனிதர் முதலிய சகலமும் ஒரு கணமும் உயிர்வாழாதே! நீரின் குளிர்ச்சியாலும் அதன் ஆதாரத்தாலு மன்றோ வாழுகிறோம். அதற்கும் கங்காதேவி என்றே பெண்பாலில் வழங்குகிறோம். இருளைப்போக்கும் தீபத்தையும் பெண்பாலில் கூறுகிறோம். பூவுலகில் காணப்படும் சிறந்த பொருள்கள் எல்லாம் பெண்பகுதியில் சேர்த்தே கூறப்படுகின்றன. நூல் ஆய்ந்து நுண்ணறிவுடையோரெல்லாம் இவ்வுலகம் பெண்ணுலகம் என்று வழுப்படாது கூறினர். "தாயாகிய உலகங்களை நிலைவேறுசெய் தலைவன்" என சம்பந்தர் இனிதுபாடினார் அல்லவோ!

பண்டைக்காலத்தவர்கள் பெண்களுக்குச் சிறிதும் துன்பம் நேராமல் கண்ணுங் கருத்துமாய்க் காத்துவந்தனர் என்பதற்குப் பல உதாரணங்கள் உள. எவ்வளவு சித்தி பெற்றவர்களாயினும் பெண்களிடம் குறைபாடு இல்லாமல் நடந்துவந்தனர். தவத்தில் உயர்ந்தவரான வால்மீகர் சாதாரணப் பெண்ணாய்க் காட்டில் காணப்பட்ட சீதையை யோம்பி நடந்ததை நாம் அறிவோம் அல்லவோ! அங்ஙனம் அவர் நடக்காது போயின், அவர் தவவலிமை சிறிதும் உதவாமற் போய் விடுமன்றோ! மகிமைபெற்ற கொங்கணவர் திருவள்ளுவ நாயனார் மனைவி வாசுகி அம்மாளை கனம் பண்ணாமல், அற்பமாய் நினைத்தபடியால், அவரது தவமகிமை பலன்படாது போயிற்று. துரோபதையை அவமானப்படுத்திய துரியோதனக் கூட்டத்தார் அழிந்தனர். பெண்மானம் அழித்த பாவிகளைத் தலை உருளும்படி செய்வோம் என்று வீரசத்தியம் பாண்டவர்கள் கூறினர். பெண் மனம் புண்படச் செய்ததற்காக பொருளும், படைகளும், கணக்கின்றி நாசமாயின. இராவணேச்வரன், தன் தங்கை சூர்ப்பநகை அவமதிக்கப் பட்டாளென்று ராமர் கூட்டத்து மீது வஞ்சினங் கொண்டு தனது உடல் பொருள் ஆவி மூன்றையுங் கொடுத்துப் பழிக்குப் பழி வாங்க முயன்றான். இங்ஙன மெல்லாம் பெண்கள் பொருட்டு இவ்வுலகம் பரிந்து நிற்பதைக் காண்க!

உலகில் சமயவிருத்தி செய்ய வந்த ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலிய பக்தர்களும், கலை வல்லவர்களான கம்பர், ஒட்டக்கூத்தர்

முதலியவர்களும், தேர்ந்த ராணுவ அறிவும் சிறந்த ராஜரீதியும் தெரிந்த மூவேந்தர், ஏலேலசிங்கன், புலிகேசன், வீரவர்மன், நரசிங்க வர்மன் முதலியர்களும், சுருங்கச் சொல்லின் ஒருவன் உலகமே உவந்து ஏற்றக்கூடிய உன்னத நிலையில் இருப்பினும் ஒரு பெண் மணியிலிருந்தும் பெண்ணால் பரிபாலிக்கப் பட்டும் பெண்ணால் போதிக்கப் பட்டும் வளர்ந்து அல்லவோ அந்நிலை அடைந்தான். ஆதலின் அவனுக்கு ஏற்படும் கியாதி அவனை ஈன்ற மாதவுக்கு (பெண்ணுக்கு) உரித்தாய் காணப்படுகிறது. "சான்றோன் என்கை ஈன்றோர்க் கழகு" என்பதும் இதுபற்றியே! அழகிய பெண்கள் தங்கள் நாயகர்கள் இனிதுவாழும் பொருட்டு அவர்கள் படுங்கஷ்டங் களை யெல்லாம் தாங்களும் உடன் இருந்து படுவது பெரிதும் போற்றத்தக்கது அல்லவோ! ஆண்கள் படுத்தும் துன்பத்தையும் கஷ்டத்தையும் பெண்கள் பொறுத்துக்கொண்டு அவனோடு வாழு கின்றனர். பெண்களால் நேரும் சிறிது துன்பத்தையும் ஆண்கள பொறுக்காமல் வேறு மனைவியைத் தேட முயலுகின்றனரே என்ன அறியாமை! நளன் பெருங் கஷ்டத்தில் சிக்குண்டு காடு செல்லும் போது தமயந்தியும் நளனோடு சென்று துன்பப்பட்டதை நாம் அறி வோம் அல்லவோ. அது போலவே தன் புருஷன் பொருட்டு சந்திர மதியும் வேறொருவர்க்கு அடிமைப்பட்டு நாயகன் கடனையும் கஷ்டத் தையும் நீக்கினாள். போதாக் குறைக்கு ஈற்றில் தன் உயிரையும் கொடுக்க முன் வந்தாள். ஆ பெண்காள்! உங்களுக்கு மட்டுமே கடவுள் இவ்வரிய உதாரகுணத்தைக் கொடுத்திருக்கிறார் போலும்.

பெண்களின் உயிருக்குத் தீங்காய் முடியும் பிரசவததால் ஏற்படும் குழந்தையை வெறுக்காமல் எவ்வளவோ அன்பாய்க் கருது கிறாள். ஐந்திரண்டு திங்களாய்ச் சுமந்திருந்ததோ, ஒருபாடு. அங்க மெல்லாம் நோவ பெற்றபின்; வளர்க்கும் பொருட்டு படும் பாடோ சொல்லத் தேவையில்லை. புருஷன் நிர்க்கதியாய் விட்டு விட்டாலும் கூட ஐயம்புரிந்தாவது தான் பெற்ற பிள்ளையைக் காப்பாற்றி விடு கிறாள். மக்கள் நோய்ப்படும்போது பெண்கள்படும் கவலையோ அளவிட்டுச் சொல்ல முடியாது. அப்போது உண்பதும் உறங்குவ தும் கொஞ்சமே, ஈச்வரப் பிரார்த்தனை மட்டும் அதிகம். பிள்ளைகள் பொருட்டு வேண்டுஞ் செலவுகள் செய்யவும் முற்படுகிறார்கள்.

இவ்வளவு பிரயாசைப் பட்டு நம்மை வளர்க்கும் பெண்களுக்கு நாம் செய்வது என்ன? நாம் உயிருள்ள வரையில் அவர்களுக்கு ஊழியஞ் செய்தாலும் அது ஈடு அல்லவே! நீள நினைந்து பார். ஆலயம் மலபந்தமுடைய மக்களைப் புனிதப் படுத்துவது போல் மக்களை மேன்மையுடன் வளர்த்து விட்ட தாயும் ஒரு கோவிலே. இதனாலன்றோ "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்றார் ஆன்றோர். சங்கரர், திருவள்ளுவர், பட்டணத்தார் ஆகியவர்கள் இல்லந் துறந்து வெளிப்பட்டும், தாய்க்குத் தம்மை வேண்டுமென்று நினைத்த போதெல்லாம் சென்று உதவி வந்தனர் என்பதை அறிகிறோம். இப்படி மெய் ஞானிகளெல்லாம் பெண்களைப் போற்றி நடந்திருக்க நாம் எம்மாத்திரம்! நாமும் பெண்களை உயர்வாய் நடத்துவோமாக.

கதிர்காமம்

ஸ்ரீமான் C. K. வீரைய நாயக்கர் எழுதியது.

ஸ்ரீ கதிர்காமம் என்னுந்தலம் இலங்கையின் தென்பாகத்திலுள்ளது. இலங்கை பரதகண்டமாகிய புண்ணிய பூமியின் ஒரு பகுதியாயும், சிவபூமியாயும், விராட் புருடனுக்கு இடை நாடியாயும் விளங்கும். இலங்கையின் பெருமை வேதாகம புராணேதிகாசங்களிலே மிக வெடுத்துக்கூறப் படுகின்றது. இலங்கையென்னுஞ் சொல்லுக்கு, சமுத்திர நடுவிலிருப்பது, என்பது பொருளாம். இத்தேசம் சமுத்திர மத்தியிலிருத்தலால் இதற்கு இலங்கையென்று பெயராயிற்று. இலங்கையின் பல பாகங்கள் கடலுள் அமிழ்ந்தி அழிந்து போயின. இப்பொழுதுள்ள இலங்கை, இலங்கையின் ஒரு பகுதியாகும்.

இலங்கை முன்னமே குபேரனுக்கு உரியதாய்ப் பல வளங்களும் பெற்றிருந்தது. பின்பு இராவணனாலே கைப்பற்றப்பட்டு அவனுக்கு உரியதாயிருந்தது.

இலங்கையிலே ஆயிரத்தெட்டுச் சிவஸ்தலங்களும், சிவ சுப்பிரமணிய ஸ்தலங்களும், விஷ்ணுஸ்தலங்களும் இருந்தன வென்று புராணத்தால் வெளியாகிறது.

மற்றும் இலங்கையின் கண் திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம், கீரிமலை, சம்பேசுரம், வாரிவனம், முனீச்சரம், முதலியன சிவஸ்தலங்கள். கதிர்காமம், காங்கேசன்றுறை, கந்தவனம், கந்தசாமிமலை, கண்டகீவரகாந்தாரம், உவந்தமலை முதலியன சுப்பிரமணியஸ்தலங்கள். வல்லிபுரம், பொன்னாலயம் முதலியன விஷ்ணுஸ்தலங்கள்.

திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம் என்னும் இரண்டு ஸ்தலங்களும், தமிழ்வேதமாகிய தேவாரப்பதிகம் பாடப்பெற்ற ஸ்தலங்கள். "கதிர்காமம்" திருப்புகழ் பாடப்பெற்ற ஸ்தலம்,—கதிர்காமம், என்பது தமிழ் மொழி, ஜோதிஷ்காமம், அம்சுகாமம், என்பன சமஸ்கிருத மொழிகள். கதிர், ஜோதி, அம்சு, என்னுஞ் சொற்களுக்கு 'ஒளி' என்பது பொருளாம். காமம்—கிராமம். கதிர்காம தலத்தில் உள்ள மலை, சோதி வடிவாய் இருத்தலால், அம்மலைக்குக் கதிர்காமமலை, ஜோதிஷ்காமகிரி, அம்சுகாமாத்திரி என்னும் பெயர்களும், அச்சோதிமலை விளங்குந் தலத்திற்குக் கதிர்காமம், ஜோதிஷ்காமம், அம்சுகாமம் என்னும் பெயர்களும் உள்ளனவாயின. அருணாசலம் (திருவண்ணாமலை) போலக் கதிர்காம மலையும் சோதிவடிவினதாகும். அம்மலை, சோம சூரியாக்கினிகளென்னும் முச்சுடர்களின் சோதி பெற்று அவற்றின் வடிவினதாய் விளங்கு மென்று பின் கூறப்

போகும் விஷயங்களால் விளக்கப்படும். கதிர்காம கிரியின்மேலே சிறந்த சிந்தாமணி என்னும் ஆலயம் ஒன்றிருப்பது பின் விளங்கும். அவ்வாலயம் இக்காலத்துச் சென்று தரிசிக்க இயலுவதில்லை. ஆயினும் அம்மலையின் மேல் ஓர் ஆலயம் உண்டென்பதை விசுவசித்து ஜனங்கள் அங்கேறிப்போய் ஒரு வகையாக வணங்கி வருகின்றனர். கதிர்காம தலத்தில் இப்பொழுது யாவராலும் கண்டு வழிபடப்படும் ஆலயமே "ஏமகூடம்" என முது நூல்களாற் நன்கு விளங்குகிறது.

கதிர்காம தலத்தின் மகிமை பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய கந்தமா புராணத்திலே தக்ஷிண கைலாய மான்மிய முரைக்குமிடத்தில் கூறப்பட்டன. தக்ஷிண கைலாயம் என்னப்படுவது இலங்கையிலுள்ள "திருக்கோணமலை." திருக்கோணமலையை உள்ளிட்டு, இலங்கையிலே உள்ள ஸ்தலங்களின் மகிமைகளை, எடுத்துரைக்கும் புராணம் தக்ஷிண கைலாய மான்மியம் என்னப்படும். அம்மான்மியம் 27 அத்தியாயங்களோடு கூடியது. அதில், 9-10-11 ஆகிய 3 அத்தியாயங்களிலே, கதிர்காம மகிமை கூறப்பட்டிருக்கிறது. இந்த கதிர்காம ஸ்தலமானவைகளில் ஐக்கியமாக உள்ள ஆலயங்களாவன, ஸ்ரீலஸ்ரீ முத்துலிங்கஸ்வாமி கோவில் வள்ளியம்மை ஆலயம், மாணிக்கப்பிள்ளையார் கோவில், தெய்வயானை அம்மன் கோவில், சுவாமி (சுப்பிரமணியர்) கோவில், விடுதி மண்டபங்கள், திருப்பணி நிகழுங்காலத்திலே திருப்பணி செய்யும் தொண்டர் தங்கும் கட்டிடம், ஆலயங்களைச் சுற்றிலும் விஸ்தீரணமான இடங்கள். இவ்வாலயங்கட்கு சுமார் 100 அடியின் அடுத்து, சிறப்புப் பொருந்திய மாணிக்க கங்கையென்னும் திவ்விய நதி தீரம் முதலியன இருக்கின்றன.

இவ்வாலயங்களின் முக்கியமான சுவாமி (சுப்பிரமணியர்) ஆலயம் முதல்யாவும் பழுதடைந்தும் சுவாமியின் இரகஸ்ய (மூலஸ்தான) இடம் சின்னாளில் தெரியப்போகும் வண்ணமாயிருந்ததை சின்னாளுக்குமுன் கொழும்புவாசிகளுள் க. நமசிவாயம், யாழ்ப்பாணம், சி. தாமோதரம்பிள்ளை முதலிய முதியோர் முயற்சியால் பேறறங் கைகொணர்ந்து, சுவாமியின் இரகஸ்யம் (மூலஸ்தானத்திற்கு) அடுத்து மற்றோர் கட்டிடம் ஸ்தாவரமாய் கட்டச்செய்து அணுவும் நுழையாவண்ணம் மேல் செப்போடு போட்டு, அதன்மேல் மண்ணோடு வேயப் பட்டிருக்கின்றன. இதர ஆலயங்களின் மூலஸ்தானம் இரகஸ்யமற்ற தாகையால் அவைகளை யொருவாறு பழுது பார்க்கப்பட்டு மேல் மண்ணோடு மூடப்பட்டிருக்கின்றன. சுவாமி (சுப்பிரமணியர்) மூலஸ்தானத்தைக் கண்ணுற இயலா தாகையால் இதுகாறும் கண்ணுற்றவர் எவரையும் காண்கிலம். இவ்வாலயத்தே பிரதி வருடம் ஆடித் திங்களில் வரும் உவா (பௌர்ணமியன்று) ஒரே இரவிற் குறைந்தது ரூபாய் 5,000த்திற்கு கற்பூரம் கொளுத்தப்படுகிறது. கற்பூரமே இவ்வளவிற்குச் செலவானால் அத்

தினம் இதர செலவாகிய அன்னதான வினியோகமுதலிய சத் கைங்கரியங்கள் எம்மாதிரி நிகழுமென்பதை நன்காராய்ந் துணருங் கள்.

கதிர்காம தலத்தில் இப்பொழுதும் பல அற்புதங்கள், அவ்வப் பொழுது நடந்து வருகின்றன. அவற்றை அனேகர் அநுபவத்தில் அறிந்திருக்கிறார்கள். கதிர்காமம் என்னும் பெயர்கேட்ட மாத்திரத்தி லேயே, எவர்க்கும் அன்பும் அச்சமும் தோன்றும். இக்கலிகாலத் தில் மகா அற்புதச் செயல்கள் உடனுக்குடன் விளங்கும் மகத்துவம் பொருந்தியதும், பிரத்தியக்ஷ சொரூபம் அமையப்பெற்றதுமாகிய சிறப்புறும் ஸ்தலம் இதுவே யாம்.

இத்தலத்தின் பேரில் ஸ்ரீலஸ்ரீ அருணகிரி ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழாவன :—

தனதனா தத்த தனதனா தத்த
தனதனா தத்த——தனதான

மருவுலாவு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்

மதில்கடா வுற்ற கலைபடாவட்ட
மதிசுடர் விற்கு மதனாலும்

இருகணான்முத்த முதிரையா மத்தி
ணிரவினா ணித்த மெலியாதே

யிடருறா மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்

கரிகள் சேர் வெற்பி லரியவேடிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா

கனக மாணிக்க வடிவனே மிக்க
கதிரு காமத்தி லுறைவோனே

முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா

முடிகிமே விட்ட கொடிய சூர் கெட்டு
முடியவேல் தொட்ட பெருமாளே

(இன்னும் வரும்.)

3

குதிரைகள் புலம்பல்

ஸ்ரீமான் S. தேசிக விநாயகம்பிள்ளை யவர்கள் எழுதியது.

கும்மி.

கற்றுத் தெளிந்தநல் மானிடரே? எம்மைக்
காக்கப் பிறந்த பெரியோரே!
சற்றும் அறிவிலா எம்மொழிக்குச் செவி
சாய்க்கத் திருவுளம் கொள்வீரே. (1)

வளர்ந்து வரும்வாலை வெட்டிவெட்டித் தேய்ந்த
மாறுபோ லாக்கிக் குறைத்திடும் நீர்
தளர்ந்த பொழுதெங்கள் ஈப்பகை ஓட்டிடத்
தக்க உதவிகள் செய்வதுண்டோ? (2)

இரும்புக் கடிவாளம் மாட்டுவதேன்? வாயும்
ஈசன் படைத்த திதற்காமோ?
பெரும்புவி மீதுயாம் உங்களுக்கென்ன
பிழைகளைச் செய்தோம்? புகல்வீரே. (3)

வம்புகள் பேசிடும் வாயையன்றோ பூட்டி
வைப்பது நீதி முறையாகும்,
நம்பி யிருப்போர்க்குத் துன்ப மிழைப்பது
நல்லோர் பெரியோர் செயலாமோ? (4)

வெள்ளிப்பூண் கட்டிய சேணமிட்டால் நெஞ்சு
வேதனை யில்லா திருந்திடுமோ?
அள்ளியிடும் பிடிப் புல்லுக்காக எங்கள்
ஆவியைக் கொள்வ தழகாமோ? (5)

பக்கம் திரும்பியே பார்த்திடாமல் எங்கள்
பார்வையைக் கட்டி மறைப்பதும் என்?
திக்கெலாம் தந்த பிரமனிலும் நீவீர்
தீவிர புத்தி உடையவரோ? (6)

குதிரைகள் புலம்பல்

திண்ணிய லாடமும் கட்டுவதேன்? அதில்
தீயெழ எம்மையும் ஓட்டுவதேன்?
புண்ணியம் நீர் செய்ய வேண்டாமையா எம்மைப்
போக்கிலே விட்டிடல் போதுமையா. (7)

எண்ணிக்கை அற்றதோல் பட்டைகள் கட்டி
இறுக்கி இறுக்கி முறுக்கிவைப்பீர்;
கண்ணுக் கழகவை ஆயிடினும் எங்கள்
கண்டம் நெரிவ தறியீரோ? (8)

பற்றி முதுகினில் ஏறிக்கொள்வீர்; எம்மைப்
பக்ஷிகள் போலப் பறக்கச் செய்வீர்;
சற்றும் இரக்க மில்லாதவரோ நீங்கள்
சாஸ்திரம் கற்ற பயன் இதுவோ? '9)

ஈச னளித்த கால் ரண்டிருக்க நீரும்
எங்கள் குறுக்கை முறிப்பதேனோ?
தாசரைப் போல்வேலை செய்திடினும் தயை
சற்றும் உமக்கு வருவதுண்டோ? (10)

கையில் சவுக்கொன்று போதா தென்றோ இரு
காலிலும் முட்களைக் கட்டிக்கொண்டீர்?
ஐயையோ! ஏழையேம் ஆவி பறித்திட
ஆயிரம் கூற்றுவர் வேண்டு மேயோ? (11)

வண்டியில் கொண்டெமை மாட்டுகின்றீர்; காலை
மாலையெலாம் தட்டி ஓட்டுகின்றீர்;
நொண்டினாலும் விட்டுப் போகமாட்டீர்; உடல்
நோக அடித்து வெருட்டுகின்றீர். (12)

'மோட்டார்' வண்டி வந்தும் மோக்ஷமில்லை; நாங்கள்
முன்செய்த தீவினைக் கென்செய்குவோம்?
எட்டாலெழுத அடங்குமோ கஷ்டங்கள்
யாரிடம சொல்லி அழுதிடுவோம்? (13)

கோடி கோடி 'ஸைக்கில்' வந்திடினும் எங்கள்
கூட்டத்துக் கேதுமோர் நன்மையுண்டோ ?
ஓடி ஓடி உயிர் ஓயந்திடவோ எம்மை
உண்டாக்கி விட்டான் உடையவனே ! (14)

மேடு பள்ளங்களில் ஓடவேண்டும் ; வெய்ய
வேனில் மழைகளில் ஓடவேண்டும் ;
காடு செடிகளில் ஓடவேண்டும் ; இந்தக்
கஷ்டங்கள் யாரிடம் சொல்வோமையா ? (15)

கொட்டகை கூடாரம் போட்டுக் கொள்வீர் ! அதில்
கூத்தாடிக் கூத்தாடி ஓடச்சொல்வீர் !
பட்டினியாக இறந்திடினும் இந்தப்
பாடெவர் பட்டுப் பிழைப்பரையோ ? (16)

ஆங்காரத் தாலும்பே ராசையாலும் நீங்கள்
அண்டை அரசரைப் போர்க் கிழுத்தால்,
தாங்காத் துயரெலாம் தாங்கிச் சலித்துயாம்
சாவதும் எங்கள் தலைவிதியோ ? (17)

காலினைப் பாறியே நிற்கவொட்டீர் ; வாயில்
கௌவிய புல்லையும் தின்னவொட்டீர் ;
மூலை முடுக்கென்றும் எண்ணமாட்டீர் ; எம்மை
மூச்சு விடாமல் துரத்துவீரே. (18)

ஆழக்குக் காணம் அளித்திடுவீர் ; அதற்
காயிரம் வேலையும் இட்டிடுவீர் ;
ஏழைக் கிரங்கெனும் நீதிமொழி நீங்கள்
ஏட்டில் படித்ததை ஏன் மறந்தீர் ? (19)

சித்தம் இரங்கிட வேண்டுகின்றோம் ; எம்மை
க்ஷேமமாய்க் காத்திடக் கெஞ்சுகின்றோம் ;
புத்தமுனியருள் போதனையை என்றும்
போற்றுதல் உங்கள் கடனமே. (20)

சென்னையில் மொஹரம் பண்டிகைக் கொண்டாட்டம்.

தீண்டாமை ஒழித்தலுக்கு
பண்டைய ஆதரவு

ஸ்ரீமான் அ. வ. பதுமநாப பிள்ளை யவர்கள் எழுதியது.

அறஞ்செழித்து மறம் ஒழிய ஆண்டவனது மக்கள்பால் அறி வின்மையையும் அடிமைத் தன்மையையும் அகற்றி அன்பைப் பெருக்கி ஆரிய சமயத்தின் மாசு துடைத்து ஒளியுற மிளிர்வித்துப் புத்துயிர் அளிக்கப் போந்த சாந்தமெய்ப் பொருளாங் காந்தியடிக ளார், "தம்மைத் தொடர்ந்து வந்தது பொருட்டே இழிவினும் இழிவு வாய்ந்ததாக எண்ணப் படும்—நாயை விடுத்து வான் புக மறுத்த தருமு ஏந்தல் வழித் தோன்றல்களாய நாம்—தீண்டா வகுப் பினராய நமது சகோதரர்களையே அடக்கிப் புறக்கணித்துவிட்டு, இல்லாண்மை (சுய ஆட்சி)யை எதிர்பார்த்தல் எங்ஙனம் முறை யுடைத்தாகும்? நமது குறைகளை நாமே நீக்கிக்கொள்ளாது பிறரி டத்து இரந்து (யாசித்து) நின்று, அக்குறைகளைப் போக்க முறையிடு வதால் விளையும் பயன் யாது? நமது சகோதர்களை நாமே அடக்கி ஆண்டு வந்ததால் தான் நம்மைப் பிறர் அடக்கியாள நேர்ந்தது. தீண்டாக் குலத்தினர் பால், தகும்பிய அன்பு காட்டி, ஆசி கூறிய மதாசிரியர்களாய சங்கரர், இராமாநுஜர் போன்ற பெரியார்களது, சமயத்தை அநுட்டித்து வருவதாக, கூறிக்கொள்ளும் ஹிந்துக்கள், அதற்கு எதிர்மாறாக, அத்தாழ்த்தப்பட்ட குலத்தினரிடத்து அணு வத்துணையும் அனுதாபமின்றி, வருணிக்கவொணுக் கொடுமைகட்கு அன்னாரை உட்படுத்தல் அந்தோ! கொடுமையினும் கொடுமை! உடல்நோயுடையானை நோயாளியின்பால் எத்துணை இரக்கத் தோடும் அணுகி, அனுதாபம் காட்டுதல் அன்புப்பெருக்கின் அறிகுறி யாக அமையுமோ அதுபோன்றே, அறிவுப் பிணியாளனும் தீண்டா வகுப்பின னிடத்தும் அணுகி, இரக்கங்காட்டு முகத்தால் பேணுதலே அஹிம்சா தர்மத்திற்கு அழகாகும். தீண்டாமை விலக்கிற்கு உடன் உண்ணலும் உடன் மணத்தலும் ஒரு சிற்றளவும் பொருள் அன்று. அஃது சகோதர ஒற்றுமையை, என்றும் வளர்த்து நிற்க வல்லது உம் அன்று. பிறரைப்போன்றே, தண்ணீர் முகத்தல், பள்ளியிற் பயிலல், தெருவழிகளில் தடையின்றி நடத்தல், முதலிய சாதா ரண—மனித பிறப்புரிமைகளை, அத்தாழ்த்தப்பட்டோரும் அடை யப் பெறுதலே, அதன் பொருளாகும். ஆதலின், அவரிடத்துள்ள அகப்புற அழுக்குகளை, அறவே ஒழித்து புனிதம் உறுவிக்கும் உயரிய திருத்தொண்டை, பாரதப் புதல்வர்கள் பலரும், புரிய முற்படல் வேண்டும்" எனப் புகன்று போந்துளார்.

அன்பர்கள், மேற் காட்டப்பெற்ற, காந்தியடிகளாரது மணி மொழிகளின்கண் உள்ள, உண்மை நோக்கையும், இரக்கப் பான்மை

யையும், ஆழ்ந்து கூர்ந்து ஆலோசித்து உண்மைப்பொருள் உணர்வார்கள் ஆகுக. மற்றும்.

அறநூலுணர்த்திய மநு மன்னனால் பகுக்கப்பட்டவாறு, இப்பரதகண்டத்து நிலவுவன வேதிய, அரச, வணிக, சூத்திர எனும் நால்வகைச் சாதிகளேயாம். ஏனைய அனைத்தும் அவற்றுள் அடங்கும். வேதியர்கட்கு நான்மறை ஓதுதல், ஓதுவித்தல் முதலிய சாத்துவிக குணங்களும், அரசர்கட்கு அமர்புரிதல், போர்நூல் பயிலல், பகை ஒடுக்கி குடிகளை ஓம்பல், முதலிய தொழில்களும் வீரம், அருள், அஞ்சாமை, கொடை, உறுதி முதலிய குணங்களும், வணிகர்கட்கு வேளாண்மை, வணிகம், முதலிய தொழில்களும், ஈகை, நடுநிலைவழாமை பசு முதலியவற்றை பாதுகாத்தல் முதலிய குணங்களும் சூத்திரர்கட்கு அம்மூவரைப் பேணி, பணி செய்து கிடத்தலும், இயற்கையாகவே பிறக்கவேண்டுவனவாய இயல்புகள் எனும் உண்மை, கருமயோகத்தை வலியுறுத்தும் கீதை வாயிலாக பெறப்படும். தத்தமது கடன்களைப் பொறுத்த மட்டில், அத்தகைய வேற்றுமைகள் இருப்பினும், ஒரே குடியில் உள்ள, தந்தை, மூத்தோர் இளையோர், புதல்வர் எனும் முறையில் வாழும் உணர்ச்சி போன்றே, அக்காலத்து மக்களிடை, அன்பும் கருமமும் நிகழ்ந்து வந்தன.

பின்னர் நாளேற நாளேற, அந்நால்வகைக் குலத்தினர்களும் தத்தமது தொழில்கட்கு வேண்டுவனவாய உபகருவிகளைச் செய்தற்கும், பரிசுத்தமற்ற இழிந்த கடன்களை இயற்றி வருதற்கும், ஒரு சாராரை ஒதுக்கிவைக்க வேண்டுவதாயது. அவ்வொதுக்கப்பட்ட பிரிவினர் (இறந்தமாட்டுத்) தோலை உரித்தல், பதனிடுதல், தைத்தல், பிணஞ்சுடல், தெருக்கூட்டல் விவசாயத்திற்கு வேண்டுவனவாய தொழில்களைச் செய்து வருதல், முதலியவற்றைப் புரிந்துவருமாறு ஏனையவரால் கேட்டுக்கொள்ளப்பட்டதும் சகோதரப் பான்மையிலேயே, அன்னாரது வேண்டுகோளை மறுத்துரைக்க இயலாது அவற்றை ஆற்றிவர நேரிட்டதனால், வைதீகத்தையும், ஆசாரத்தையும் எஞ்ஞான்றுங் கவனிக்க ஏலாது (முடியாது) அன்னார் (அவர்கள்) கைநழுவவிட்டுவிட நேர்ந்தமையால், அந்நிலையின் பொருட்டே, அத்தகையோரை ஏனையோர் (மற்றோர்) தீண்டக் கூசி அருவருப்பு எய்தி (அடைந்து) விலகிநின்றதூஉம், அக்கால இயற்கைக்கும் அனுபவத்திற்கும் ஏற்றனவேயாம். எனினும், இனி யேனும், தமது செயல்களின் பிழைகளை உணர்ந்து, திருந்த முற்படுவரேல், அத்தகையோரை அன்புப் பெருக்கொடும், ஆதரித்து, உயர்நிலை உறுவித்தல், அறநெறி பூண்ட ஆன்றோர்க்கு அழகாமேயன்றி, எவ்வாற்றானும், இழுக்காகாது. மற்றும், ஒருவனது, வருணம் (குலம்) அவனது தொழின் முறையாலும், ஒழுக்கத்தின்பாலும் பட்டதே யன்றி, பிறப்பின் பாற்பட்டது அன்று. இஃது கீழ்வரூஉம் வள்ளுவர் வாக்கால் தெள்ளிதிற் புலனாதல் காண்க.

தீண்டாமையை ஒழித்தல்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையால். தீண்டாக்குலத்தினர், அனைவருமே ஆன்ம ஞானமற்ற கயவர்களெனவும், தீண்டப்படுவோர் பலரும் அவ் வுணர்ச்சி அமையப்பெற்ற அறவோர் எனவும் வாதம் புரிதல் ஒரு சிறிதும் அடாது. உயர் குலத்தோர் எனப்படும் பற்பலரைக் காட்டிலும், அருட்செல்வத்திலும், கல்விச்செல்வத்திலும், மிக்க உயர்ந்த உத்தம பக்த சிகாமணிகளெனத் தக்க, தாழ்த்தப்பட்ட குலத்தவர்கள், முற்காலத்து எத்தனையோ பெயர் இருந்தனர்; இக்காலத்தும் தண்டமிழ் நாட்டில் பற்பலர் உளர். அத்தகையோர், ஒழுக்கத்தின் பாற்பட்ட உண்மை வேதியர் அவரேயன்றி பிறப்பின் பாற்பட்ட இழிகுலத்தோராக ஒருகாலும் ஆகார். அவ்வாறே அன்பு, அருள், பொறை, பக்தி முதலியவற்றைத் துறந்து தன்னலத்தேயே கண்ணுங் கருத்துங்கொண்டு திரிவோராக உயர்குலத்தோர் இருப்பின், அத்தகையோர் தொழின்முறை பாற்பட்ட இழிதகைமை உடையோர் ஆவரேயன்றி, பிறப்பின் பாற்பட்ட உயர் நிலையினராக ஒருகாலும் ஆகார். இவை கீழ்வருவன வாற்றான் இனிது புலனாகும்:—

“வேதமோதாது, வேறிடத்து ஊழியம் புரிந்து
திரிவோனை வேதியன்
இப்பிறவியிலேயே தனது சுற்றத்தாரொடும்
சூத்திரனுவன்—மனு ஸ்ம்ருதி.”

“ஒழுக்கமுடைமை குடிமை; இழுக்கம்—இழிந்த
பிறப்பாய்விடும்”—திருக்குறள்

“சாதியாற் குடிமையினால் மிக்கோரேனும், சதுமறையால்
வேள்வியினால் தக்கோரேனும்
போதினன் முகன் கைதொழப் பள்ளிகொள்ளும்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே
பாதியா யழுகிய காற்கையரேனும், பழிதொழிலும்
இழிகுலமும் படைத்தோரேனும்
ஆதியாய்! அரவணையாய்! என்பராகில், அவர்
கண்டீர்யாம் வணங்கும் கடவுளாரே.”

மற்றும் எண்குணமுடைய இறைவனை வழிபட்டு உய்வதில், எக்குலத்தினர்கட்கும் உரிமை உண்டு. ஆண்டவன்பால் மெய்யன்பு செலுத்துவோர் எக்குலத்தினரேனும் அவரைத் தனது வழிபாட்டிற்கு உரியராக்கி இறைவன் ஏற்றுக்கொண்டு அருள்தருவன் என்பதில் ஐயமில்லை. இக்கூற்றை வலியுறுத்த, சைவ சமய பக்த சிகாமணி திருநாளைப் போவாரும் வைணவ சமய வழிபாடுடைய திருப்பாணாழ்வாரும் ஐந்தாங்குலத்துள் அவதரித்தும், அகங் குழைந்து ஆண்டவனை வழிபட்டு, இன்னிசை பாடிப்பாடி உருகி, இறுதி (முடிவி)யில் அந்தணர் பலரானும் பெரிதும் போற்றப்

பெற்று, ஆண்டவனது அருட்பெருஞ் சோதியுள், (ஏனைய எவ்வடியார்களும் எய்தப்பெறாத தனிப்பெருந் திருப்பேறு வாய்க்கப் பெற்று) ஐக்கியம் உற்றதும், (இஃது ஆழ்ந்து கூர்ந்து, பெரிதும் சித்திக்கற்பாற்று) நீசகுல உற்பவ நம்பாடுவான், பகவானது சேவையின் பொருட்டு, பிரம அரக்கனிடம் தனது உடலையும் உவகையொடு அருப்பணஞ்செய ஒருப்பட்டதும், ஒளவையாதி எழுவர் அன்னையாம் ஆதி எனும் புலைச்சி, கணவனது பிரிவு ஆற்றாமை (சகியாமை) யால் தனது பச்சிளங் குழவிகளை, பிறந்த இடந்தொறும் பற்றற விட்டுப் போந்ததும், ஆண்டவ னடியார்கட்கு கள்வர்களால் நேரிட்ட கடுந்துன்பத்தைக் காணப் பொறா (சகியா)து, விரைந்து வந்து அத்தீயர்களைத் தண்டித்து துரத்தியதால், வைணவ சமயாசாரியராம், இராமாநுஜராது அன்பு நிறைந்த ஆசிகளையும் திருக்குலத்தாரெனுந் திருநாமத்தையும், (திருநாராயணபுரம், ஸ்ரீரங்கபட்டினம் போரூர் முதலிய திருப்பதிகளில் ஆண்டுக்கு ஒருமுறை) வரத நாயகனது ஆலயத்துட் பிரவேசித்து, ஆங்குள்ள திவ்ய தீர்த்தங்களில் நீராடி, ஆண்டவனை வழிபடும் உரிமைகளையும், அக்காலத்து பிற எக்குலத்தினரும் தம்மைத் தீண்டலால் எத்தோடமும் பெற்றாராகார் எனும் வரத்தையும் பெற்றார் ஆங்குள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதும் பிற எண்ணிறந்தனவும் பெரிதுஞ் சாலும் (போதும்). இது குறித்தே "எவ்வுயிரும் பராபரன்றன் சன்னிதியதாகும்—இலங்கும் உடல் உயிரனைத்தும் ஈசன்கோயில்"—எனும் ஆன்றோரது அருள்மொழியும், "கடுகளவுதுங் காதலிக்கில்லான்" ஐந்தாங் குலத்தினன் ஆயினுமவனைச்—சீரியர் தம்மொடும் சேர்க்கத் தகுமே"—எனும் சத்திய சூத்திரமும் எழுந்தது என்க. ஆதலின், அத்தாழ்த்தப்பட்டோரை ஆண்டவனை வழிபட அனுமதியாதொழிவது மறச்செயலும் மாபாவமும் ஆமேயன்றி அறச்செயலும் நல்வினையும் ஆகாது என்பது அறியக்கிடக்கின்றது.

நமது, பண்டைப் பெருஞ் சீரியமதமாம், ஆரிய சமயம் அன்பு, அருள், பக்தி முதலிய ஆத்மசக்திக் குணங்களை குறிக்கொண்டு எழுந்ததே அன்றி, கேவலம்—சாதிப்பகைகளை வலியுறுத்திக் கிடக்க எழுந்ததன்று எனும் உண்மை, பண்டை அறநெறி நூல்களை தனி ஆய்ந்து கூர்ந்து ஆராய்வார்கட்கு புலனாகாது போகாது. இக்கூற்றை வலியுறுத்த,

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் !
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர் ?
பாத்திரம் சிவ மென்று பணிதிரேல்,
மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே"—எனும்

சைவசமயப் பெருங்குரவராம் திருநாவுக்கரையரது பெருவாக்கே பெரிதும் சாலும், (போதும்). மற்றும், தமது பிறப்பின் பெற்றி (தன்மை)யாலும் சகவாசப் பான்மையாலும் நூல்வழிப்படுத்தும்

தீண்டாமையை ஒழித்தல்

நல்லோர் பலரது உபதேசம் இன்மையாலும் தீண்டாவகுப்பினருள் பெரும்பாலோர், மதுமாமிசம் உண்டு மாக்களாகத் திரிவார் ஆயினர். அத்தகையோரிடத்து, மிக்க இரக்கம்காட்டி, அன்னாரது அறிவின் புன்மையை அகற்றி இதோபதேசம் புரிந்து சமய உணர்ச்சியைப் புகட்டி அத்தாழ்த்தப் பட்டோர் பிற மதத்தினரது, சூழ்ச்சிக்கு இலக்காக்கப்பெற்று, புறமதம் புகுந்தபின், தீண்டவும் பேசவும் எத்தெருவிலும் நடையாடவும் உரிமை வழங்கப்படுவதின்றி ஆரிய சமயத்தினராக இருக்கும் போழ்தே (காலத்தே), ஆண்டவனால் எவர்க்கும் பொதுவாக உதவப்படும் உரிமைகளை அவர்கட்கு பகிர்ந்து தந்து—அன்னாரை, நாடோறும் நீராடல், புலால் (ஊன்) மறுத்தல், வைதீகமாக வாழ்தல் முதலியவற்றை கடைப்பிடிக்கச் செய்து, அவர்களது வாழ்நாட்கள் ஒவ்வொன்றுளும், காலை துயில் எழுதலினின்றும், இரவு துயில் (உறக்கம்) அடைதல்வரை நிகழ்த்தப்படும் ஒவ்வொரு செயலிலும்—ஒவ்வொரு பகுதியிலும்—பிற சகோதரர்கள் பெரிதும் வியந்து வெட்கி விரும்புமாறு, மாசற்ற (குற்றமில்லா) தூய செய்கையையே கைக்கொள்ளுமாறு, திருத்தி நல்வழிப் படுத்தலே அன்பை அறிவுறுத்தும்—சகோதரப் பான்மையை உபதேசிக்கும்—இரக்கத்தைப் புகட்டும் இந்து மதத்தை, உண்மையாக—உறுதியாக அனுட்டிக்கும் வைதீக ஹிந்துக்களுக்கு அழகு. மற்றும்,

திருவிதாங்கூர் வைக்கத்தில், இது காலை நடத்தப்பெற்றுவரும் சத்தியாக்கிரக எழுச்சிக்கு எதிர்ப்பிரசாரம் இயற்றிவரும் வைதீகர்கள் எனப்படுவோருள் ஒரு சாரார், அந்நிகழ்ச்சி ஆண்டவன் தொண்டர்களது திருவுள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தி யுளதாகலின் பாரத நாட்டின் பந்தம் அதனால் வலியுறுமே அலது, நலிவு உறாது என்றும், ஆரிய நாட்டு அன்னையின் விடுதலைக்கு அஃது ஓர் பெரும் ஊறாக—சாபமாக நிலைநிற்கும் எனக்காய்ந்து கவல்வ (கோபித்து வருத்துவ)தோடு நில்லாது, எங்கணும் எச்சரிக்கையும் புரிந்து வருவாராயினர். அந்தோ ! பாவம் ! பொய்யாமொழிப்புலவரது

> " அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்—
> செந்தண்மை பூண்டொழுகலான் "

எனும் பெருவாக்கை இவர் கருதிலர் போலும்! ஆண்டவனது மெய்யடியார்கட்கு அமைவுறவேண்டுவனவாய பலவற்றுளும் தலையாயது அன்பே அன்றோ! திருமூலயோகிகளும்,

> " அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்;
> அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்;
> அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்,
> அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே "—என

இது பற்றியே யன்றோ அருளிப் போந்துளார்! அத்தகை மெய்யன்பை—அதனால் விளையும் பரம ஜீவகாருண்யத்தை—அதனாற்

பெறப்படும், இரங்கத்தக்க மிக்க தாழ்நிலையில் இருப்போரை, எவ்வ ரும் பாடு பட்டேனும் பரம பரிசுத்தரும் மெய்யன்பினருமாக— உழைத்துத் திருத்தி உய்வித்தலேயே அன்றே—தன்னிடத்து அன்பு செலுத்தி வழிபடுதலினும்—திருத்துவித்தார் எளிதில் திருத்திவிடத் தக்க நிலையினரை உபதேசவாயிலாக உயர்நிலை உறுவித்தலினும்— சாலச்சிறந்ததாக ஏற்று, விரும்பி, பெரிதும் மகிழ்ந்து, உயர் பரம் பொருளாம் இறைவன் உவகை பூத்தருள்வன்! அப்பணியினும் ஆண்டவனது உளத்தைக்குளிர்வித்து, திருவருள் பெறுவிக்கும் பணி பிறிதும் (வேறு) ஒன்று உளதோ! ஒருகால் அத்தகைப்பணியில் ஆர்வமற்ற மெய்யன்பு முற்றப்பெருத அடியார்களது மனத்தில்— மனிதப் பிறப்புரிமையின் பொருட்டு வாதாடி வருவதும் சகோதர ஒற்றுமையைவளர்க்க எழுந்ததுமாய, வைக்க நிகழ்ச்சியைப்பற்றிய வெஞ்சினமும் (கொடுங்கோபமும்) வெறுப்பும் விளையுமாயின், அன்னாரது சாபகோபங்கள் ஆரியநாட்டிற்கு, எத்தகைக் கேட்டை யும் விளைவித்துவிட வல்லதன்று. நிற்க:

ஐயறிவுள்ள நாற்கால் விலங்குகளும் பறவைக்குலங்களும், கேவலம்—இழிபிற் சிறந்தனவாக எண்ணப்படும். நாயும், பன்றியும், கழுதையும், காகமும், எத்தடையுமின்றி நடமாடும் எவர்க்கு முரிய தெருக்களில், ஆறறிவுள்ள மனித உடல் வாய்க்கப்பெற்ற தாழ்குல மகனுக்குத் தானு தடை! இறைவனுற் படைக்கப்பட்டு, எத்தகையி னர்க்கும் பொதுவாக வழங்கப்பட்ட வீதிகளில், அவனது மக்களுள் ஒரு சாரார், மற்றொரு சாராரை நடக்கவும் முடியாவாறு கட்டுப் படுத்தும் இக்கொடுமையின் தண்டனையினின்றும் அனைவர்க்கும் அத்தனும் தயாநிதியின்பால் தப்பிப்பிழைப்பது யாங்ஙனம்? அன் புப்பெருக்கே, எங்கணும் நிரம்பப்பெற்றுள்ள ஆரியசமயத்தை இடைக்காலத்து அடைந்த பெருநோயைத் துடைத்து, அதன் அரிய மாண்பினை எங்கணும் பரப்புவிக்க எழுப்பப்பட்ட, அற எழுச்சியை, வர்ணச்ரம தர்மங்களை அறவே சிதைக்க எழுப்பப்பட்டதாக பேதை மையின் பயனாக பிறழ வுணர்ந்தமைக்கு, பெரிதுமிரங்கி, கன்மனங் கரையப்பெற்று, வைதீகர் அனைவரும் பாரதப் புதல்வர்களெனும் பதவிக்கேற்ப, தமது சகோதரர்களாய் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கட்கு, சம உரிமை வழங்கி, முன்னேற்றத்திற்கு கொணர்ந்து, ஒன்று பட்டு உழைத்து உயர்வுறத் திருவருள் சுரப்பதாகுக. வந்தேமாதரம்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே;—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே”—;

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

“பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!!—பாரதி.

கைத்தொழில்

ஸ்ரீமாந் ரா. திருநாவுக்கரசு எழுதியது.

பெருமை பொருந்திய இமயமலை, விந்தியமலைகளாலும், கீர்த்தி வாய்ந்த கிருஷ்ணா, கோதாவரி, யமுனை, காவேரி நதிகளாலும் அலங்கரிக்கப் பெற்றதும் பெருங்குணமும் பேரழகும் வாய்ந்த கற்புக்கரசிகளும், எண்ணிக்கையில்லாதபுலவர்களும், மனுநீதி தவறாத மன்னரும், முற்றும் துறந்த முனிவர்களும், எல்லாங் கற்றுணர்ந்த மாந்தர்களும் விளங்கப்பெற்றதும் ஆகிய நம்மிந்துதேசம் இப்பொழுது சீரற்றுச் சிறப்பற்று விளங்குவதற்கும், பல நூற்றாண்டுகளுக்குமுன் சீரற்றுச் சிறப்பற்று விளங்கின மேல் தேசங்கள் சீருற்றுச் சிறப்புற்று விளங்குவதற்கும் காரணம் யாது? சிலவாண்டுகளுக்குமுன் மேல்நாட்டார் உண்ண நல்லுணவின்றியும் உடுத்த நல்லுடையின்றியு மிருந்தவர்களென்றும் அவர்களுடைய ஆதிபாஷைகள் ஆரிய பாஷையினின்றும் உண்டானவைகளென்றும் நம்மிந்து சாஸ்திரங்களைக் கொள்ளையடித்துக்கொண்டுபோய் அவற்றால் இவ்வளவு உன்னத நிலையை அடைந்தவர்களென்றும் நம்மவருள் சிலர் சொல்ல நாம் கேட்டிருப்போம்.

ஒரு காலத்தில் அவர்கள் க்ஷீணதசையி லிருந்திருக்கலாம். இந்து சாஸ்திரங்களினால் முன்னுக்கு வந்திருக்கலாம். ஆனால் தற்போது மேல்நாட்டார் இந்தியரைவிடப் பன்மடங்கு கைத்தொழிலிற் சிறந்து விளங்குகின்றன ரன்றோ.

மேல் நாட்டார் இவ்வளவு உன்னத நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் அவர்களின் குன்றா ஊக்கமும் கைத்தொழி லபிவிருத்தியுமே. ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் பிரதானமாக அது ஒரு பொருளுக்கும் பிறதேசங்களை எதிர்பார்க்கக் கூடாது.

இவ்வுலகின் கண்ணே யுள்ள ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாதது ஊணு முடையுமே. இவ்விரண்டனுள் ஊணின்றி ஒரு நாளிருப்பினும் உடையின்றி ஒரு நிமிஷமேனு மிருக்க முடியாதே.

நம்மிந்திய சகோதரர்கள் தங்கள் பொருள்களை யெல்லாம் அன்னியர்களுக்குக் கொள்ளை கொடுத்து ஜீவனத்திற்கு வழியில்லாமலும் ஆடைவாங்கி அணிந்துகொள்ளக்கூடச் சக்தியில்லாமலும் அவர்கள் மானத்தை காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அதி முக்கியமான ஓர் சாண் துணிக்கும் மேனாட்டாரை எதிர்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

தற்போது இந்தியாவுக்கு ஆடைகள் சிறுபான்மை அமெரிக்கா ஜப்பான் முதலிய விடங்களிலிருந்தும் பெரும்பான்மை இங்கிலாந்திலிருந்தும் வருகின்றன.

அளவுக் கடங்காப் பருத்திச் செடிகள் விளைகின்ற நம்தேசத்திற்கு சிறிதும் பருத்திவிளைவில்லாத இங்கிலாந்திலிருந்து இவ்வளவு உடைகள் ஏற்றுமதியாவதற்குக் காரணம் என்ன? சற்றாராய

வோம். ஆங்கிலேயர் நம்நாட்டில் விளையும் பருத்தியை மிகச்சொற்ப விலைக்கு வாங்கிக்கொண்டு போய் விடுகின்றனர். அவர்கள் இங்கிருந்து ஏற்றிப் போவதற்கு கப்பல் கூலியும் அங்கே செலுத்தவேண்டிய தீர்வையும் அத்தொழிற்சாலையி லுள்ளோருக்குச் சம்பள முதலியனவும் மீண்டும் அதை நம்தேசத்திற்கு ஏற்றுமதிக்கு கப்பற்கூலியும் தீர்வையும் அத்துடன் அவர்களுக்கு ஒன்றுக்கு நாலுபங்கு லாபமும் எடுத்துக்கொண்டு விற்கிறார்கள். தேசாபிமானிகளே! இந்த லாபத்தை அவர்களுக்குக் கொடுக்கிறவர்கள் அவ்வாடைகளை வாங்கும் நாமல்லவா? இதனால் நாம் பாடுபட்டுத் தேடின செல்வம் அனாவசியமாகச் செலவழிகிறது. "மாதாவயிறெரிய மகேச்வரபூஜை செய்தாற்போல்" நம் பாரத புத்திரர்கள் வேலையின்றி ஏழைகளாயலைய நாமேன் அன்னிய தேசத்தாருக்கு உழைப்பைக் கொடுத்து அவர்களைச் செல்வர்களாக்கி நந்தேசத்தவரை ஏழைகளாக அலைய விடவேண்டும்? இதை யெல்லாம் நோக்குமிடத்து நம்முடைய பணத்தை நாம் எவ்வளவு அனாவசியமான வழிகளில் அன்னியருக்கீந்து நாம் ஏழைகளாகின்றோம் என்பது இனிது விளங்குகின்றது. மேல் நாட்டார் வயிற்றுப் பிழைப்பிற்கு நம் நாடாகிய பாரதபூமிக்கு வந்தும் அவர்களுடைய தேசாசாரங்களின்றும் சிறிதும் வழுவி நடக்கிறதில்லை யென்றால் அவர்கள் எவ்வளவு தேசாபிமானிகளா யிருக்க வேண்டும். இதைப் பார்த்தாவது நாம் நடந்துகொள்ள வேண்டிய விதி யின்னதென்றுவது விளங்க வில்லையா?

நந்தேசத்தவர் ஒரு ரூபாய் பெறுமதியான இரும்பிலிருந்து இரண்டு ரூபாய் சம்பாதிப்பது அருமையினு மருமையா யிருக்க மேல் நாட்டார் தம் ஊக்கத்தினாலன்றோ அதே இரும்பிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் ஈட்டுகின்றனர். இற்றைக்குச் சில வருஷங்களுக்குமுன் கைத்தொழில் அதிகமாக வில்லாதிருந்த ஜப்பான் தற்போது எவ்வளவு உன்னத நிலைக்கு வந்து விட்டது. ஐரோப்பிய யுத்தத்திற்கு முன் அநேகமான சாமான்களில் "ஜெர்மனி தேசத்தில் செய்யப் பட்டது" என்றிருப்பதற்குப் பதிலாக "ஜப்பானிற் செய்யப்பட்டது" என்றிருப்பதை நோக்கு மிடத்து ஜப்பானின் கைத்தொழிலபிவிருத்தி இனிது விளங்குகின்றது.

இவற்றை யெல்லாம் அமைதியோடு ஆராயுங்கால் நாம் நம்முடைய தேசத்தில் விளையும் பொருள்களை வேறு தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்தி நம் சகோதரர்கள் உய்யும்படியாக அநேக தொழிற் சாலைகள் ஏற்படுத்தவும் அவர்களுக்குப் போதுமான ஊதியத்தைத் தேடிக் கொடுக்கவும் அன்னிய உடைகளை பஹிஷ்கரிக்கவும் நம்தேசச் செல்வச் சீமான்கள் முன்னுக்கு வர வேண்டும்.

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் பின்னோக்கமா யிருப்பதால் தான் ஜீவனத்திற்கும் வகையில்லாமல் தீவாந்தரங்களுக்குச் சென்று சம்பாதிக்க வேண்டியவர்க ளாகின்றார்கள். போனவிடத்தில் கொஞ்சம் சுகத்தையாவது அனுபவிக்கிறார்களா? இல்லை. அம்

மம்மா! மானம் போய் மதிகெட்டு கஷ்டத்திற்குமேற் கஷ்டப் படுகிறார்கள். அதில் எத்தனைபேர் ஜன்ம தேசமாகிய இந்தியாவுக்கு வரச் சக்தியற்றவர்களாய் அத்தேசங்களிலேயே உயிரிழந்தவர்கள். மேல் அதிகாரிகளாக விருக்கும் ஆங்கிலேயர்கள் நஞ்சகோதரர்களைப் படுத்தும் பாடுகளை பத்திரிகை மூலமாகவும் அங்கிருந்து தங்கள் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தால் மீண்டுவந்த சகோதரர்களாலும் அறியும்போது என்மனம் படும் பாட்டை இச்சிறு வியாசத்தில் வரையச் சக்தியற்றவனு யிருக்கின்றேன். திக்கற்ற வருக்குத் தெய்வந் தான் துணை.

பெரும்பான்மையான இந்திய செல்வச் சீமான்கள் சுயநலப் பிரியர்களா யிருக்கிறார்களே யல்லாமல் தம் ஏழைச் சகோதரர்கள் குறையை நிவர்த்திப்பதற்கு ஒருவரும் முன்னுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

உலகெல்லாம் போற்றும் உத்தமராகிய மாஹாத்மா காந்தியும் ஓர்ஐரோப்பிய கனவானாகிய ஆன்டுரூஸுவும்நம்மேழைச் சகோதரர் சகோதரிகளின் கஷ்டத்தை நிவர்த்திக்க எவ்வளவு பாடுபடுகிறார்கள். அவர்களின் நன்முயற்சி நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் குன்றா ஊக்கத்தையும் கொடுத்தருளுமாறு அருள்புரிய எம்பெருமானை என்மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

செல்வத்திற் சிறந்து விளங்கும் தனவைசியரில் சிலர் வீணாக அரும் பெரும் செல்வத்தை தங்கள் கலியாண காலங்களில் இழிவான வேடிக்கைக் கதைகளைப் பிரசங்கம் செய்பவர்களுக்கும் புண்ணிய தினங்களாகிய திருவிழாக் காலத்தில் கேவலமான ஈனத்தொழில் புரியும் விலைமாதர்கள் நடனமாடுவதற்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வாரியிறைக்கின்றார்கள். இதனால் நந்தேசத்தில் ஒன்றுக்கு முதவா சோம்பேறிகளும் விலைமாதர்களும் அதிகரித்து நந்தாய்நாடு இன்னும் ஈனதசையை யடையுமே. அந்தோ!

இனிமேலாவது சகோதரர்களே! உங்கள் பொருளைக் கெட்ட வழிகளிலும் பிரயோசனமற்ற வழிகளிலும் செலவிடாமல் நம் ஏழைச் சகோதரர்கள் உய்யுமாறு அநேக தொழிற்சாலைகளை ஏற்படுத்தி கைத்தொழிலை விருத்தியாக்கினால் உங்களைப்போல் புண்ணியஞ் செய்தவரும் பாக்கியஞ் செய்தவரும் இப்பூவுலகில் எவருமிரார்.

ஜகத் ரக்ஷகராகிய மஹாவிஷ்ணுவுக்கு துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ்செய்து உலகத்தை ரக்ஷிக்க சக்கிரம் எவ்வளவு அவசியமோ அதேபோல் நாமும் பிரதேச ஆடையை அகற்ற நம்மொவ்வொருவருக்கும் கைராட்டினம் என்னும் ஆயுதத்தை ஆலசியம் செய்யாமல் அவசியம் கைக்கொள்ளவேண்டும்.

நந்தேச முன்னேற்றத்தின் பொருட்டு தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அவற்றின் மூலமாக சுதேச சாமான்களைச்செய்து அவற்றையே பாவித்து பிரதேச சாமான்களை எதிர்பாராமல் மேன்மையுற்று விளங்கும் வண்ணம் எம்பிரான் திருவருள் பாலிப்பாராக.

லீலாவதி

ஸ்ரீமான் தி. ரா. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் எழுதியது.

அத்தியாயம் I.

காதல் வலிதோ? பாசம் பெரிதோ?

வசந்த காலம் சித்திரா பௌர்ணமி தினம். நீல நிறவானம் மாசு மறுவற்றுத் துலங்குகின்றது. மரகதத் தசட்டிலே வைரக் கற்கள் பதித்துப் பரப்பினாலன்ன எங்கணும் விண்மீன்கள் இலங்குகின்றன. அவற்றினிடையே அழகிய முழுமதியம் தண்ணொளி பரப்பித் திகழ்கின்றது. மந்தமாருதம் கந்தங்கலந்து மாந்தர் மனதுக்கு மகிழ்ச்சி ஊட்டுமாறு வீசா நிற்கின்றது. கொள்ளிடம் நதியின் காட்சி மிக்க ரமணியமாய் மிளிர்ந்து பரந்திருந்தது. கண்ணுக்கினிய விருந்தாய் விளங்கி அதனூடே சல சல வென்ற சத்தத்தோடு ஓடும் தண்ணீரானது சந்திரனது வெள்ளிய தண் கிரணங்கள் பட்டுப் பிரதி பலித்தலால் உருக்கிவிட்ட வெள்ளிக்குழம்போ என்று ஐயத்தையுண்டாக்கும் விதம் மிளிர்ந்தது. விசாலமான வெண்மணற்பாங்கும், இரண்டு பக்கங்களிலும் இருண்டு அடர்ந்து சந்திரபிம்ப வெளிச்சத்தில் கட்புலனாகும் சோலைகளும் ஆனந்தத்தை அளிப்பவாய்ப் பிறங்கின. கிழக்கே சுமார் நூறு அடி தூரத்தில் தோன்றிய பாலம் அதன் அகன்ற கணவாய்களோடும், வரிசையாய் இருபுறமும் ஒழுங்கு பெற நிறுத்தி ஏற்றப்பட்டிருந்த இராந்தல் கம்பங்களோடும் களிப்பைத் தருவதாய்ப் பொலிந்தது. பாலத்தின்மீது சென்றுகொண்டிருந்த இரண்டொரு ‘கட்டை’ வண்டிகளின் சப்தமும் இடையிடையே செவிப்புலனாய்க் கொண்டிருந்தது. இந்த ஒரு சப்தத்தைத் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. எங்கும் நிசப்தமே தவழ்ந்தது. சுமார் முக்கால் மைல்தூரம் விரிந்தும், கண்ணுக்கெட்டியதூரம் வரையில் நீண்டும் பரவிக்கிடந்த ஆற்றுமணல் வெளியில் யாதொரு ஜன நடமாட்டமும் அப்பொழுது காணப்படவில்லை. கரையின்மேல் ஓங்கி வளர்ந்து காணப்பட்ட தென்னை, மா, நொச்சி, மூங்கில் முதலிய மரங்களும் யாதொரு சலனமுமின்றி விளங்கின. ஆனால் மணல்மீது செழிப்பாய் வளர்ந்து தோன்றிய பசும் நாணல் புற்கள் மட்டும் மெல்லெலன வீசிய தென்றலில் வளைந்தும் நிமிர்ந்தும் கொடுத்துக் கொண்டிருந்தன. இது கண்கொள்ளாக் காட்சியாய் இறைவனது படைப்பின் செவ்வியைப் புலப்படுத்திய வண்ணம் தோன்றியது. மற்றப்படி, உலகமே தன்செயல் ஏதுமின்றி நித்திரையில் ஆழ்ந்து கிடப்பதுபோல் இருந்தது. இத்தகைய ஏகாந்த காலமே இயற்கையின் அழகைக்கண்டு களித்து அதன்மூலம் பரம்பொருளின் மாட்சியை வியந்து போற்றிப் பரவுவதற்கு ஏற்றசமயம். இவ்வாறு மிகவும் வனப்புவாய்ந்து விளங்கிற்று அன்று இரவு.

நிற்க, இவ்வேளையில், "உத்தமர் கோயில்" துறைக்கு எதிரே சற்றுத்தூரத்தில் மணலின்பேரில் ஒரு இளவாலிபன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்குச் சுமார் இருபது வயது இருக்கலாம். அவனது களங்கமில்லாத முகமும், கூரிய வளைந்த நாசியும், ஒளியுடன் பிறழ்ந்த கண்களும், பவள இதழும், மற்றைய எழில் வழிந்த அங்கங்களும் அவனது அழகையும், பெருந்தன்மையையும், புத்திக் கூர்மையையும் விளக்குவனவாயிருந்தன. அவன் காதுகளில் இரு வைரக் கற்கள் விண்மீன்கள்போலும் சுடர்விட்டு ஒளிர்ந்தன. அவன் இடையில் ஜரிகைக் கரையுடன் கூடிய 'கதர்' ஆடை தரித்திருந்தான். அவன் மேலே போட்டுக் கொண்டிருந்த 'ஷர்ட்'டிலும் வைரப் பொத்தான்கள் ஜ்வலித்துக் காண்போர் கண்களைக் கவர்ந்தன. இடது புறப்பையில் வைத்திருந்த வெள்ளிக் கடிகாரத்தினில் மாட்டப்பட்டிருந்த பொற்சங்கிலி மிகுதியும் வேலைப்பாடு அமைந்ததாய்த் திகழ்ந்தது. இவ்வளவு பொலிவோடும் அவ்விடம் காணப்பட்ட அவ்வாலிபன் சட்டெனத் தன் பையினின்றும் கடிகாரத்தை வெளியே எடுத்துப் பார்த்துவிட்டு, "ஓ! நாம் குறித்தவேளைக்குப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னமே வந்துவிட்டோம். இப்பொழுதுதானே மணி பத்து ஆகின்றது. சரி, இன்னும் வேண்டிய பொழுது இருக்கின்றது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்ட பின்பு தன்னைச் சுற்றிலும் இருந்த கண்ணுக்கினிய இயற்கைக் காட்சியின் அழகிலும், நிசப்தத்திலும் ஈடுபட்டுப் பரவசமெய்தியவனாய்ப் பின்வருமாறு பாடி எல்லாம் வல்ல இறைவனைத் துதிக்கலானான்.

"அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச் சிவமே
யருளமுதே யருணிறைவே யருள்வடிவப் பொருளே
யிருள்கடிந் தென் னுளமுழுது மிடங்கொண்ட பதியே
யென்னறிவே யென்னுயிரே யெனக் கினியவுறவே
மருள் கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே மன்றில்
நடம்புரிகின்ற மணவாளா வெனக்கே,
தெருளளித்த திருவாளா ஞானவுருவாளா தெய்வநடத்தரசே
நான் செய்மொழி யேற்றருளே."

"கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே காணார்க்குங்
கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கு மாட்டார்க்கும் வரமளிக்கும்வரமே மதியார்க்கும்
மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே நரர்களுக்குஞ்
சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
யெல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
யென்னரசே யான்புகலு மிசையுமணிந்தருளே."

இவ்வாறு பத்து நிமிடநேரம் மனமுருகத் தனது தீங்குரலில் சர்வேசனது பெருமையை வியந்து போற்றிப் பரவியபின், "சரி!

இனி குறித்த சமயம் நெருங்கிவிட்டது.'' என்று மொழிந்த வண்ணம் கரையின்வழியே இருந்த பாதையை நோக்கினான். சற்று தூரத்தில் முழுதும் சிவப்புப் போர்வையால் போர்த்துக்கொண்டு இவன் வீற்றிருந்த இடத்தைநாடி மெல்லென நடந்துவரும் ஓர் உருவத்தைக் கண்ணுற்றான். அக்கணமே அவனது முகம் சந்தோடத்தால் மலர்ந்தது. அவனது செவ்விய அதரத்தில் புன்னகையரும்பியது. உடல் களிப்பு மேலீட்டால் நிலைகொள்ளாமல் தத்தளித்தது. ஒரு நிமிடநேரமே! இருவரும் கரைபுரண்ட ஆவலோடும் ஒருவரை யொருவர் தழுவினர். இத்தோடு இதழும், கண்களோடு கண்களும் சந்தித்தன. இத்தகைய சந்தோஷத்தில் சில விநாடிகள் சென்றன. உடனே ஆலிங்கனத்தினின்றும் இருவரும் விடுபட்டனர். அவ்வுருவம் சுமார் பதின்மூன்று வயதுள்ள ஓர் எழிலணங்கா யிருந்தது. என்னே! காதலின் வல்லமை? அவ் வனிதையின் வதனம் மதியினும் எழில் மிக்கதாய் விளங்கிற்று. அவளது திங்கள் வாணுதலும், நீல நிறக்கயற் கண்களும், எள்ளுப் பூவினைப் பழித்த நாசியும், கொவ்வையங் கனிவாயும், மென்னகை புரிகையில் செவ்விய அதரத்தினூடே சற்று வெளிப்பட்டுத் தோன்றும் நித்திலமன்ன பற்களும், அழகே உருவாயமைந்த மற்ற அங்கங்களும் அவளுக்கு ஒரு தெய்வப்பெண்ணின் தோற்றத்தை அளித்தன. அவளது கரிய கேசம் தேருருளை போலும் வாரிப் பின்னப்பட்டுப் பின்னே தொங்கிற்று. அதில் விளங்கிய நறுமணங் கமழும் மல்லிகை மலரும், ஜடை வில்லையும் அவளது வனப்பைப் பின்னும் அதிகமாக்கின. அவள் பட்டுக் கத்திரித்தாற்போல் நாசியில் வைரக்கல் புதைத்த ஒரு மூக்குப் பொட்டையும், காதினில் சிவப்புக் கற்களாலான தோடுகளிரண்டும், கழுத்தில் ஒரு சரட்டு அட்டிகைப் பதக்கமும், ஆகிய இவைகளையே ஒழுங்குபெற அணிந்திருந்தனள். இவ்வாறான வனப்புடனும் விளங்கிய அக்கன்னிகை ஆலிங்கனத்தினின்றும் விடுபட்ட இரண்டொரு நிமிடநேரம் வரையில் நாணமேலீட்டால் வாளாவிருந்தனள். அவளை ஆவலோடும் உற்றுநோக்கிய வண்ணம் அவ்விளைஞனும் நின்றான். இவ்வாறு சில நிமிடங்கள் 'எவர் முதலில் பேசத் தொடங்குவது' எனத் திகைத்தவர்களா யிருந்தனர். எப்பொழுதும் பெண்மணிகள் முதலில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பது உலகறிந்த இரகசியமல்லவா? ஆகவே அவ்வாலிபனே முதலில் பேச ஆரம்பித்து, "காதலி! ஏன் நாம் இவ்வாறு கால் நோக நிற்கவேண்டும். கீழே உட்கார்ந்து கொள்ளுவோம்'' என்று அன்பொழுகக் கூறவும், இருவரும் மணலின்பேரில் உட்கார்ந்தனர். மீண்டும் அவன் அவளது ஒளிபிறங்கிய முகத்தை நோக்கியவனாய், "என் அன்பே! உனது கடிதத்திற் கண்டபடியே நான் இங்கு வந்து உனக்காகச் சுமார் இருபது நிமிடங்களாய் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தேன். நீயும் கூறிய விதமே காலந் தாழ்க்காது வந்து சேர்ந்து எனக்கு மகிழ்ச்சி விளைவித்தாய். சரி! இவ்வாறு என்னை இங்குச் சந்தித்துப் பேசவேண்டுமென்று நீ விரும்பியது எதைக்

குறித்து என்பதை அறிய நான் மிகவும் ஆவலுள்ளவனாய் இருக்கின்றேன். ஆகவே, உடனே விஷயத்தைத் தெரிவித்து என் மனதைச் சமாதானப்படுத்துவாய் என நினைக்கிறேன்" என்று ஆசையோடும் கழறிவிட்டு, அவளது பவளச் செவ்வாயைக் கூர்ந்து கவனித்தவனாய் இருந்தான். இவ்வாறு சொல்லி முடிந்ததும், அம்மங்கையின் முகத்தில் திடீரென ஒரு மாறுதல் உண்டாயிற்று. மேகங்களால் சூழப்பட்ட மதியம்போலும் அத்தருணியின் வதனம் ஒளி குன்றியது. இரண்டொரு விநாடிகளில் அந்நங்கை தன் மனதை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டவளாய்த் தன் கனிவாய்திறந்து, "ஆருயிர்க்காதல!"......எனக் கூறியதும் மேலும் மொழிய நாவெழாதவளாய்த் தனது மரைமலரன்ன கண்களினின்றும் பனித்திவலைகள்போன்று பல பலவென்று கண்ணீரையுகுத்து மீண்டும் பேசத்துவக்கி, "ஓ! இனியும் நான் அப்புனிதமான சொற்கொண்டு உம்மை அழைத்தல் கூடாது. அந்தோ! உமக்கு நான் ஒருபோதும் சமாதானத்தை யுண்டாக்க முடியாத சண்டாளியாய் விட்டேன். நன்றிகெட்ட துரோகியாகிய நான் உமக்கு எனது வார்த்தைகளால் மிகுந்த விசனத்தையும், ஏமாற்றத்தையும் விளைவிக்கக் கூடுமேயல்லாமல் சந்தோஷத்தையும், நம்பிக்கையையும், சமாதானத்தையும் கொடுக்க இயலாதவளாய் விட்டேன். 'ஆர்வல,' 'காதல,' 'அன்ப' என்ற காதல் ரசம் இனிக்கின்ற இத்தூய மொழிகளைக் கொண்டு இனி நான் உம்மை விளிப்பதற்கு அருகையல்லள்' என்று இயம்பவும், அவ்விளைஞன் தலையில் இடிவிழுந்தவன் போல் திடுக்கிட்டுச் சோர்வு எய்தி அவன் மேலும் பேசாமல் குறுக்கிட்டு, "இன்பே! என்ன! நீ கூறுவது உண்மையில் நான் கனவுதான் காண்கிறேனோ? எனது உயிர்நிலை எனவே கருதியிருக்கும் உன்னுடைய வாயினின்றும் இத்தகைய கர்ண கொடூரமான கடுஞ்சொற்களைக் கேட்பது என்றால் நான் மெய்யாகவே சொப்பனந்தான் கண்ணுறுகின்றேன் போலும். கண்மணி! என்ன? நீ சொல்லுவதை உன்மனமறிந்துதான் உரைக்கின்றாயா? இன்றேல்...அந்தோ! நீ ஏன் இவ்வாறு மொழிகின்றாய். இன்னும் இரண்டொரு மாதங்களில் உன்னை மணந்து இன்பம் துய்க்கவேண்டும் என்று ஒவ்வொரு விநாடியும் சிந்தித்து நான் எவ்வளவு களிப்புடன் இருக்கின்றேன் தெரியுமா? ஆஹா! காதலனும் காதலியும் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே யின்பம். இவ்வாறான வாழ்க்கையினும் ருசிகரமான இன்பம் பிறிதொன்று இருக்கின்றது என்று எவரே சொல்லக்கூடும்! எல்லாவற்றிற்கும் உன்னையே என் பிராணனாக மதித்திருக்கின்றேன் என்பதைச் செவ்வனே உணர்ந்த நீயும் இவ்வாறு கூறலாமா? நீயும் இவ்வாறே என்னை மனப்பூர்வமாய் நேசிக்கின்றாய் என்பதை நான் நன்கு அறிவேன்" என்று விசனத்தோடும் கூறினான். "அந்தோ! நீர் நான் ஏன் இவ்வாறு கூறவேண்டும் என்பதன் காரணத்தை அறியாதபடியால் இவ்வாறு கூறுகின்றீர். என்னவோ நான் கூறிய அவ்வளவும் உண்மையே, நான் உம்மை என்

மனப்பூர்வமாய் நேசித்தேன்—ஏன்?—காதலித்தேன்—என்பதை மறுக்கத் துணியமாட்டேன். ஆனால்......” என்று தழதழத்த குரலில் சொல்லி நிறுத்தவும் அவ்விளைஞன் முன்னிலும் அதிக திக்பிரமை கொண்டவனாய்ச் சற்றுநேரம் கல்லாய்ச் சமைந்தவண்ணம் இருந்துவிட்டுப் பின்பு பேசத்தொடங்கி, “எனதாருயிர் நங்காய்! நீ இப்பொழுது இவ்வாறு கூறுவதை என் செவி சிறிதும், இந்நிமிஷம்-அன்று-ஏன்? எப்பொழுதுமே நம்பவே நம்பாது; இத்தகைய கடுமையான மொழிகளை உன் மனச்சாட்சியறிய நீ கூறவே மாட்டாய் என்பது திண்ணம்” என்று பதை பதைத்த குரலில் சொன்னான். உடனே அம்மடந்தை தனது கயலன்ன நெடுங் கண்ணினின்றும் தரளம் போன்ற கண்ணீர்த்துளிகளை உதிர்த்தவளாய்த் தனது ஆர்வலனை நோக்கி, ‘அந்தோ! நீர் இன்னும் நான் சொல்வதன் கருத்தை அறியாமல் பேசுகிறீர். நான் உம்மை என் மனம் தற்பொழுது இருக்கிற நிலைமையில்—ஏன்? எப்பொழுதுமே விவாகம் புரிய வியலாது என்பதைவிட இன்னும் தெளிவாக நான் எவ்விதம் கூறக் கூடும்? அந்தோ! நான் உமக்கு—என்னையே முற்றும் நம்பியிருந்த உமக்கு—மிகுந்த சதி செய்தவளாய் விட்டேன் என்பதை என்மனம் அடிக்கடி அறிவுறுத்தி என்னை ‘பழுக்கக் காய்ந்த இருப்புச் சலாகை’ புண்ணில் நுழைவது போன்று புண் படுத்திக் கொண்டே யிருக்கின்றது. இன்னும் நான் இவ்விஷயத்தைக் குறித்துப் பேசும்போதெல்லாம் என் மனம் ஆயிரம் ஈட்டிகள் ஒருங்கே குத்துவதுபோன்ற வாதனை யுறுகின்றது. ஆகவே நீர் இச்சண்டாளியை அறவே மறந்துவிட்டு வேறொரு எழின் மங்கையை மணந்து சுகப்படும். நான் ஒரு வஞ்சகி இருந்தேன் என்பதை அப்புது மங்கையின் இன்பத்தில் சுத்தமாய் மறந்துவிடும்” என்று அளப்பரிய துக்கத்தோடும் பகர்ந்தாள். இவள் இவ்வாறு புகன்றதைச் செவியுற்றதே அவ்வாலிபன் மனம் எப்பாடுபட்டிருக்காது? அவன் ‘நட்டாற்றில் மண்குதிரையை நம்பி இறங்கியவன் போன்று தத்தளித்தான். தன் இன்னுயிர்க்காதலி—தனது வாழ் நாட்களுக்கே ஒரு வகையான இன்பானுபவத்தை அளிக்கக்கூடியவள்—தனக்கே சொந்தம் எனத் தான் சுதந்திரம் பாராட்டியிருந்த அக்காரிகை, இவ்வாறு சொல்லவே அவன் இதுகாறுங் கட்டியிருந்த இன்பானுபவ ஆகாயக் கோட்டை ஒன்றுக்கும் பயன்படாது இடிந்து விழுந்து நாசமுற்றதை அறிந்து கலங்கினான். ‘காதல் முறிவு’ என்ற கொடிய விஷம் இவ்வாறான பயனையே அளிக்கவல்ல தன்மையோடுங்கூடி இருக்கின்றது. இயற்கை உள்ளுணர்ச்சி இவ்வாறு ஒரு இடைஞ்சலைச் சந்திக்க நேர்ந்ததே மிகவும் பரிதாபகரமான நிலைமையையுற்ற அவ்விளைஞன் மனக் கலக்கத்துடனும் மறுபடியும் பேசத்தொடங்கி, “என் இன்பே! நீயே மனமொப்பி இவ்வளவும் கூறுகின்றாய் என்று என் மனம் எள்ளளவும் நம்பமாட்டேனென்கின்றது. ஏதோ பலவந்தத்தின் பேரிலேயே நீ இதைச்செய்தே தீரவேண்டி யிருக்கின்றது. அப்படித்தானே? அப்படியானால்......,

என்று மேலே கூறமாட்டாமல், அவள் பதிலை ஆர்வமுடன் எதிர் நோக்கினான். "ஆம், நீர் நினைப்பது சரியே. அதை நீர் அறிந்தால் எனது குற்றமற்ற தன்மையும், எனது பரிதாபகரமான நிலைமையும் உமக்குத் தெற்றெனப் புலப்படும்" என்று மனச்சோர்வோடும் மறுமொழி பகர்ந்தாள் அத்தெரிவை. "அப்படியே நீ பலவந்தப் படுத்தப்பட்டாலும், இவ்வாறு ஒருநாளும் நீ கூறமாட்டாய் என்று என் மனச்சாட்சி இவ்வினாடியும் அறிவுறுத்துக்கொண்டே யிருக்கின்றது என்பதை நான் வாயினால் உரைப்பதைவிட நீ அதைச் செவ்வனே உணருமாறு வேறு எவ்விதம் செய்யக்கூடும்?" என்று இரந்த பார்வையோடும் கேட்டனன் அவ்வாலிபன். "அந்தோ! நான் யாதும் செய்ய இயலாதவளா யிருக்கின்றேன். என்னவோ, நான் கூறியவும், நீர் எண்ணுவதாகக் கழறுவதும், யாவும் சரியே. இனியும் நீர் மறுமுறை என்னைப் பார்க்கவேண்டுமென்ற அவாவை விட்டு என்னைப் பூராவும் மறந்துவிடும். எனது குணங்கள் யாவும் ஏற்கனவே நன்றாய் அறிந்து விட்டிருக்கிற நீர் என்னைக் கபடமற்ற வள் எனவே மனதில் பதியவைத்துக் கொள்ளுமாறு வேண்டுகின் றேன். எனது இளமைப் பருவத்தில் என்னைப் பரிவுடன் வளர்த் துக் காத்தளித்த உமது பாட்டியாருக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். அவ்வுத்தமி இறந்து ஏறக்குறைய நான்கு வருடங்கள் ஆய்விட்டிருந்தாலுங் கூட அவளது உருவம் இவ்விநாடியும் என் அகக்கண்ணே தோன்றிய வண்ணம் இருக்கின்றது. அவள் எனக் குப் புரிந்த அளவிறந்த நன்மைகளை நான் என்றும் மறவாதிருந்து, அவள் வழித்தோன்றலாகிய தங்களுக்கேனும் என்னாலியன்ற கைம் மாற்றை அளிக்கும் சந்தர்ப்பத்தைக் கூடிய சீக்கிரமே கொடுத்தருள் புரியவேண்டுமாய் அவ்விமலனை மனம், மொழி, மெய்களாகிய முக்கரணங்கள் கொண்டு சிந்தித்தும், வந்தித்தும் போற்றிப் பரவு கின்றேன். இனி, நான் உம்மிடம் உண்மையைக் கூறத் தயங்கவேண் டிய அவசியமில்லை. அது என்னவெனில்...என்று மேலுங்கூறச் சிறிது தயங்கிப் பின்பு,...நான் பிறனொருவனை மணம் முடிக்க ஏற் கனவே ஏற்பாடாகி யிருக்கின்றது. இவ்விஷயம் நேற்றிரவே எனது தந்தையால் எனக்குத் தெரிவிக்கப்பட்டதாதலால், "இன்று இரவு சரியாய்ப் பத்தேகால் மணிக்கு ஆற்றுமணலில் என்னைவந்து சந்திக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன். அப்பொழுது நான் தங்களிடம் நம்மிருவர் நன்மையையுங் குறித்த செய்தி ஒன்றை அறிவிக்க விரும்புகின்றேன். அவசியம்; தவறாமல் வந்திருப்பீர்க ளென எண்ணுகின்றேன்" என்று காலையில் தங்களுக்கு அக்கடி தத்தை எழுதியனுப்பினேன். இப்பொழுது இச்சமாசாரத்தை அறிந்துகொண்ட நீர் என்னை உமது ஆயுட்காலம் முழுதும் எவ்வளவு தூரம் வெறுப்பீர் என்பதை நான் சற்று நினைத்துப் பார்ப்பின், அந்தோ! கடவுளே......" என்று மேலே சொல்லமாட்டாமல் பெருமூச்செறிந்தாள் அவ்வஞ்சி. அவள் கூறிய வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்ட அவ்வாலிபன் தானும் வெய்துயிர்த்து நம்பிக்

கையை முற்றும் இழந்தவனய்த் தாழ்வான குரலில், "நங்காய்! அப்படியானல் நம்மிருவருக்கும் இதுகாறும் ஏற்பட்டிருந்த நேச பாசமானது இடையில் முறிபடவேண்டியதே போதும்! நான் நினைத்த பெருத்த எண்ணங்களும், ஆசைகளும், நம்பிக்கையும் யாவும் வீண் பிரயத்தனங்களேயோ? எனது நிலைமை எட்டாப் பழத்திற்குக் கொட்டாவிவிட்ட ஒருவன் கடைசியாக எவ்வாறே அக்னியைப் பெற்றுக் களிப்புடன் அருந்தப்புகும் சமையத்து ஓர் கிளி அதனைப் பறித்துக்கொண்டு பறந்தோடியதையே ஒக்குமன்றே? இன்னும் ஒரு முறை—கடைசித் தடவையாக—"நான் உம்மைக் காதலித்திருந்தாலும் அவ்வேறெருவனையே மணக்கப் போகின்றேன்" என்று உறுதியாக உரைத்துவிடில் நான் சந்தோஷ சித்தனய் இக்கணம் முதற்கொண்டே என் மனமாகிய கூண்டினின்றும் வெளியே பறந்து ஓடிப் போகுமாறு உன்னை விட்டுவிடுவேன். ஆனல் நீ அவ்வாறு கூறமாட்டாய் என முழு நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது. ஆனல், அவ்வாறு நீ கூறிவிட்டாலோ அந்தோ.........! என்று கூறிச் சடக்கென மனந் தாளாது, பேச நாவெழாது நிறுத்திவிட்டான். இவ்வாறு எதிர்பாராத விதம் தன் ஆருயிர்க் காதலனகிய அவ்விளைஞன் கேட்கவே அம்மடக்கொடி மூர்ச்சையுற்றனள். சற்று நேரங் கழித்து உணர்வு திரும்பிய அவள் பதிலளிக்கச் சிறிது நேரம் தயங்கினள். ஆனல் மறு நிமிடமே தன் செங்கனிவாய் திறந்து யாழிசைக்குரலில் கண்களில் நீர் ததும்ப, நீர் கேட்பது அந்தோ? என் மனதிற்கு எவ்வளவு சங்கடத்தை யுண்டுபண்ணி விட்டது தெரியுமா? எது எப்படியானலும்—உலகமே தலைகீழாய்ப்புரண்டு விட்ட போதிலும்—நான் அவ்வாறு எக்காலும் கூறமாட்டேன் என்பதை நீர் உறுதியாய் நம்பலாம். அப்படிக்கூறுவதினும் நான் இவ்விணடியே இறப்பது மேலானதாகும் என்பது எனது உயர்வான எண்ணம். ஆனலும் நான் அவ்வேறு மனிதனைக் கலியாணம் செய்துகொள்ளவே வேண்டுமாம். இதனல் நேரிடக்கூடிய பயனை என் தந்தை அறியமாட்டார் எனவே நினைக்கின்றேன்" என்று தேறுதலாக மொழிந்தாள். இதைக் கேட்ட அக்கணமே அவ்வாலிபன் சந்தோடப் பூரிப்பினல் ஒரு குதி துள்ளிக் குதித்தான். அவன் முகத்தில் பொலிவு பிறந்தது. உடனே புன்முறுவல் பூத்த முகத்தோடும், "எனது ஆருயிர்க் காதலி! நீ என்னை இன்னும் முற்றிலும் கைவிடவில்லை என்பதை அறிய என் மனம் எவ்வளவு மகிழ்ச்சி யுறுகின்றது தெரியுமா? நீ இன்னும் உன் நம்பிக்கையை யிழந்து விடாதிருக்கும் வரை நானும் அவ்வாறே இருந்து வருவேன். காதலின் வல்லமையை எவரே அறியாதவர்? அது குறுக்கிட்ட காரியம் ஏதேனும் முடிவு பெருது போனதும் உண்டோ? அது கிடக்கட்டும். நீ பிறனெருவனை மணம் செய்யவேண்டி வற்புறுத்தப் பட்டதாகக் கூறினயே. அதன் வரலாற்றை எனக்குச்சுருக்கிச் சிறிது விளக்கமாகக் கூறலாமோ? என்று ஆவலோடும் வினவினன் அவ்விளைஞன். "ஆம்! நானும்

அதைக்கூறவே யிருந்தேன் என்று சொல்லிவிட்டுப் பின் வருமாறு அவ்வங்கனே கூறலுற்றுள் :—

"எனது தந்தை சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பே இப்போது எனக்குச் சிற்றன்னேயாய் விளங்கும் கோகிலாம்பாளே மணம் செய்து கொண்டனர் என்பது நீர் அறிந்த விஷயம். அவளது தமையன் புதல்வனுன ஜெகந்நாதன் என்ற வாலிபனேயே நான் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென இப்போது வற்புறுத்தப்படுவது. இதனேயே நேற்றிரவு என் தந்தை என்னிடம் கூறி நான் அவரது புத்திரி என்ற நிலேமையில் அவருடைய விருப்பிற்குத் துரோகம் செய்யச் சிறிதும் எண்ணக் கூடாதென்றும், உம்மை இனி எக்காரணத்தை முன்னிட்டும் சந்தித்துப்பேசவோ அன்றி நெருங்கிப் பழகவோ கூடாதெனவும் கண்டிப்பான கட்டளே யிட்டனர். ஏற்கனவே ஏதோ சிற்சில முகாந்தரம் பற்றி என்னே உமக்குக் கொடுக்க விருப்பமற்றிருந்த எனது பிதா, தேசீய இயக்கத்தில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்ததன் பலனுய் ஆறுமாதச் சிறைவாசக் கடுந்தண்டனேயுற்ற உமக்கு என்னே யளிப்பது "கிளியை வளர்த்துப் பூனேயின் வாயில் கொடுப்பது" போல் மிகவும் இழிவானதென்றும், தனது தமையன் மகன் ஜெகந்நாதனுக்கே என்னே மணம் புரிவிக்க வேண்டும் என்றும் இத்தகைய வற்புறுத்தலான தலேயணே மந்திரோபதேசங்களும் ஏறவே இவ்வாறு கூறியது ஒரு வியப்பாகாது. எனது பிதா இட்ட கட்டளேயை நான் மறுக்க இயலாதவளாய் அவ்வாறே செய்வதாக அவருக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டேன். இதனேத் தங்களுக்கு அறிவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவ்வேளேயில் என் பெற்ருேர் சிறிதும் அறியாத விதம் வேலேக்காரி குமுதத்தின் உதவியால் எனது கடிதத்தில் கண்டபடி இங்கு வந்து தங்களேச் சந்தித்தேன். இப்போது எனது நிலேமை "இருதலேக்கொள்ளி எறும்பு" போன்று இருக்கின்றது. ஒரு புறம் பார்த்தால் காதல் முறிவு. மற்ருெரு பக்கமோ தந்தைக்குத் துரோகம். ஆகவே, காதல்வலிதோ ? பாசம் பெரிதோ ? என்பதை அறிய முடியாமல் தத்தளிக்கின்றேன். என்ன தான் யான் என் தந்தையின் கட்டளேக்கு ஒப்புக்கொண்டாலும் ஜெகந்நாதன் என்ற அவ்வாலிபனே மணப்பதென்பது என்னவோ முடியாத விஷயமே. தங்களேப்போலவே நானும், மணந்தால் தங்களே யடைந்து இன்புறுவது. இன்றேல் மற்ருெருவரை விவாகம் செய்துகொள்ளுமுன்னமே தற்கொலே செய்து கொண்டேனும் இறந்தொழிவது என்று நெடுநாட்களுக்கு முன்பு தானே உறுதி செய்து கொண்டுவிட்டேன். இம்மன உறுதியை எவரும் எள்ளத்தனேயும் அசைக்க முடியாது" என்று கனிவோடும் நவின்றனள். இதைச் செவியுற்ற அவ்விளேஞன், கண்மணி ! நினது நிலேமை தெரிந்த நான் உன்னே அணுவளவும் குறை கூறவோ அல்லது வெறுக்கவோ மாட்டேன் எபதை நீ நிச்சயமாக நம்பலாம். ஆனுலும், உன்னேக் கண்டு இனி களிக்கக் கூடாது என்ற அவ்விஷயம் மட்டும் நான் பொறுக்க லாற்ருததே.

இருந்தாலும் நம்மிருவர் நன்மையையும் கருதி அதனைச் சந்தோஷத் துடனும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எதற்கும், நாம் இருவரும் வருங் காலத்து இன்ப வாழ்க்கையை நம்பிக்கையோடும் எதிர்பார்த்து அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளைப் பணிந்து பரவி யிருப்போம். கடவுளை நம்பினோரும் கைவிடப்படுவது எங்கேனும் உண்டோ ? சரி, நீ வந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாய் விட்டது. நான் இன்றே தேசியப் பிரசார நிமித்தம் இவ்வூரை விட்டகல வேண்டியிருக்கின்றது. திரும்பி வருவதற்குக் குறைந்தது ஒரு மாத மேனும் ஆகுமென்று எண்ணுகின்றேன். என்றும் என் அகக் கண்ணிடத்தே விளங்கும் உன் உருவங்கண்டு எனது ஆவலை யடக்கிக் கொள்ளுவேன். இதுவே நாம் விடைபெற்றுப் பிரியும் கடைசிச் சந்திப்புப்போலும் !'' என்று 'நம்பிக்கையோடும் விசனத் தோடும் கூறி நிறுத்தினன். அக்கணமே காதலரிருவரும் களிப்பு மேலீட்டால் மார்புறத்தழுவி, இதழொடு இதழ் பொருத்தி ஒரு நிமிட நேரம் தங்களை மறந்தவராய் அவ்வின்பானுபவத்தில் ஈடுபட் டிருந்தனர். மறுகணமே, அம்மடமங்கை கண்களினின்றும் முத்துப் போல் நீரரும்ப வாஞ்சையோடும் தன் ஆர்வலனிடம் விடைபெற்று வந்த வழியே திரும்பிச் சென்றனள். கண்ணுக்கு மறையுந்தனையும் அவள் சென்ற வழியே தன் கண்ணைச் செலுத்தியிருந்த அவ்விளைஞ னும் பின்பு அவ்விடம் விட்டுத்திரும்பலானன். அவன் அழகிய கண் களிடத்தே யிருந்து கண்ணீர்த் துளிகள் சிதறிக்கீழே விழுந்தன. என்னே ! காதலர் பிரிவின் துயர் ! மறுநிமிடம், அவர்கள் சம்பா ஷணை முழுதும் செவ்வனே கேட்டுக்கொண்டிருந்த ஒரு நெட்டை யான உருவம் அருகிலிருந்த நாணற்புதரினின்றும் கிளம்பி வேறு வழியே சென்று விட்டது.

(தொடரும்)

விகடப்பா

கிறள்.

(1) தின்றதனல் ஆய பயனென்கொல், ஏப்பந்தான்
நன்று வராஅ தெனின்.

(2) பயற்றம் பருப்புருண்டை பத்தெட்டுத் தின்றால்
வயிற்றுவலி மாற்றலரிது.

(3) நீதி எனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
மீதி யிலாது கொளல்.

(4) பாராதார் இல்லாத போழ்துசர்க் கார்வேலை
பார்ப்பார்க்கும் ஈயப்படும்.

(5) பெறுமவற்றுள் யாமறிவதில்லை ; உறுபொழுதில்
காப்பி டீ யல்ல பிற. (பஞ்சாமிர்தம்)

"Our Secret Foes and Fight for Health."

"நமது அந்தாங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும்."

ஸ்ரீமாந் எ. சோக்கலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியது.

(காபி ரைட்)

(முதல் மலர் 589-வது பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம் 4.

கொசுக்களால் பரவும் வியாதிகள்.

சில பூச்சிகள் கடிப்பதினால் அக்கடிகளின் மூலமாகச் சில வியாதி வித்துக்கள் தேகத்தில் புகுந்து விடுகின்றன வென்று நாம் முன்னமே வாசித்திருக்கின்றோம். ஒரு பூச்சி ஒருவனைக் கடிக்கும்போது, அது ஒரு காயத்தை யுண்டாக்குகின்றது. பூச்சியினுடம்பினுள் கிருமிகளிருக்கு மாயின் அதன் உடம்பிலிருந்து அக்கிருமிகள் அக்காயத் துள் புகுந்து, அங்கே வளர்ந்து தேகத்தில் வியாதியை யுண்டாக்குகின்றன. எல்லாப் பூச்சிகளுமே வியாதிக் கிருமிகளைக் கொண்டுபோகிறதில்லை. ஆனால், இவ்விதமாக நமக்குப் பெரும்பான்மையும் தீங்குசெய்வன கொசுப் பூச்சிகளும் (Mosquitoes) தெள்ளுப் பூச்சிகளுமே (Fleas) யாம். கொசுக்கள் தாம் மலேரியா என்னும் விஷசுரத்திற்கும் (Malarial Fever) முடக்குசுரம் (Dengue Fever) முதலியவற்றிற்கும் காரணமாகின்றன. தெள்ளுப் பூச்சிகள் மகாமாரியென்னும் பிளேக் (Plague) நோயைப் பரவச் செய்கின்றது. அநேக ஐரோப்பிய பண்டிதர்கள் மூட்டுப் பூச்சிகளு (Bugs) ம் பேன்களும் சில வியாதிகளுக்குக் காரணமாகின்றன வென்று நினைக்கின்றனர். எவ்வாறாயினும், இப்பூச்சிக ளெல்லாம் நமக்கு சங்கடமானவையே யாம். ஆகையால், ஒவ்வொருவரும் அவற்றை வீட்டில் சேரவொட்டாமல் தங்களால் இயன்றவரையுங் காத்துக் கொள்ளல்வேண்டும்.

மலேரியா என்னும் விஷஜுரம்.

மலேரியா சுரக் கிருமி (The Germ of Malaria) இரத்தத்தில் சேர்ந்து சீவிக்கிறதினால் மலேரியாசுரம் உண்டாகின்றது. மலேரியா சுரக்கிருமி இரத்தத்தில் சேருகிற போது, அது படிப்படியாய் வளர்ந்து பெரிதாகின்றது. அது கடைசியாக அநேக இளங்கிருமிகளாய்ப் பிரிகின்றன. அவ்வாறு பிரிந்த ஒவ்வொரு இளங்கிருமியும் வளர்ந்து பெரிதாகி அநேகங் கிருமிகளாகப் பிரிகின்றன. அவை

யிவ்விதமாக இரத்தத்தில் வளருவதும் பிரிவதுமாகவே யிருக்கின்றன. வளர்ந்த கிருமிகள் இ...ங்கிருமிகளாகப்



இப்படம், ஒரு மலேரியா கிருமி இரத்தத்தில் அநேகங் கிருமிகளாக எப்படிப் பிரிகிறதென்பதைக் காட்டுகின்றது.

பிரிகிறபோது, அவை இரத்தத்தில் விஷத்தை யுண்டாக்குகின்றன. அவ்விஷந்தான் குளிரையும் சுரத்தையுங் கொண்டு வருகின்றது. இதுதான் மலேரியா சுரமாம்.

மலேரியா சுரக்கிருமிகள் எப்படிப் பரவுகின்றன.

மலேரியா சுரமிருக்கிற ஒருவனிடமிருந்து மலேரியா சுரம் நம்மை நேராகத் தொற்றுகிறதில்லை. மலேரியா சுரமிருக்கிறவ னிருக்கும் அறையில் நாமிருக்கலாம். அதனுலும் அந்நோய் நம்மைப்பற்ருது. ஆனுல், கோசுக்கள், மலேரியா சுரமிருக்கிறவ னிடமிருந்து மலேரியாக் கிருமிகளைக் கோண்டுவந்து நம்மைக் கடிக்கும்போது தான் நம்முடைய உடம்பினுள் அக்கிருமிகள் சேர்ந்து விடுகின்றன.

மலேரியா சுரக்கிருமிகளைக் கோண்டுபோகிற கோசுப்பூச்சி.

கொசுக்களில் பல சாதிகளுண்டு. அவ்வெல்லாச் சாதிக் கொசுக்களுமே மலேரியாசுரக் கிருமிகளைக் கொண்டு போகின்றனவென்று நினைக்கக் கூடாது. இரண்டு சாதிக்

மலேரியா சுரத்திற்குக் காரணமான கொசுக்களின் உற்பத்தியையும், அவற்றைத் தொலைக்கும் வழிகளையும், அச்சுரத்திற்கு சிகிச்சை முதலியவற்றையும் விரிவாக எழுதியிருக்கும் "கொசுக்களும் மலேரியாவும்" என்ற புத்தகத்தை வாசிக்க நன்கு விளங்கும். இதன் விலை அணு 6. இது சென்னை, வண்ணுரப்பேட்டையில் World Welfare Company யில் கிடைக்கும்.

கொசுக்கள் தாம் சுரக்கிருமிகளைக் கொண்டு போகக்கூடும். இவ்விரண்டு சாதிகளுள் ஒருசாதிக் கொசுமாத்திரம் மலேரியாசுரக் கிருமிகளைக்கொண்டு போகின்றது. இதனை அனோபிலிஸ்கொசு (Anophels Mosquito) என்று சொல்லப்படும். கீழ்வரும் படத்தைப் பார்க்க. அனோபிலிஸ் கொசு சாதாரண கொசுவினின்றுஞ் சிறிது வித்தியாசப் படுகிறது.



(A) மலேரியாசுரம் உண்டாவதற்குக் காரணமான அனோபிலிஸ் கொசு ; அதன் இரக்கைகளின்மேல் புள்ளிகளிருக்கும்.

(B) சாதாரணக் யூலெக்ஸ் கொசு. இவை இரண்டும் சுவரின் மேல் தங்கும் நிலைமை.

அனோபிலிஸ் கொசு எல்லா இடங்களிலுங் காணப்படுவதில்லை. எங்கே அனோபிலிஸ் கொசுக்களில்லையோ அங்கே சனங்களுக்கு மலேரியா சுரமில்லையாம்.

அனோபிலிஸ் கோசு மலேரியா சுரக்கிருமிகளை எப்படிக் கோண்டு போகின்றது.

ஒருகொசு ஒருவனைக் கடிக்கும்போது அதன் நீண்ட மூக்கினால் அவனுடம்பின் தோலைக்குத்தி இரத்தத்தை யுறிஞ்சுகின்றது. அவ்விரத்தத்தில் மலேரியா சுரக்கிருமிகளிருக்குமானால் அவை இரத்தத்தோடு கொசுவின் வயிற்றில் செல்லுகின்றன. அக்கிருமிகள் கொசுவினுடம்பில் வளர்ந்ததும் அநேகங் கிருமிகளாகப் பிரிகின்றன. அவற்றுள் சில கிருமிகள் கொசுவின் உமிழ்நீரிற் (Salina) கலந்து, அக்கொசு இன்னொருவனைக் கடிக்கும்போது, அவ

னுடைய இரத்தத்தில் சேர்ந்து விடுகின்றன. பிறகு அவ னுக்கு எறக்குறைய ஒரு வாரத் தில் குளிருண்டாகின்றது.



(கொசுவினுடம்பின் உட்பாகம். மலேரியா சுரக்கிருமிகள் வயிற்றிலிருந்து உமிழ்நீர்க் கோளங்களுக்குச் செல்லுகின்றன. பிறகு அக்கிருமிகள் கொசுவின் மூக்கின்வழியாய்க் கொசு கடிக்கிற மனித னுடம்பில் புகுகின்றன.)

அப்போது அவன் தனக்கு மலேரியா சுரமிருக்கிறதாகத் தெரிந்துகொள்ளுகிறான்.

மலேரியா சுரத்தைத் தடுப்பதெப்படி.

மருந்தால் கொல்லப்படும் சில வியாதிக்கிருமிகளுள் மலேரியாசுரக் கிருமியு மொன்றாகும். வாந்திபேதிக் கிரு மிகள் (Cholera germs) அல்லது க்ஷயரோகக் கிருமிகள் (Tuberculosis germs) நமது தேகத்துட் புகுந்து அவற் றால் நாம் பீடிக்கப்படும்போது, வைத்தியர்கள் (Doctors) சில சமயம் தேகம் மிகவும் பலமுள்ளதாக விருக்கும்படி மருந்து கொடுக்கிறார்கள். இவ்வித சிகிச்சை வியாதிக் கிருமிகளைக் கொல்வதில் தேகத்திற்கு அனுகூலமாகின் றது; ஆனால் அம்மருந்தே வியாதிக் கிருமிகளைக் கொல்ல முடியாது. அவ்வேலை இரத்தத்தினால் தான் முடியும். மலேரியாவில் சுரக்கிருமிகளைக் கொல்வதற்கு மருந்துண்டு. அது குவைனாமருந்து (Quinine). நம்முடைய தேகத்தில் மலேரியா சுரக்கிருமிகளிருந்தால் குவைனா மருந்தைச் சாப்

பிடல்வேண்டும். இம்மருந்து மலேரியா கிருமிகளைக் கொல்வதில் இரத்தத்திற்கு உதவி செய்கின்றது.

கோசு திரைகளை யுபயோகித்தலால் மலேரியாசுரந் தடுக்கப்படுகின்றது.

இரவில் அனோபிலிஸ் கொசுக்களினால் அபாயம் நேரிடுகின்றது; ஏனெனின், அவை இரவில் எங்கும் பறந்து திரிகின்றன. அனோபிலிஸ் கொசு நம்மைக் கடித்தாலொழிய மலேரியா சுரம் வரமாட்டாது; ஆகையால், அவை நம்மைக் கடிக்கும்படி கொசுத் திரைகளில்லாமல் தூங்குவது நம்முடைய தவறேயாகும்.

(கொசுத்திரை யில்லாமல் தூங்குவதால் அமைதியான தூக்கமில்லை. மலேரியா சுரமுண்டாவதற்கும் இடமுண்டு.)

மலேரியா நோயாளியைக் கோசு கடிப்பதினின்றுந் தடுத்துக்கொள்ளல்.

ஒருவனுடைய இரத்தத்தில் மலேரியா கிருமிகளிருந்து அவனை ஒருகொசு கடித்தாலொழிய அக்கொசு மற்றொருவனுக்கு மலேரியா சுரத்தை யுண்டாக்க முடியாது; ஆகையால், மலேரியா நோயாளி கொசுவலைக்குள் தூங்க வேண்டும்; அன்றியும், அவனுடைய இரத்தத்திலுள்ள மலேரியா வித்துக்கள் சாகும்படிக்கு அவன் குயினை மருந்தைச் சாப்பிடவேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஏனெனின், ஒருவீட்டில் ஒருவனுக்கு மலேரியா சுரமிருந்தால் அவ்வீட்டிலுள்ள எல்லாக் கொசுக்களும் தங்கள்

உடம்புகளில் மலேரியா கிருமிகளைக்கொண்டு விடுகின்றன. பிறகு சீக்கிரமாகவே அவ்வீட்டிலுள்ள மற்றவர்களும் மலேரியா நோயாளிகளாய் விடுகின்றனர். எந்த வீட்டிலும் எவருக்கும் மலேரியா சுரமில்லையாயின், கொசுக்களுக்கும் சாதாரணமாக மலேரியா கிருமிகளில்லாமற் போய் விடுகின்றன; அதனல், ஒருவருக்கும் மலேரியா நோயுண்டாவதில்லை. நம்முடைய குடும்பத்தில் எவருக்கேனும் அல்லது நமக்குச் சமீபத்தில் வசிக்கும் அயலாருக்குள் எவருக்கேனும் மலேரியா வியாதியிருந்தால் அவரைக் கொசுவலைக்குள் தூங்கவும் குவைனு மருந்தைச் சாப்பிட



(கொசுத் திரைக்குள் தூங்குவதால் அமைதியான தூக்கமுமுண்டு மலேரியா வியாதி தொற்றுவதற்கு மிடமில்லை.)

வும் வற்புறுத்திச் சொல்லவேண்டும். இப்படிச் செய்வதினால் மலேரியா நோயாளியினிட மிருந்து கொசுக்கள் மலேரியா வித்துக்களைக் கொண்டு போகாமலும் அக்கம் பக்கத்திலுள்ள மற்றவர்களுக்கும் மலேரியா வியாதியைத் தொற்ற வைக்காமலு மிருக்கக்கூடும்.

மலேரியாவைத் தடுப்பதற்கு நல்ல உபாயம்.

மலேரியா வியாதி பரவுவதினின்றுந் தடுப்பதற்குக் குவைனா மருந்தும் கொசுத்திரையும் உதவியாகும்; ஆனால், மலேரியாவைத் தடுப்பதற்கு மேலானதும் நிலையானதுமான வழி கொசுக்களைக் கொன்று விடுவதேயாம். கொசுக்களை முற்றுந் தொலைப்ப தெப்படியென்று இதற்கு அடுத்த அத்தியாயத்தில் வாசித்துத் தெரிந்து கொள்வோம்.

முடக்குசுரம் (Dengue Fever.)

முடக்கு சுரமென்பது மலேரியா சுரத்தைப்போல அவ்வளவு கொடியது மல்ல, அநேக மரணங்களையு முண்டாக்குவது மல்ல. சில தேசங்களில் இந்நோய் சாதாரணமாயிருக்கின்றது. இதனால் சனங்கள் அடிக்கடி துன்ப முற்று மிகவும் பலவீனராகி விடுகின்றனர்; அன்றியும், கைகால் பிடிப்புண்டாகி நடக்க முடியாமற் போகின்றனர். அநேக வருஷங்களாக இந்நோயின் காரணம் யாருக்குந் தெரியாதிருந்ததால் அதனைத் தடுக்கு முறை தெரியாதிருந்தது. ஒரு பட்டணத்தில் ஓரேகாலத்தில் அவ்வியாதி அநேக ஜனங்களைப் பிடிக்கிறதினால் அதனை ஐரோப்பிய வைத்திய பண்டிதர்கள் தொற்று வியாதியா யிருக்கவேண்டுமென்று அறிந்தனர்; ஆனால், வியாதி வித்து ஒருவனி... மிருந்து மற்றொருவனுக்கு எப்படிப் போகிறதென்று அவர்கள் அறிந்துகொள்ளக் கூடவில்லை. இப்போது இவ்வியாதி வித்தைக் கொசுக்கள் கொண்டு போகின்றனவென்று நிச்சயிக்கின்றனர். முடக்கு சுரத்தை யுண்டாக்குங்கொசு அனோபிலிஸ் (Anopheles) கொசுவன்று. அது சாதாரண கொசுவாகும் (Culex-க்யூலெக்ஸ்) கொசுவலைக்குள் தூங்குவதினாலும் கொசுக்களை அழித்து விடுவதினாலும் முடக்குசுரமும் மலேரியாசுரமும் வராமற்படி நம்மை நாம் காத்துக்கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

பராசக்தி

ஸ்ரீமாந் கி. வ. ஜெகந்நாதன் எழுதியது.
(இராகம் ஆநந்த பைரவி—சாப்பு தாளம்).

1. வெள்ளையி மாலயத் துச்சியி ருப்பாள்
        வீரர் பணைத்தடந் தோளி லிருப்பாள்
    கொள்ளை யன்புகு லாவிய பக்தர்
        கோதிலா உள்ளமாம் பூவி லிருப்பாள்
    அள்ளு முயற்சிகொள் ஆற்றலி லுள்ளாள்
        அன்புரு வாம்சிவன் பக்க லிருப்பாள்
    எள்ளிய பேடிக ளுள்ளத் திருக்காள்
        எங்கள் குலதெய்வம் ஆம் **பராசக்தி.**

2. சிங்க முதுகினி லாசனங் கொள்வாள்
        சீதர னுக்கொரு தங்கையாய் வந்தாள்
    வெங்கண் அராவினைப் பூண்எனப் பூண்டாள்
        வீரச் சுவைமிகும் பாமாலை ஏற்பாள்
    எங்கள் அன்னை தெய்வம் இணையென்ப தில்லாள்
        ஏதறி னும்பக்தர்க் கேற்றன ஈவாள்
    திங்கள் தனைமுடி தன்னிலே வைத்தாள்
        தேசுரு வாம்எங்கள் மேம் **பராசக்தி.**

3. வெற்றியி லேவெறி கொண்டிருப் பாளெம்
        வேதனை போக்குவள் வெற்றிய ளிப்பள்
    பற்றற்ற யோகியர் பங்கில் இருப்பள்
        பாயும் புலியெனக் கோபம்சில் போழ்தில்
    எற்றிக் குதிக்கவே அசுரரை மாய்ப்பள்
        ஈச்வரி சாம்பவி யாமளை நீலி
    நற்றவர் சித்தர்கள் நாடிய தேவி
        நாயகி யாம் எங்கள் அருட் **பராசக்தி.**

4. 'பாரத' நாட்டினர் பாடிடும் சக்தி
        பாங்குற அன்னவர் தேடிடும் சக்தி
    பாரதன் மீதிலே வஞ்சகர் தம்மைப்
        பாழ்படுத் திநர கக்குழி சேர்ப்பள்
    மாரதர் போற்றிய மாண்புறு சக்தி
        மாசற்ற நெஞ்சினர் துதித்திடும் சக்தி
    'பாரதி' பாடிய பழம்பெருஞ் சக்தி
        பாவங்கள் தீர்க்கும்எங் கள் **பராசக்தி.**

5. வாழ்த்திடின் நந்தம் மிடிமையைப்போக்கி
        மாண்புறு **சுதந்தர வாழ்வை** யளிப்பள்
    பாழ்த்த அடிமையைப் போக்கி யருள்வள்
        பாரத மக்களே ! அவளைப்பா டுங்கள்
    ஆழ்த்திய துன்பம் அடியொடே போக
        அன்னை யவளைத் துதித்து நல் வீரம்
    சேர்த்து முயற்சிகள் செய்திட எழுமின்
        திண்ணமா யருள்வா ளெம் **பராசக்தி.**

சிவ ஸ்தலங்கள்

ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வராயபிள்ளை, M. A., எழுதியது.

மக்க ளாயினோர் வழிபட்டுப் பிறவி வேரறுத்து உய்யும் பொருட்டு எல்லாம் வல்ல இறைவன் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்தலங்கள் நமது நாட்டிற் பலவுள. வழிபட்டுப் பரவினாற் கதி பெறலாம் என்பதைத் தாமே வழிபாட்டினாற் காட்டினார்கள் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள் என்னும் பெரியோர்கள். இவர்கள் தலங் கள் தோறும் எழுந்தருளி அங்கு வீற்றிருக்கும் சிவ பரஞ் சுடரை நாவார உள்ளங் குளிரத் துதித்தார்கள். இவர்கள் திருவாய் மலர்ந்த பாடல்கள் தேவாரம் எனப்படும். தேவாரப் பதிகங்களுட் பல செல்லேறி அழிபட்டன. தேவாரப் பாடல்கள் எஞ்சி நின்றன சிலவே. எஞ்சிநின்று இப்போது அச்சிடப் பட்டுள்ள பாடல்களைப் பெற்ற ஸ்தலங்கள் 274. இவ் விருநூற்று எழுபத்து நான்கு தலங்க ளும் எவை? அவை எங்குள்ளன! அத்தலங்களின் விசேடங்கள் யாவை! என்பன "சிவஸ்தல மஞ்சரி" என்னும் நூலிற் பரக்கக் காணலாகும். இத்தலங்களின் விசேடங்களைக் காணும் போது சகல ஜீவராசிகளும் வழிபாட்டினாற் கதிபெறலாம் என்பது பெறப்படும். தேவர், முனிவர், மானுடரேயன்றி விலங்குகள், பறவைகள் முதலி யனவும் பூசித்துப் பேறுபெற்ற தலங்கள் உள. அவை பூசித்த காரணத்தாலே அத்தலங்களுக்குப் பெயர் ஏற்பட்டன என்பதுங் காண்கின்றோம். உதாரணமாகத் தேவர்களுள் திருமால் பூஜை செய்து பேறு பெற்ற காரணத்தால் திருமாற்பேறு என்னும் தல முளது. இது காஞ்சீபுரத்திலிருந்து 7 மைல் தூரத்திலுள்ளது. இங்குத் திருமால் பூஜைசெய்து சக்ராயுதம் பெற்றனர்.

"பொருமாற் றின்படை வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு வழிபடுங்
கருமாற் கின்னருள் செய்தவன் காண்டகு
திருமாற் பேறு தொழ வினை தேயுமே." (தேவாரம்.)

முனிவர்களுள் அகத்தியர் பூஜை செய்து வழிபட்ட தலம் "அகத்தியான்பள்ளி" என்பது. இது வேதாரணியத்துக்குத் தெற்கு ஒருமைல் தூரத்திலுள்ளது. அகஸ்தியர் விக்கிரகம் கோயிலி லிருக்கிறது. அசுரர்களுள் இடும்பன் பூஜைசெய்த ஸ்தலம் இடும்பா வனம். இது திருத்தருப்பூண்டிக்கு 10 மைல் தூரத்திலுள்ளது. திரிசிரன் வழிபட்ட நகரம் திருச்சிராப்பள்ளி. மானுடருள் நளன் பூசித்தது திருநள்ளாறு, இது காரைக்காலுக்கு மேற்கு 3 மைல் தூரம். இராமர் பூசித்தது இராமேசுரம். விலங்குகளுள் ஆனை

பூசித்த திருவானைக்கா ; சூரங்கு பூசித்த குரங்காடுதுறை ; பசு பூசித்த திருவாமாத்தூர், ஆவூர் ; புலி பூசித்த எருக்கத்தம் புலியூர், ஓமாம் புலியூர், திருப்பாதிரிப் புலியூர், உள்ளன. பறவைகளுள் ஈ பூசித்த ஈங்கோய்மலை, நாரை பூசித்த திருநாரையூர், மயில் பூசித்த மயிலாப்பூர், மாயூரம் உள்ளன.

இனி, சிவஸ்தலங்களுள் நினைக்க முத்தியளிக்கும் தலம் திருவண்ணமலை. தெரிசிக்க முத்தி கொடுக்கும் தில்லை (சிதம்பரம்). பிறக்கக் கதிதரும் திருவாரூர். இறக்க வீடளிக்கும் காசி. "முத்தித் தலங்கள்" என வழங்கும் தலங்கள் சிதம்பரம், காசி, திருவாரூர், மாயூரம், திருமுல்லைவாயில், மதுரை, விருத்தாசலம், திருநெல்வேலி, திருக்களர், காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம், வேதாரணியம், திருவண்ணமலை, சீகாளத்தி, திருவாஞ்சியம் என்பன. தலங்களுள் பஞ்சபூத ஸ்தலங்கள் என வழங்குவன திருவாரூர் அல்லது காஞ்சீபுரம்—பிருதிவி ஸ்தலம் ; திருவானைக்கா—அப்பு ஸ்தலம் ; திருவண்ணமலை—தேயு (அக்கினி) ஸ்தலம் ; திருக்காளத்தி—வாயு ஸ்தலம் ; சிதம்பரம்—ஆகாச ஸ்தலம். நடராஜப் பெருமானுடைய விசேஷ சந்நிதியை யுடைய ஸ்தலங்கள் பஞ்ச சபை என வழங்கும். அவை திருவாலங்காடு—ரத்னசபை ; சிதம்பரம்—கனகசபை (பொன்னம்பலம்) ; மதுரை—ரஜதசபை (வெள்ளியம்பலம்) ; திருநெல்வேலி—தாமிரசபை ; திருக்குற்றாலம்—சித்திரசபை. தக்ஷிண கைலாசம் என வழங்கும் பெருமைவாய்ந்த தலங்கள் மூன்று—அவை—திருக்காளத்தி, திரிசிராப்பள்ளி, திருக்கோணமலை (இலங்கைத் தீவிலுள்ளது). தியாகராஜ மூர்த்தியின் விசேட சந்நிதியுள்ள தலங்கள் வடக்கே திருவொற்றியூர், திருவான்மியூர், திருக்கச்சூர், தெற்கே—திருவாரூர், திருநள்ளாறு, நாகபட்டிணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், வேதாரணியம். இவை ஏழும் "சத்த விடங்கத்தலம்" என வழங்கும். பாற்கடலுள் வாழு மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பொருள்களை விரும்புவதுபோல இத்தகைய அரும்பதிகளை உடைய நாட்டிற்பிறந்த நாம் ஏனோ வீண்பொருள்களை விரும்பி வீட்டின்பத்தை இழப்பது? மேற்சொன்ன தலங்களைக் காணும் பாக்கியமில்லா விடினும் "திருவண்ணமலை" என்னும் தலம் ஒன்றை நினைந்தேனும் உய்யும் வழி தேடுவோம். திருஞானசம்பந்தப் பெருமான் பாடியுள்ள பின்வரும் பதிகத்தின் கருத்தறிந்து அதற்குத் தக நின்று கதி பெறுவோம்.

"நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் ; யாரறிவார்
சா நாளும் வாழ்நாளும்? சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்பப் புகழ் நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே."

நாடு நீங்கிய*

ஸ்ரீ மூல பூபதி

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை யவர்கள் எழுதியது.

“வலந்துளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூம் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்த”

சேரர் குல திலகனாய்

விளங்கிய எங் கோமான்

“போற்றர்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியும் தெறலும் அளியு முடைய”

ஸ்ரீமூலபூபதி, ஏறத்தாழ

நாற்பது ஆண்டு,

“பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளக்கி”

தன் குல தெய்வமாகிய ஸ்ரீபத்மநாபன் பாத நன்னிழலை அடைந்த செய்தி தென்னாட்டினைத்தையும் துயரக்கடலில் ஆழ்த்தி யதை யார்தான் அறியார்?

அறக்கடவுளாய் விளங்கிய இவ்வஞ்சியர் கோமான் செங்கோல் தாழ்த்தும் அற்றம் நோக்கியே, மறக்கடவுள் தன்வலியால் திராவிட மண்டலம் முழுமையும் வெள்ளப் பெருக்கால் அழித்தனனோ?

பெருமக்கள் உயிர்துறக்குங்கால் இத்தகைய உற்பாதங்கள் உண்டாதல் இயல்பென ஆனறோர் கூறுவர். இஃது இன்று மெய்யே ஆயிற்று.

நம் மன்னர் பெருமான் கொல்லம் 1033ஆம் கன்னிமாதம் 11உ திருமூலநாளில் அவதரித்தார். ஜனித்த பதினைராம் நாளில் தாயாராகிய பூராடந் திருநாள் லக்ஷ்மிபாய் மகாராணி நாடுநீங்கவே, ராஜசிசுவின் பராமரிப்புப் பாரம் மாதுலராகிய மார்த்தண்டவர்ம மஹாராஜா திருமேனிக்காயிற்று. சரவணச்சாமி எனப் பெயர்பெற்ற

---

* முடிமன்னர் மரணத்துக்கு நாடு நீங்குதல் என்பது வஞ்சி தேச மரபு.

பௌஸ்தாரி கம்மிஷனர், அநந்தராமய்ய ரவர்களின் மாதாவே நமது ஸ்ரீமூல பூபதியின் செவிலித்தாய். நமது கோமகனும் பிற்காலத்துத் தம்பிரான் தோழராய் விளங்கிய சரவணச்சாமியும் ஒன்றாகவே பாலுண்டு வளர்ந்தனர்.

மலையாளம், ஸம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், இந்துஸ்தானி ஆகிய ஐந்து பாஷைகளிலும் நமது திருமேனி நன்கு பாண்டித்திய மடைந்திருந்தனர். சங்கீதத்திலும் திருமேனிக்கு மிகுந்த பிரியம். மிக வசீகரமான சொல்லாற்ற லுடையவர். மலைவிழுங்கிகளான ரெஸிடன்றுகளும், கவர்னர்களும், நமது திருமேனியின் வாக்சாதுரியத்தால் கருடனைக்கண்ட பாம்புபோல் தலைதாழ்த்தியதற்குப் பல திருஷ்டாந்தங்க ளுண்டு.

கொல்லம் 1061௵ ஆவணி 5௳ நமது ராமவர்ம பூபதி அரசு கட்டி லேறினார். திருமேனியின் மாதுலராகிய ராஜபண்டிதர் (Scholar King) விசாகந்திருநாள் மஹாராஜாவும் திவான் வெம்பாக்கம் ராமய்யங்கார் அவர்களும் பல சீர்திருத்தங்கள் செய்யத் தொடங்கி, சில பூரணமாகியும் சில அபூர்ணமாகவும் இருந்த தருணத்தில் நமது ராஜவர்மபூபதி செங்கோல் தாங்க நேர்ந்ததெனினும் அரசாட்சி கைக்கொண்ட ஒரு வருஷத்துக்குள்ளேயே சீர்திருத்தங்களெல்லாம் உறுதிபெற்று நற்பயனளித்தன. ஸ்ரீமூலந் திருநாள் ஆளுகையில் திருவாழுங்கோடு (திருவிதாங்கூர்) பெற்ற சீர்திருத்தங்கள் பலப் பல; நாடு செழித்தது; குடிகளெல்லாம் க்ஷேமமாக வாழ்ந்தனர். அவர் காலத்தில் தோன்றிய ஸ்ரீமூலம் பிரஜா சபையும் திருத்தம்பெற்ற சட்டசபையும் ஜனநாயக ஆட்சிக்குக் குடிகளைப் பழக்கும் இரண்டு ஸ்தாபனங்கள்.

ஆண்டொன்றுக்கு ஒருகோடியே 80 லட்சம் ரூபா வருமான முள்ள ஒரு சமஸ்தானாதிபதியாக இருந்தும் நமது திருமேனி தம் சொந்தச் செலவுக்கென 5 அல்லது 6 லட்சத்துக்கு மேல் ஒருபொழுதும் செலவு செய்ததில்லை. ஆடம்பரமற்ற வாழ்க்கை யுடையவர். தருமசீலர்; தெய்வபக்தி மிக்கவர்.

எவருலகே ராமவர்ம ஏந்தலைப்போல்
இசைமருவி யிருந்தார்? இன்னும்
எவருலகே தருமபதி தருமபதி என எழிற்பே
ரெய்தி ஆண்டார்?
எவருலகே பூமகளும் நாமகளும் இனிதருளப்
பெற்றார்? இன்னும்
எவருலகே மாலுறங்க இப்புவிகாத்
தினிதுயர்ந்தார்? எண்ணின் அம்மா!

21034
-600 008

மதிப்புரை

சிந்தாமணி :—இப்பெயர் கொண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையை வந்தனத்துடன் வரப்பெற்ரேம். இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள். அம்மையாரைத் தமிழுலகம் நன்கறியும். தேசத் தொண்டு புரிவதையே தமது ஜீவித நோக்கமாக் கொண்டொழுகும் அம்மையார், தமிழக மாதரின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாக்கி 'சிந்தாமணி'யை வெளியிடத் தொடங்கியிருப்பது போற்றத் தக்கதே. இச் சிந்தாமணி தன் பெயருக்கேற்ப, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டோருக்கெல்லாம் அவசியமான பல நல்விஷயங்களை உடைத்தாயிருக்கிறது. சிந்தாமணியின் தமிழ்நடை மிக லளிதமாயும் அழகாயும் இருக்கின்றது. இதில் ஸ்ரீமதி சரோஜனி தேவியின் உருவப்படமும் அமைந்திருப்பது சால்புடையதே. தருணமும் சௌகரியமும் வாய்க்கப்பெற்ருல் இந்திய மாதர்கள் எத்துறையிலு மிறங்கி உழைக்கத் தகுதியுடையவர்கள் என்பதற்கு இச் சிந்தாமணியே சான்று பகரும். தமிழ்மக்களெல்லாம் இப்பத்திரிகையை ஆதரித்து அம்மையாரின் முயற்சி வெற்றியுறச் செய்வார்களென்று நம்புகின்ரேம். கிரௌண் நாலில் 32 பக்கங்கொண்ட இப்பத்திரிகையையின் வருஷ சந்தா ரூ. 5. வேண்டுவோர், சிந்தாமணி ஆபீஸ், சலிவன்ஸ் கார்டன் ரோட், மைலாப்பூர், சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தீனபந்து :—இது தீனர்களின் முன்னேற்றத்தை உத்தேசித்து வேலூரிலிருந்து வெளிபாகும் ஒருவாரப் பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந் எஸ். இ. பெட்போர்ட், B.A; L.T. நமது சகோதரரில் ஒரு பெரும்பகுதியார் தாழ்த்தப்பட்ட வகுப்பாராக இருக்கு மட்டும் நமது தேசம் உயர்ச்சியடைவது அசாத்தியமான காரியம். ஆகவே தேச முன்னேற்றத்தை விரும்புவோ ரெல்லாம் இப்பத்திரிகையை ஆதரித்தல் அவசியம். சந்தா ரூ. 4.

இந்தியாவில் கண்ணுடிச் சாமான்கள் செய்யப்படுதல்.

இந்தியாவில் வருடத்தில் 3½ கோடி ரூபா கண்ணுடிச் சாமான்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தியாவில் ஓகலி கண்ணுடித் தொழிற்சாலை என்று ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அத்தொழிற்சாலையில் பலவிதமான கண்ணுடிச் சாமான்கள் செய்யப்பட்டு வருகின்றன. தொழிற்சாலை பங்குக்காரர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. 1922-ம் வருடத்தில் அவர்களுக்குப் பங்குப் பணத்தில் 100-க்கு 9 விகிதம் லாபம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் இன்னும் பலவித சாமான்கள் அதிகமாக செய்வதற்கு மூலதனம் 2 லட்சம் ரூபாவுடன் சமீபத்தில் 8 லட்சம் ரூபா சேர்க்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலையில் விளக்கு பர்னர்களும், கையில் பிடித்துச் செல்லும் இராந்தல் விளக்குகளும் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அவ்விஷயமாகத் தேவையாயிருக்கும் மெஷின்களை வாங்குவதற்கு இந்தத் தொழிற்சாலை இன்ஜினியர் மிஸ்டர் ஓகலி ஜெர்மனிக்குச் சென்றிருக்கிருர்.

விசேஷக் குறிப்புகள்

(பல பத்திரிகைகளிலிருந்து)

திரு மங்கல மென்னும் வர்த்தகப் பேரூர் தென்னிந்திய இருப்புப் பாதையில் மதுரைக்குத் தெற்கே பன்னிரண்டு மயில் தூரத்தே யுள்ளது. இவ்வூர் பருத்திப் பயிர் செய்வதிற் சிறந்தது; இவ்விடம் ராலி கம்பெனியாரின் பண்டமாற்றுச் சாலை ஒன்றுளது. ரோஜா, சம்பங்கி, பிச்சி, மல்லிகை, மருக் கொழுந்து, வாசனைப் பொருள்கள் இல்லாத புன்செய் நிலம் கிடையாது; புன்செய் தோறும் கிணறு தான்; கிணறுகள் சுக்காம்பார் கொண்டுள்ளனவே. நீர்வளம் விருதுமா நகர்போன்று அவ்வளவுதூரம் குறைந்திலதாம். நமது சைவத் திருத்தொண்டர்களில் ஒருவராகிய ஏநாதி நாயனார் திரு மரபினராய் வித்தியாதருமம் முதலிய பல தருமங்களில் பெரும் பொருள் வழங்கிய வராகிய திருவாளர் கூழைய நாடாரவர் களது கல்லூரியும் மற்றும் நல்வள நன்னெறி நிலையங்களும் இவ் வூரை அணிபெறச் செய்கின்றன.

***

பூமி மட்டத்திற்கு 20,000 அடி உயரத்தில் சென்றால் மனித னுடைய தேக மனோ நிலைமைகள் எவ்வாறிருக்கும்? இக்கேள்விக்கு லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஒருவர் பின்வருமாறு விடையளித் திருக்கிறார்:—பூமிக்குமேல் உயரமாகச் செல்லச்செல்ல பிராண வாயு குறைந்துவருகிறது. கடல் மட்டத்தில் இருக்கும் பிராணவாயு வின் அளவில் 100-க்கு 11 வீதந்தான் 16,000 அடி உயரத்தில் பிராண வாயு பரவி யிருக்கிறது. ஆதலால் மனிதன் மேலே போகப் போக தேவையான பிராண வாயுவை உட்கொள்ளுவதற்காக மிகவும் வேகமாய் மூச்சுவிட வேண்டியிருக்கிறது. மலை உச்சிக்குச் சென்று லும் ஆகாய விமானத்தில் பறந்தாலும் ஒரேவிதமான பலன்கள் தான் ஏற்படுகின்றன. 20,000 அடி உயரத்தில் மிகவும் பிரயாசை யுடன் மூச்சுவிட வேண்டியிருக்கிறது. நாடி அதிவேகமாய் ஓடு கிறது. ஹிருதயம் படபடவென்று வெகு வேகமாய் அடித்துக் கொள்கிறது. மார்பு அடைத்துக் கொள்ளும் போல் உணர்ச்சி ஏற்படுகிறது. சில மணி நேரத்திற்கெல்லாம் கடுமையான தலைவலி உண்டாகிறது. பின்னர் மயக்கம், பசியின்மை. அத்துடன் எத் தகைய உழைப்புக்கும் தேகத்தில் வலிமை இன்றிப் போய் விடு கிறது. மனதில் ஏற்படும் மாறுதலே எல்லாவற்றையும் விட விநோதமானது. நான் ஆகாய விமானத்தில் 20,000 அடி உயரத் தில் சென்றிருந்தபோது டைப் அடிக்கும் இயந்திரம் ஒன்று என் எதிரில் இருந்தது. அதைச் செய்தவரின் விலாசம் அதன் மேல் எழுதப்பட்டிருந்தது. ஆனால் பல முறைகளில் அது என்னபாஷை யில் எழுதப்பட் டிருக்கிறதென்று எனக்குத் தெரியாமல் போயிற்று. எழுத்துக்கள் புரியவே யில்லை. கோபம் அதிகமாக வந்தது. மேல்

தோல் எங்கும் அரிப்பு எடுத்தது. சொறிந்ததின் பலனாக களைப்பு ஏற்பட்டு கைகால் அசைவற்றுப் படுத்துவிட்டேன். பூமியில் நூறு கஜம் ஓடுவதினால் ஏற்படும் களைப்பு 20,000 அடி உயரத்தில் கை காலை அசைப்பதினால் ஏற்பட்டு விடுகிறது.

***

ஆங்கிலேய மாதங்களின் பெயர்.

முற்காலத்தில் ரோம் ஜாதியாரால் அவர்கள் குல தெய்வமாகிய ஜானஸ் என்பவரின் பெயரைக் கொண்டு ஜனவரி மாதமும், ரோமர் களின் பண்டிகையாகிய பிப்ருவாராவிலிருந்து பிப்ரவரி மாதமும், ரோமர்களின் யுத்த தெய்வமாகிய மார்ஸிலிருந்து மார்ச்சு மாதமும், பனிகாலத்திற்கு மூடப்பட்டிருந்து, ஜன்னல்களைத் திறந்து வைக் கும் காலத்தை (லத்தின் பாஷையில் ஏபிணுரி என்றால் திறந்து வைப்பது என்று பொருள்) ஏப்ரல் மாதமும், அட்லாஸின் பெண் ணும் மெர்குரியின் தாயுமாகிய மாயை என்ற தெய்வத்தின் ஞாப கார்த்தமாக மே மாதமும், எல்லா ரோமர்களும் பூஜித்த ஸ்த்ரீ தெய்வமாகிய ஜுனோவிலிருந்து ஜுன் மாதமும், மகாவீரன் ஜுலி யஸ் ஸீஸர் பெயரிலிருந்து ஜுலை மாதமும், மகா சக்கிரவர்த்தி அகஸ்டஸ் ஸீஸரின் பெயரிலிருந்து ஆகஸ்ட் மாதமும், ரோமர் களின் முதல் மாதமாகிய மார்ச்சு மாதத்திலிருந்து ஏழாவது மாதத் திற்கு (ஸப்த ஏழு) செப்டம்பர் என்றும், எட்டாவது மாதத்திற்கு (ஆக்டோ-எட்டு) அக்டோபர் என்றும், ஒன்பதாவது (நோவம்- ஒன்பது) மாதத்திற்கு நவம்பர் என்றும், பத்தாவது (டெஸம்-பத்து) மாதத்திற்கு டிஸம்பர் என்றும் பெயர் உண்டாயிற்று.

***

இலங்கை கல்துமுலாவில் இருபது வயதுள்ள ஒரு பெண்மீது பத்தினியம்மன் ஆவேசம் வரும்பொழுது முற்கால சம்பவங்களைக் கூடப் பாலி பாஷையில் சொல்லுகிறாளாம்.

***

சென்னையிலுள்ள பத்திரிகைகளை விற்பதற்கென்று ஒரு ஆபீஸ் ஆகஸ்டுமீ 18உ திங்கட்கிழமை காலை 9-மணிக்கு எஸ்பளனேட்டில் திறக்கப்பட்டது. உள்ளூர் வெளியூர் அந்நியநாட்டுப் பத்திரிகைகளை விற்பதற்கென்றே இந்த ஆபீஸ் ஏற்பட்டிருக்கிறது.

***

நல்லெண்ணெயை நன்கு சுடவைத்துக் காய்ச்சி கொதிக்கும் சமயத்தில் வெற்றிலைச் சாறைப் பிழிந்து அதில் விட்டு வரும்புகையை தேள்கடி வாயில் காட்டினால் விஷம் இறங்கி விடுகிறதாம். புளியங் கொட்டையைச் சுடச் சுடச் கடிவாயில் வைத்தால் ஒட்டிக் கொள்ளு கிறதாம். சிறிது நேரம் சென்ற பின்னர் விஷமிறங்கிக் கொட்டை விழுந்து விடுகிறதாம்.

***

ஸ்விஜர் லாந்து சர்வகலாசாலைப் பரீக்ஷையில் 4 ஸ்திரீகள் உயர்தரபட்டம் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

***

ஒரு பெரிய மீன் வயிற்றில் ஒரு குழந்தையின் கை இருப்பதை கசாப்புகடைக் காரர்கள் கண்டனர். அக்கையிலுள்ள ஒரு விரலை சுற்றி ஒரு மோதிரமும் இருந்தது.

***

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சற்றேறக்குறைய ஒன்றரைக்கோடி மோடார் வண்டிகள் இருக்கின்றன. ஜனத்தொகையின்படி பார்த்தால் சராசரி ஏழு ஜனங்களுக்கு ஒரு மோடார் வண்டி வீதம் இருக்கின்றது. அயோலா பிரதேசத்தில் மட்டும் சராசரி 4 ஜனங்களுக்கு ஒரு மோடார் வீதமிருக்கின்றது. அமெரிக்காவின் உயிர் நிலை மோடாரில்தான் இருக்கின்றது.

***

உலகத்தில் ஜனத்தொகை.

டாரென்டோவில் பிருடிஷ் சங்கத்தின் கூட்டமொன்றில் ஆசிரியர் கிரிகிரி பேசுகையில் இப்பொழுது உலகத்தில் காலியாகவுள்ள இடமெல்லாம் கி. பி. 3000 வது வருஷத்தில் பூர்த்தியாகி விடுமென்றும் அப்பொழுது ஜனத்தொகை 7,0000 கோடியாக ஆகுமென்றும், ஆகாயத்திலுள்ள உப்புவாயுவின் உதவியைக் கொண்டு உணவுப் பொருள்களை ஏராளமாக அதிகரித்தால் தான் அவ்வளவு ஜனத்தொகையும் வாழ முடியுமென்றும் 1906—10 வருஷத்தில் உலகத்தின் ஜனத்தொகை அதிகரித்ததுபோல் இனியும் அதிகரிக்குமானால் 60 வருஷங்களில் ஜனத்தொகை இரட்டிப்பாகிவிடுமென்றும் சொன்னார்.

***

சிரிப்பால் வந்த செல்வம்.

மெரிடன் கனெக்டிகட் என்ற ஊரில் ஓர் தொழிற்சாலையில் மேல்பார்வை செய்துவந்த அதிகாரி 11,800 சவரன்களுள்ள தனது சொத்தைத் தன்னைக்கண்டு சிரித்துக்கொண்டே செல்லும் வழக்கமுடைய பத்திரிகை விற்கும் ஒரு சிறுவனுக்கு மரண சாஸனம் செய்துவைத்திருக்கின்றார்.

***

யானை வியாபாரம்.

1923 ; 1924-ம் வருடங்கட்கு இடையில் பர்மாவிலிருந்து குட்டிகளும் பெரிதுமாக 53 யானைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. அவைகளில் 40 யானைகள் ஜெர்மனிக்கும் 2 ஸ்டிரேட்ஸ் செட்டில்மெண்டிற்கும் மீதம் 11 யானைகளும் இந்தியாவிற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

புதிய நாவல்! வெளியாய் விட்டது!!

த ன பா க் கி ய ம்

அல்லது

தாய் தந்தையற்ற பெண்

(மிஸ்டர் ஏ. டேவிட் இயற்றியது)

இது ஓர் அற்புதமான நாவல். பழிபாவத்துக் கஞ்சாத பாதகியான "அமிர்தவல்லி" என்பாள் தன் நாத்தி மகளாகிய "தனபாக்கியம்" என்னும் தாய் தந்தையற்ற குழந்தையைக் கொல்லக் கருதி அதைக் கொலைபாளரிடம் ஒப்புவிக்க, அது "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்றபடி கொலைக்குத் தப்பி, நல்ல இடத்திற் சேர்ந்துவளர, "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற் கிணங்க ஷை அமிர்தவல்லியின் அருமை மகனே அவலமாய்ச் சாதல்; அதுகண்டு அவள் ஆருத்துயரங் கொண்டு தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதல்; ஷை கெட்ட செயலுக்கு உதவியாயிருந்த "வெள்ளைப் புடவைக்காரி" யென்பவள் வெளி வேஷங்காட்டி வெகு சாமர்த்தியமாக வேலை செய்த போதிலும் கடைசியில் "துஷ்டர்களுக்குத் தண்டனை தப்பாது" என்பதற் கொப்ப அவள் அவமானமும் தண்டனையும் அடைந்த விதம் முதலிய விருத்தாந்தங்கள் ஷை புத்தகத்தில் எளிய தமிழில் இனிமையாய் விளக்கப் பட்டிருக்கின்றன. நீதி நெறிகள்பல நிதர்சன மாக்க் காட்டப் பட்டுள்ள அருமையான நாவல். பெரியவர்களே யன்றிச் சிறுவரும் சிறுமிகளும் சிறிதும் சங்கோசமின்றி தாராளமாக வாசித்து நற்பயனடையக் கூடிய நல்ல நாவல். இத்தகைய நாவல் இதுவரையில் வெளிவந்திலது. நாவல் வாசிக்கப் பிரியப் படுபவர்கள் இத்தகைய நாவல்களையே வாங்கி வாசித்தல் வேண்டும். **விலை அணு 10. தபால் கூலி வேறு.**

2-ம் பதிப்பு! 2-ம் பதிப்பு!!

ஞா ன ா ன ந் த ன்

அல்லது

பிரளயத்தில் கண்டெடுத்த பாலன்

(மிஸ்டர் ஏ. டேவிட் இயற்றியது)

இது ஓர் இனிமையான செந்தமிழ் நாவல். இதைக்கையிலெடுத்தால் முடிக்கும் வரையில் பூமியில் இட எவர்க்கும் மனமிராதென்றால் இதில் எவ்வளவு தூரம் இன்சுவை பொருந்தியுள்ள தென்பது நன்குவிளங்கும். கதா நாயகன் கதாநாயகியின் உருவப்படம் முதலிய மூன்று அழகிய ஆப்டோன் படங்களுடையது. **விலை அணு. 12. தபால் கூலிவேறு.**

SELVAM & CO.,
480, SILVER STREET
St. Thomas Mount.

செல்வம் அண்டு கோ.,
480, சில்வர் தெரு,
பரங்கிமலை.

நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்.

பிரசித்திபெற்ற சுகானந்த மாத்திரைகள் :—வாலிப கோலத்தால் தேகத்தைக் கெடுத்துக்கொண்டவர்களுக்கு இம்மாத்திரைகள் செய்யும் குணம் அற்புதமானவை. மூளைக்கு வலுவைக்கொடுத்து ஞாபக சக்தியை விர்த்தி செய்யத்தக்க மாணவர் தோழன். **50** மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 1.

பால சஞ்சீவி :—குழந்தைகளுக்கு இது ஓர் வர ப்ரஸாதம். குழந்தைகளுக்கு உண்டாகிற சகல வியாதிகளுக்கும் சஞ்சீவியாயிருந்து குணப்படுத்தும். இருமல், ஜலுப்பு, மாந்தம், அஜீரணம், சுரம் முதலிய வியாதிகளைப் போக்கி சுகத்தைக் கொடுக்கும். புட்டி 1-க்கு அணு 8.

சுகபேதி மாத்திரைகள்.—புட்டி 1-க்கு அணு 8.

ஜ்வர மாத்திரைகள் :—இந்த மாத்திரைகள் சகலவிதமான ஜுரங்களையும் நிவர்த்தி செய்கின்றன. 30 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 1.

காசகேசரி மாத்திரைகள் :—எந்த விதமான இருமலையும் இம்மருந்து குணப்படுத்துகிறது. சுவாசகாச சம்பந்தமான ரோகங்களைப் போக்கடிக்க இதைவிட சிலாக்கியமான ஔஷதம் வேறு கிடையாது. நீடித்த இருமல், காசம், க்ஷயம், மாளாத மார்நோய், மூச்சுப்பிடிப்பு, தொண்டையில் சல சலவெனும் அரவம், தொண்டை கம்மல் முதலிய வியாதிகளுக்கு கைகண்ட மருந்து. 48 மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 1.

படைமருந்து :—இதர மருந்துகளை உபயோகித்துக் குணங்காணுதவர் ஒரு முறை உபயோகித்துப் பார்க்க வேண்டுகிறோம். டப்பி 1-க்கு அணு 4.

கேட்லாக் இனம்.

அமிர்தம் அண்டு கோ.,

தபால் பெட்டி 222, மதராஸ்.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்:—வெஸ்ட் அண்டு கோ.,

மவுண்ட் ரோட், : : சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா ஒன்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0. :

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷதசாலை, எழும்பூர், மதராஸ்.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன ஆர்டருக்கு முந்துங்கள்.

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள். உடனே எழுதுங்கள்.

குறைந்த விலை! **ஆங்கில ஆசான்** பெருத்த விஷயம்!!

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள்
தெரிந்து கொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, நோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், மிகவும் முக்கிய மானது.

இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.** தபால் செலவு அணா **6.**

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 259, தங்கசாலை தெருவு,
மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

வெளி வந்தாயிற்று ! புதிய பதிப்பு ! !

"கொசுக்களும் மலேரியா சுரமும்."

சனங்களைத் துன்பப்படுத்திப் பிராணச் சேதத்தை இவ்வபாய கரமான வியாதி ஒரு முக்கிய இனமான கொசுவால் பரவுகிற தென்று அநேக ஆங்கில பண்டிதர்கள் ஆராய்ந் தறிந்து மெய்ப் பித்திருக்கின்றனர். இவ்விஷயத்தை ஒவ்வொருவருந் தெரிந்து



கொள்ள வேண்டியது முக்கியமானதால், இம்மலேரியா வியாதி எப்படியுண்டாகின்றது? கொசுவால் எப்படிப் பரவுகின்றது? மனிதனை யெப்படிப் பற்றுகிறது? கொசுக்களை யெப்படித் தொலைப்பது? இவ்வியாதிக்குப் பரிகாரம் என்ன? என்பவற்றைப் பற்றிக் கூறும் புத்தகம் வெளிவந்திருக்கிறது. இதனை ஒவ்வொருவரும் வாசித்தறிந்து துன்பத்தை யொழித்துக்கொள்ள முயல வேண்டும். இதனுள் 22 சித்திரப் படங்கள் அடங்கியிருக்கின்றன. இதற்கு லெப்டினன்ட் கர்னல் **J. W.** காரன்வால், **I. M. S.** துரையவர்கள் முன்னுரை யெழுதியிருக்கின்றனர். இது துரைத்தனத்தார் அங்கீகரித்தது. இதன் விலை அணு **6.**

சுவாமி அபேதா நந்தரவர்களால் அமெரிகாவில் உபந்யசித்த "**Perfect Health**" "பூரண சுகம்" என்பதின் தமிழ்மொழி பெயர்ப்பு விலை அணு **1-6.** இவ்விரண்டிற்குந் தபாற்கூலி வேறு.

Manager:—**World Welfare Co,**
Washermanpet, Madras.

பம்பாய் சில்க் புடவை.

ஒரு பக்கம் நூல், மற்றொரு பக்கம் பட்டு, அசல்பெங்களூர் பட்டுப்புடவையை தோற்கடிக்கும், ரூ. 80 மதிக்கக்கூடியது. அநேகவிதமான கலர்களில் கிடைக்கும். அசல் பெங்களூர் புடவையையும் இதையும் ஒன்றாய்வைத்துப் பார்த்தாலும் வித்தியாசம் தெரியாது. கலருக்கு உத்திரவாதம். தினப்படி துவைக்கலாம்.

18 மு x $2\frac{1}{2}$ அகலம் பட்டுக்கரை பெங்களூர் முந்தாணி, விலை ரூ. **30.**

ஷை ஜரிகை கரை, விலை ரூ. **36.**

கேட்லாக் இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
சில்க் அவுஸ், சென்னை.

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணுமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணுடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதறுஸ்.

ஜெர்மன் வைரக் கம்மல்.



அசல் வைரத்தையும் தோற்கடிக்கும் 7-கமலங்களுடனும் (Dimond-Extra) சவரன் பொன்னுக்குச் சமமான ஒருநாளும் கறுக்காத கனடியன் பொன்னுல் மிகவும் இலக்ஷணமாயும் உறுதியாயும் செய்யப்பட்டவை. ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் பெரிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 4. ஆண்பிள்ளைகளுக்குக் கடுக்கனும், சிறு பெண்களுக்கு கம்மலாயும் உபயோகிக்கக்கூடிய சிறிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 3. தபால் கூலி வேறு.

ஆலிவர் அண்டு கம்பெனி, 22-வது பீட், மதராஸ்.

நூது சூலைகளை போக்கடிக்கச் சிறந்தது : :

: இந்த ஔஷதத்தினுல் நல்ல சந்தானம் உண்டாகும்.:

அசோகவடி

என்னும்

சந்தான சிந்தாமணி

இதை லோகோபகாரமாக இங்கு பிரசுரித்திருக்கிறேம்.

சில ஸ்திரீகள் வீட்டு விலக்கம் வந்த உடனே அதோடு வயிற்று நோய் உண்டாகி அவஸ்தைப்படுவது இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. அதற்கு காரணம், ஸ்திரீகளின் கருக்குழியில் புழுக்களுண்டாகி அவ்வப்போது வித்தை புசித்து விடுவதினுலும் விபரீத சேர்க்கையாலுமே. இப்படிப்பட்ட வயிற்று நோயுடையவர்கள் இந்த பரம சிரேஷ்டமான ஔஷதத்தை 3 நாள் சாப்பிடும்பக்ஷத்தில் ஆறு வித கர்ப்ப தோஷங்களும் நீங்கி உடனே கர்ப்பம் தரிப்பது நிச்சயம். அநேக ஸ்திரீகளுக்கு கொடுத்து கர்ப்பம் உண்டாயிருப்பதால் இதை பகிரங்கப்படுத்தலானேம்.

விலை ரூ. 3. **எம். சுந்தரபாபு,**

ஆயுர்வேத மேடிக்கல் ஹால்,

31, வெங்கையர் தெரு, சென்னை.

அகஸ்தியர்

பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் எற்படுதல், தலையில் எற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் எற்படும் சகல|விதமான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்.

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

புதிய சரக்கு புதிய கடியாரம்.



"டிக்—டாக்"

வால் கிளாக்

இப்பொழுது தான் வந்தது.
மிக்க அழகுள்ளது.
காலத்திற்குசரியான மணியை
காட்டக் கூடியது.
முந்துங்கள்! முந்துங்கள்!!
முந்துங்கள்!!!
சுவரில் மாட்டக்கூடியது.
விலை 1-க்கு ரூ. 3 தான்.
தபால் செலவு வேறு.

விலாசம்:—
பீடர் வாச் கம்பெனி,
தபால் பெட்டி
நே. 27, மதராஸ்.

குறைந்த விலை! குறைந்த விலை!!

டெலியா

உலகப் பிரசித்தி பெற்ற எங்கள் டெலியா கைக்கெடியாரம், பொன், வெள்ளி, ரோல்ட்கோல்ட் கூடுகளில் கிடைக்கும்.

9 கியாரட் பொன் கேஸ் ரூ. 40.

14கியாரட்பொன் கேஸ் ரூ. 50.

18கியாரட்பொன் கேஸ் ரூ. 60.



ரோல்ட் கோட் (10-வருஷம் கெடாதது)ரூ.38.

வெள்ளி ரூ. 35.

இந்தக் கைக் கெடியாரங்கள் அழகு பெற்ற லிவர்மூவ்மென்று உடையவை. ஈரம் தட்டாதபடி உறையும் உடையவை. எந்தக்கால நிலையிலும் உபயோகிக்க லாம். கெட்டுப் போகாதது.

இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள்.

JALAL & SONS,
Rattan Bazaar Road,
MADRAS.

நல்ல சமாசாரம்

நாங்கள் உயர்ந்த புகையிலையினால் மிக்க குணமும் மணமும் உள்ள பட்டணம் பொடியும், ஆர், எஸ். சுகந்த மூக்குத்தூளும்,ராஜன் பரிமள வாசனைப் புகையிலையும் சிறந்த முறையில் விசேஷமாய் தயார் செய்து இந்தியா முழுதும் அனுப்பிவருவதுடன் கீழ்க்கண்ட சாமான்கள் நல்ல சரக்காயும் விலை சரசமாகவும் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சப்ளை செய்து வருகிறோம்.

வாசனை மிகுந்த அசல் காஜிபூர், பன்னீர், கல்கத்தா பரிமள சோப்புகள், வாசனை தைலம், அத்தர், பற்பொடி தேள் மருந்து, பரஹம்பூர் காரமஸாலா, ஜெர்மனி, கல்கத்தா, விசித்திரமான கலர் படங்கள், பீடி, சுருட்டு சிகரெட்டுகள் முதலியன எங்களிடம் கிடைக்கும்.

ரொக்கம் அல்லது வி. பி. பி. வெளியூர் ஆடர்களை உடனுக்குடனே கவனித்து தகுந்தவாறு அனுப்பப்படும். விலை விவரமடங்கிய புஸ்தகத்துக்கு எழுதினால் அனுப்புகிறோம.

பி. வி. ராஜன் & கம்பெனி,
44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,
மதராஸ்.

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

ரீஜ்பந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் தரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20 மாத்திரைகள்** ஸீசா **1-க்கு ரு. 2.** வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதராஸ்.

இதுவரையிலும் வாராதது! வெளியாகி விட்டது!!

(14 Ct. நிப்பு.)

சில்வர் கிங் பவுண்டன்பேனா பிரிடிஷ் மேட். இந்த பேனாக்கள் சொந்த ஆர்டர் மீது லண்டனில் இருந்து வரவழைக்கப் பட்டது. இதை உத்தியோகஸ்தர்களும் மாணவர்களும் உபயோகிப்பதற்கு வெகு அழகாய் இருக்கும். இதை எவ்விதமாய் வைத்துக் கொண்டு இருந்தாலும் இங்கி ஒழுகாது. எத்தனை நாள் உபயோகித்தாலும் எழுதும் முனை கெடாது. பென்சலினால் எழுதுவதுபோல் சுலபமாயும் சுத்தமாயும் இருக்கும். இவ்வித சரசமான விலைக்கு சில நாள் தான் கிடைக்கும். இதன் விலை 1-க்கு ரூ. 1-8-0

எம். மாசிலாமணி அண்டு கம்பெனி,
நெ. 1, வடமலைமேஸ்திரி வீதி. சவுக்கார்பேட்டை, மதராஸ்.

இளமையும் பலமும் வீரமும் வன்மையும்.

1924-ஹுல் பூனா இண்டியன் இண்டஸ்ட்ரியல் கண்காட்சியில் முதல் தரமான சர்ட்டிபிகேட் பெற்றுள்ளது.

காமகேசரி

என்னும் வீரிய விர்த்தி மாத்திரைகளினால் ஒரே மணி நேரத்தில் உண்டாகும் வீரமற்ற இளைஞரும் பலங்குன்றிய வயோதிகரும் சிற்றின்பசுகம் அடைய இதுவே மருந்து.

காம கேசரி பார்மஸி,
412, தங்கசாலை தெரு, சென்னை.

20 மாத்திரைகள்
விலை ரூபா ஒன்று.

அழகிய போட்டோப் படங்கள்.

கண்ணைக் கவரும் கலர்களில் ஜெர்மனியில் ஸ்பெஷல் ஆர்டருக்கு அச்சிட்டது.

(1) காசி விஸ்வநாத், (2) லக்ஷ்மி, (3) சரஸ்வதி, (4) கிருஷ்ணன், (5) ராமர் பட்டாபிஷேகம், (6) காளிங்க மர்தனம், (7) ஹர பார்வதி, (8) மகாத்மா காந்தி, (9) ஸி. ஆர். தாஸ், (10) திலகர், (11) சரோஜினி தேவி, (12) ரவிந்தர்நாத் டாகூர். நமது சந்தா நேயர்களுக்கு 12 படமும் ரூ. 1. மற்றவர்களுக்கு ரூ. 1-8.

சொற்ப காபிகளே கைவச மிருக்கிறது.

முந்துங்கள்.

லக்ஷ்மி ஆபீஸ்,
தபால் பெட்டி 99, சென்னை.

பாரிஸ் லேடிகளின் படுக்கை அறை அழகிய விநோத போட்டோ படங்கள்.

இது பார்ப்பவர்களுடைய மனதை பிரமிக்கச் செய்து இருதாரத்தாருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும்; இதில் ஆண் பெண்களின் விநோதமான போட்டோ படங்கள் பலவித நிறங்களோடு வெகு அழகாயிருக்கின்றன. இந்த போட்டோக்களை படுக்கை அறையில் வைத்தால் வெகு சுந்தரமாயிருக்கும். ஒவ்வொரு போட்டோக்களின் ரகஸ்யத்தை இதில் எழுத முடியாதென சுருக்கிவிட்டோம். 12 ரகம் செட் 1-க்கு ரூ. 3—0—0

விலாசம் :—ஈஸ்டு இன்டியா நாவல்டீ ஸ்டோர்ஸ்,
19-வது பீட், சௌகார்பேட்டை, மத்ராஸ்.

அப்பளம்! அப்பளம்!!

இது பிராம்மணர்களால் தயார் செய்யப்பட்டது. மிகவும் சுத்தமாயிருக்கும். நமக்கு காய்கனிகளால் உண்டாகும் செலவைக் குறைக்கவல்லது. முதலில் கொஞ்சமாய் ஆர்டர்கொடுத்துக் குணத்தை அறியுங்கள்.

விலை விவரம்.

முதல்தரம் 100-க்கு ரூ. 2, 2-ந்தரம் 100-ச்கு ரூ. 1 8, 3-ந்தரம் 100-க்கு ரூ. 1.

அதிகமாய் ஆர்டர் செய்வோர்கள் முன்பணம் அனுப்பவேண்டும்.

R. S. I. & Co.,
துளசிங்கப்பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

10341

இரவில் மணி காட்டும்
8-மூலை ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.



இரவில் மணி பார்ப்பதற்கு இக்கெடியாரத்திற்கு விளக்கு வெளிச்சம் வேண்டியதில்லை. இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை நெம்பர்களிலும் முட்களிலும் சேர்த்திருப்பதால் இரவில் மணி நன்றாய்த்தெரியும். இருட்டு எவ்வளவு கருக்கலாயிருக்குமோ அவ்வளவிற்கும் எண்கள் நன்றாய்த் தெரியும். இது வெகுகாலம் நன்றாய் போகக்கூடியது. உரத்த சாமான்களால் செய்யப்பட்டது. இது சரியான டைம் காட்டக்கூடியது. இதை பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். வெகு அழகாய் இருக்கும்.

82-நெ. 8-மூலை நிக்கல் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் தோல் பட்டையுடன் ரூபா **8.** 8-மூலை பொன்கிள்ட் கொடுத்த ரிஸ்லெட் ரேடியம் கெடியாரம் தோல்பட்டையுடன் சேர்ந்தது விலை ரூபா **9.** பெரிய கேட்லாக் வேண்டியவர்கட்கு இனாமாய் அனுப்பப்படும்.

ஜெனரல் இண்டியன் வாட்ச் டிபோ,

சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

Night Writing light or Fountain pen light.

பவுண்டன் பேனாவில் எலக்டிரிக் லைட். இதுவரை இங்கிலாந்து அமெரிக்கா தேசத்தார் கண்டு பிடிக்கவில்லை. ஜெர்மனியில் கண்டு பிடித்தது முதல் தடவை 72-பேனா வந்தது. எழுதமுடியாத பேனாவை பவுண்டன் Pen லைட் என்று விற்றுவந்தார்கள். எங்கள்பேனா விளக்கு இல்லாமல் எழுதமுடியும். 14 காரட் நிப்பு உள்ளது. நிக்கல் முழுதும் கிளிப்பு உண்டு. வெளிச்சம் 20-அடிக்கு கண்கூசும்படி தோன்றும் பல்புடையது. இதை வாட்ச் பாகெட்டில் கிளிப் செய்து விட்டு நீங்கள் 10-பேர்நடக்க போதுமான வெளிச்சம் தரும். இதை தபால் ஆபீஸர்கள், போலீஸ் ஆபீஸர்கள், பாரஸ்ட் ஆபீஸர்கள், ரயில்வே ஆபீஸர்கள், ரெவினியூ டிபார்ட்மெண்ட் டிராவலிங் சர்கூட் போகிறவர்கள் வைத்துக்கொண்டால் இங்கிப்பாட்டல் தேவையில்லாமல் எழுதவுதவும் படிக்கவுதவும் நடக்கவுதவும். கம்பிளீட் பேனா எலெக்டிரிக் பிடிங் சேர்த்து பாட்டிரி உள்பட விலை 3—0—0. 4-பேனாவுக்கு ஆர்டர்வாங்கி அனுப்பும் ஏஜெண்டுக்கு 1 பேனா இனாமாய் அனுப்பப்படும் எக்ஸ்ட்ராபாட்டிரிக்கு அணா 8.

எலக்டிரிக் பாக்கெட் லாம்பு எம்போரியம்

357, மவுண்ட்ரோட், மதராஸ்.

நம்பிக்கையுள்ள வர்த்தகஸ்தலம்.

கம்பெனி

ஸ்தாபித்த வருஷம் 1900.

கராச்சி பட்டுப் புடவைகள்.

தற்கால நாகரீகத்திற்கேற்றது. அழகான சரிகைக்கரைகள். சகல விதமான கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1, 18 முழ புடவை 1க்கு ரூ. **55**.
நெ. 2, ,, ,, ரூ. **45**.

கராச்சி ரவிக்கை 1க்கு ரூ. 3-8.

பெரிய சேட்லாக் இனம்.

கே. எஸ். முத்தையா கோ.,

சில்க் அவுஸ், காசி.

பிராஞ்சுகள் : சென்னை, திருநெல்வேலி.

Printed by M.A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.